அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

திசைப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2045 புரட்டாதி 21 செவ்வாய்க்கிழமை (07.10.2014) பக்கங்கள் 20 ஓசை – 007

# யுத்தப் பாதிப்பிற்குள்ளான குடும்பங்களுக்கு இழப்பீடு

## கிளிநொச்சியில் ஜனாதிபதி வழங்குவார்

(கொழும்பு)

யுத்தத்தினால் கடுமையாக பாதிக்கப்பட்ட சுமார் 1500 குடும்பங்களுக்கு எதிர்வரும் 12 ஆம் திகதி கிளிநொச்சியில் இழப்பீட்டுத் தொகை வழங்கப்படவுள்ளது.

கிளிநொச்சிக்கு விஜயம் செய்யும் ஜனாதிபதி தலைமையில் இந்த இழப்பீடு வழங்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இதற்கான சகல ஏற்பாடுகளையும் வடக்கிலுள்ள அனைத்து மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களும் மேற்கொண்டுள்ளன.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடகிழக்கு மக்களுக்கு இழப்பீடு வழங்கவென அரசாங்கம் இவ்வருடம் 300 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

யுத்தத்தின் போது கை, கால்கள் இழந்த மற்றும் வீடு, சொத்துக்களை இழந்த பொது மக்களுக்கு இவ்வாறு இழப்பீடு வழங்கப்படுவதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த இழப்பீட்டுத் திட்டத்தை இவ்வருட இறுதிக்குள் நிறைவு செய்ய அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதன் ஒரு கட்டமாக வட பகுதிக்கு விஜயம் செய்யவுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் எதிர்வரும் 12 ஆம் திகதி கிளிநொச்சி - இரணைமடு பகுதியில் இழப்பீடு வழங்கும் நிகழ்வொன்று இடம்பெறவுள்ளதாகவும் அதன்போது யுத்தத்தால் பாதிக்கப்பட்ட 1500 குடும்பங்களுக்கு 130 மில்லியன் இழப்பீடு பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

19 ஆம் பக்கம் பார்க்க

## துவாரகேஸ்வரன் கைதாகி விடுதலை

(யாழ்ப்பாணம்)

மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தியாகராஜா மகேஸ்வரனின் சகோதரரான தியாகராஜா துவாரகேஸ்வரன் யாழ். பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார்.

நல்லூர், செட்டித்தெரு வீதியில் வைத்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு யாழ். பொலிஸாரினால் இவர் கைது

19 ஆம் பக்கம் பார்க்க

## கோபியின் மனைவிக்கு நாட்டைவிட்டு வெளியேற தடை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் புதிய தலைவர் என்று கூறப்பட்டு கடந்த ஏப்ரல் மாதத்தில் அநுராதபுரம் - பதவிய காட்டுப்பகுதியில் வைத்து சுட்டுக் கொலைசெய்யப்பட்ட கோபி என்றழைக்கப்படும் கஜீபனின் மனைவியான கஜீபன் சர்மிளா, நாட்டிலிருந்து வெளியேறுவதற்கு தடைவிதிக்கப்பட்டது.

அவர், கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக சுவிட்ஸர்லாந்துக்கு கடந்த ஞாயிற்றுக் கிழமை

19 ஆம் பக்கம் பார்க்க

# யாழ். குடாவில் குடிநீர் விநியோகம் செயலகத்தில் நேற்று மாநாடு



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் மக்களின் குடிநீர்த் தேவையை நிவர்த்தி செய்யும் முகமாக முன்னெடுக்கப்பட வேண்டிய செயற்றிட்டங்களுக்கு அனைவரும் பூரண ஒத்துழைப்பையும் ஒத்தாசையையும் வழங்க வேண்டுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தீவகம் உள்ளிட்ட யாழ். மாவட்டத்தில் நிலவும் குடிநீர் தட்டுப்பாட்டுக்கு தீர்வு காணும் வகையில் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அதன்பிரகாரம் கிணறுகள், குளங்கள் மற்றும் நீர்நிலைகள் என்பவற்றை திருத்தம் செய்வது மற்றும் துப்புரவு செய்வதற்கு 63 மில்லியன் ரூபாவுக்குரிய திட்டங்கள் தொடர்பாக மாவட்ட

19 ஆம் பக்கம் பார்க்க

# கூட்டமைப்பை தனிக்கட்சியாக பதிவு செய்யுமாறு கோரிக்கை

## மாவைக்கு சுரேஷ் பதிலடி



(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரைவில் தனிக்கட்சியாக பதியப்பட வேண்டுமெனவும், அதுவே ஒட்டுமொத்த தமிழ் மக்களின் கோரிக்கையாகவும் உள்ளது எனவும் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன்.

கடந்த சனிக்கிழமை கோப்பாய் தொகுதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளைக்குழுவை தெரிவு

19 ஆம் பக்கம் பார்க்க

# எதிரும் புதிருமான ஆர்ப்பாட்டம் யாழ். நகரில் நேற்று பரபரப்பு



(யாழ்ப்பாணம்)

ஆசிரியர் தினமாகிய நேற்று ஆசிரியர்களின் பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் ஆர்ப்பாட்டப் போராட்டம் ஒன்று யாழ். பஸ் நிலையம் முன்பாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நேற்றுப் பி.ப. 2.00 மணிக்கு ஆரம்பமாகிய இவ் ஆர்ப்பாட்டப் போராட்டத்தில் பெருமளவான ஆசிரியர்கள் பல்வேறு சுலோகங்களைத் தாங்கியவாறும் சுலோகங்களை உரக்க கத்தியவாறும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழில் சுற்றுநிருபத்தை வெளியிடு, அதிபர்களுக்கான இடமாற்ற சபையை நிறுவு, பாடசாலைகளில் பாதுகாப்புத் தரப்பினரது தலையீட்டை நிறுத்து, பலாலி ஆசிரியர் கலாசாலையை இயங்க வை, ஆசிரிய உதவியாளர்களுக்கு ஆசிரிய நியமனத்தை வழங்குக போன்ற பல்வேறு சுலோகங்களைத் தாங்கியவாறு அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் இந்தப் போராட்டத்திற்கு தமிழ்த் தேசிய

19 ஆம் பக்கம் பார்க்க

# உறவுகளை வலுப்படுத்துவதற்கு அமெரிக்காவுடன் உயர்மட்டப் பேச்சு

## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)


அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள உயர்மட்ட அதிகாரிகளுக்கும் இலங்கை வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளுக்குமிடையில் தொடர்ச்சியான பேச்சுக்கள் இடம்பெற்று வருகின்றன.


அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஜோன் கெரியுடன், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நியுயோர்க்கில் இவ்வாறான ஓர் உயர்மட்ட சந்திப்பே நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறெனினும் அமெரிக்கா இலங்கை குறித்த நிலைப்பாட்டை தளர்த்தியுள்ளதாகவோ அல்லது கெரியுடனான சந்திப்புக் குறித்தோ அரசாங்கம் எவ்விதமான உத்தியோகபூர்வமான அறிக்கைக

19 ஆம் பக்கம் பார்க்க





கிளிநொச்சி மாசார் அ.த.க.பாடசாலையின் பரிசளிப்பு விழா நிகழ்வில் பிரதம விருந்தினர் கிளிநொச்சி வலய பிரதிக்கல்விப்பணிப்பாளர் சு.ஸ்ரீகுமரன், சிறப்பு விருந்தினர் பளை கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.ஆனந்தசிவம், கௌரவ விருந்தினர் ஆரம்ப கல்வி ஆசிரிய ஆலோசகர் சிவபாலன் ஆகியோர் அழைத்து வரப்படுவதையும், மாணவன் ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும், பரிசு பெற்ற மாணவர்களையும்காணலாம் (63)

# வீதி அபி.அதிகாரசபை தொடர்ந்து பாராமுகம்

## நவாலி விவசாயிகள் 350 பேருக்கு அவலம்

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறுப்பற்ற செயலினால் நவாலி வழுக்கையாற்றுப் படுக்கையில் உள்ள 350 விவசாயிகளின் விவசாயம் முற்றாக அழியும் நிலைக்கு தள்ளப்படுகின்றது.

நவாலி வடக்கு விவசாயிகள் சம்மேளனத்தலைவர் இ.வன்னியசேகரம் மற்றும் உறுப்பினர் பொ.கிருபானந்தன் ஆகியோர் இவ்வாறு தெரிவித்தனர்.

மேற்படி விடயம் தொடர்பாக மேலும் அவர்கள் தெரிவிக்கையில்,

வலி.தென். மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வழுக்கையாற்று படுக்கைக்கு உட்பட்டதாக நவாலி சங்கரத்தை வீதி உள்ளது. மேற்படி வீதிப் புனரமைப்பின் போது வீதி அபிவிருத்தி அதிகாரசபை பிரதான வீதி அருகே இருந்த வாய்க்காலை முழுமையாக மூடி மண் நிரப்பி வீதி அகலிப்பு செய்துள்ளனர்.

இதனால் நவாலி கல் ஒழுங்கை ஊடாக பாய்ந்து வரும் மழை நீர் வெளியே செல்வதற்கு வாய்க்கால் இன்றி முழு நீரும் வயலுக்குள் சென்றுள்ளதால் விவசாயிகளின் நெற்பயிர் முளை வெள்ளத்தால் அழிவடைந்து செல்கின்றது. இதனால் 350 விவசாயிகள் முழுமையாக பாதிப்படையவுள்ளதாகவும். 2500 இற்கும் மேற்பட்ட நெற்பரப்பு வயல் அழியும் தறுவாயில் உள்ளதாக சம்மேள தலைவர், உறுப்பினர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மேற்படி விடயம் தொடர்பாக வலி.தென்மேற்கு பிரதேச செயலர் ஊடாக வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு அறிவித்தும்கூட இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை, நவாலி வடக்கு விவசாய சம்மேளன பொருளாளர் பறின்ஸ் பிலிப் கடந்த இருவாரங்களுக்கு முன்னர் சம்பந்தப்பட்ட சகல தரப்பு அதிகாரி களின் கவனத்திற்கு ஏற்கனவே கொண்டுவரப்பட்டும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படாதது விவசாயிகள் மத்தியில் கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

கல்வி போதித்த ஆசான்களை

# கல்வி முதுமாணி மாணவர்கள் 100 பேர் பாராட்டி ஆசி பெற்றனர்

யாழ்.பல்கலைக்கழக கல்வி முதுமாணி கற்கையை பூர்த்தி செய்யும் மாணவர்கள் 100 பேர் இணைந்து தமது விரிவுரையாளர்களை வாழ்த்தி ஆசிபெற்றனர்:

யாழ்.பல்கலைக்கழகத்தில் 10 ஆவது பிரிவு கல்வி முதுமாணி மாணவர்களின் விரிவுரைகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை நிறைவு பெற்றது. இதில் கல்வி பயின்று விரிவுரைகளை நிறைவு செய்த 100 மாணவர்கள் தமக்கு இதுவரை காலமும் விரிவுரைகளையும் மற்றும் தற்போதனைகளையும் வழங்கிய பேராசிரியர்கள், சிரேஷ்ட விரிவுரையாளர்களை ஆசிரியர் தினத்தில் வாழ்த்தினர்.

இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக முதுமாணி கற்கை நெறி தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அனுஷா சத்தியசீலன், இணைப்பாளர் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஜெயலக்ஷ்மி இராசநாயகம், பேராசிரியர் எம்.சின்னத்தம்பி ஆகியோரிடம் ஆசி பெற்றதுடன், சர்வதேச ஆசிரியர் தினத்தில் அவர்களுக்கு சிறப்பு பரிசில்கள் வழங்கியும் கௌரவித்தனர்.

இந்நிகழ்வில் சிரேஷ்ட விரிவுரையாளர்களான பேராசிரியர் ஜே.சின்னத்தம்பி, கலாநிதி த.கலாமணி ஆகியோர் வருகைதராத நிலையிலும் அவர்களது கல்வி சேவையினை மாணவர்கள் பாராட்டி வாழ்த்தினர்.

# 8 பிள்ளைகளைப் பெற்ற தாய் அனாதையானதால் மகள் தூக்கு

## ஆனைக்கோட்டையில் நேற்று பரபரப்பு

(மானிப்பாய்)

தனது தாய் அனாதையாக திரிவதை தாங்க முடியாத மகள் தூக்கில் தொங்கி மரணிக்கும் தறுவாயில் பிள்ளைகளால் காப்பாற்றப்பட்டார்.

இச்சம்பவம் நேற்றுக் காலை ஆனைக்கோட்டை சோமசுந்தரம் வீதியில் இடம்பெற்றது. மேற்படி சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

பெற்ற தாய் வீதியில் அனாதையாக திரிவதை தாங்க முடியாத மகளான 5 பிள்ளைகளின் தாயார் தூக்கில் தொங்கி தற்கொலை முயற்சியில் ஈடுபட்ட போது, பிள்ளைகளினால் காப்பாற்றப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஆனைக்கோட்டை சோமசுந்தரம் வீதியைச் சேர்ந்த பரமேஸ்வரன் விமலாதேவி (வயது 46) என்ற 5 பிள்ளைகளின் தாயாரே நேற்றுக் காலை இவ்வாறு தூக்கில் தொங்கிய வேளை காப்பாற்றப்பட்டார்.

எட்டுப் பிள்ளைகளை பெற்ற 85 முதிர்வயதான விமலாதேவியின் தாயாரை ஏனைய பிள்ளைகள் கவனிக்கவில்லை என்றும், மகளுடன் இருந்த தாயார் பின்னர் ஏதோ காரணத்திற்காக வீதியில் அனாதையாக திரிய முயன்றுள்ளார். தாயார் இவ்வாறு அனாதையாக திரிவதை கண்டு கவலை கொண்டிருந்த மகள் நேற்று வீட்டில் அறைக்குள் தூக்கில் தொங்கிய நிலையில் காப்பாற்றப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். மேற்படி சம்பவம் தொடர்பாக மானிப்பாய் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (25)

# சங்கா. வைத்தியரின்மை தினமும் 100 பேர் பாதிப்பு

## தலைவர் குணசிறி கவலை

(சங்கானை)

பல் வைத்தியர் இன்றி சங்கானை பிரதேச வைத்தியசாலை உள்ளது. இதனால் தினமும் 50 முதல் 100 பேர் வையான பல் நோயாளர்கள் வைத்தியசாலைக்குச் சென்று திரும்பும் அவலம் ஏற்படுகின்றது.

இவ்வாறு சங்கானை பட்டின அபிவிருத்தி சபை தலைவர் கே.குணசிறி கவலை தெரிவித்துள்ளார். மேற்படி விடயம் தொடர்பாக தலைவர் கே.குணசிறி நேற்று முரசுக்கு தெரிவிக்கையில்,

கடந்த இருவாரங்களாக பல் வைத்தியர் இன்றி சங்கானை வைத்தியசாலை இயங்குவதாகவும், பல் வைத்திய சேவையைப் பெறும் நோயாளர்கள் பெரும் ஏமாற்றத்துடன் திரும்பி வேறு வைத்தியசாலையை நாடுவதாகவும் தெரிவித்தார்.


மேற்படி விடயம் தொடர்பாக மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரனின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டும் பயனற்ற நிலை தொடர்கின்றது என தலைவர் கே.குணசிறி மேலும் தெரிவித்தார்.

# போலி தங்கம் விற்பனை நால்வருக்கு விளக்கமறியல்

போலித்தங்கம் விற்பனை செய்ய முயன்றபோது கைது செய்யப்பட்ட நான்கு நபர்களையும் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை மாலை நாவற்குழிப் பகுதியில் யாழ். பிரதிப்பொலிஸ்மா அதிபரின் கீழான புலனாய்வுப்பிரிவினருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம், 3 கிலோ ஈயம் மற்றும் 2 கிலோ தங்க மூலாம் பூசப்பட்ட நகைகளை விற்பனை செய்ய முயன்ற நால்வரை புலனாய்வுப் பிரிவினர் கைதுசெய்து யாழ். பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

குறித்த 4 பேரையும் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதியின் வாசஸ்தலத்தில் ஆஜர்ப்படுத்திய போது, மேற்படி நால்வரையும் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார். (25)



இனிய ஹஜ் பெருநாள் துவா பிரார்த்தனை, தொழுகை நிகழ்வுகள் நேற்று யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரி மைதானத்தில் யாழ். மாவட்ட உலமாசபையின் தலைவர் மௌலவி எம்.எம்.ஆசிஸ் தலைமையில் நடைபெற்றது. சிறப்புசொற்பொழிவுகளை யாழ்.மாவட்டத்தின் ஜும்மா பள்ளியின் தலைவர் மௌலவி எம்.ஆர்.முஜாஹித் நிகழ்த்தினார். இந்நிகழ்வில் பெருந்திரளான இஸ்ஸாமிய மக்கள் கலந்துகொண்டு தொழுகையில் ஈடுபடுவதனைக் காணலாம். (25)

சிறு விளம்பரம்

டயானா பிளாஸ்ரிக் இடமாற்றம்

இல.108 பலாலி வீதி
யாழ்ப்பாணம்.
(இலுப்பையடி சந்தி
அருகாமை)
021 222 8680,
077 592 5088.
(C/3800)

# கன்ரர் பெட்டியில் இயங்கும் பூநகரி பலநோக்கு கூ. சங்கம்

(பூநகரி)

பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நாலாம் கட்டைக் கிளை கன்ரர் வாகனப் பெட்டி ஒன்றிலேயே நீண்ட காலமாக இயங்கி வருவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கன்ரர் வாகனப் பெட்டிகளை சில நிறுவனங்கள் நிரந்தரக் கட்டடம் அமைக்க முன்னர் தற்காலிகமாகப் பாவனையில் வைத்திருந்தாலும் அவை நூற்றுக்கு நூறு வீதம் பாதுகாப்பானதென கொள்ள முடியாது என தெரிவிக்கும் மக்கள், சுன்னாகம் பகுதியிலும் கட்டடம் அமைப்பதற்கு முன்பாக தனியார் வங்கி ஒன்றும் இவ்வாறு இயங்கி வந்ததாக தெரிவிக்கின்றனர்.

மேலும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் பல இலட்சம் பெறுமதியான உலருணவு மற்றும் பால்மா போன்ற நானாவிதப் பொருட்கள் களஞ்சியப்படுத்துவதற்கு கன்ரர் பெட்டி எந்தளவுக்கு உதவும் என மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

அதேவேளை, மக்கள் கூடி நின்று பொருட்களைப் பார்வையிடவும் மழை நேரங்களில் ஒதுங்கவும் முடியாத நிலைமை ஏற்படுவதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது தொடர்பாக கவனமெடுத்து பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு கட்டடம் அமைத்து வழங்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர். (68)

# நவீன சந்தைக் கட்டடத்தில் அதிகரிக்கும் நாய்களின் தொல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். சின்னக்கடை நவீன சந்தைக் கட்டடத்தில் பொருத்தப்பட்டுள்ள வாசல் கேற் கதவுகள் துருப்பிடித்து பழுதடைந்துள்ளதால் நாய்கள் உள் நுழைந்து அசிங்கப்படுத்தி வருவதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் கட்டி மூடி வைக்கப்படாமல் பரப்பி வைத்துச் செல்லும் வெங்காயம் போன்ற மரக்கறி வகைகளில் நாய்கள் அசிங்கப்படுத்துவதால் பெரும் நஷ்ட மேற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நஷ்டத்தை எதிர்நோக்கும் வர்த்தகர் கள் அவற்றைக் கழுவி துப்புரவு செய்து விற்பனை செய்வதால் பக்றீரியா தொற்று ஏற்பட்டு பாவனையாளர் பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இந்த நவீன சந்தைக் கேற்கள் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களிடம் பல தடவை தெரிவித்தும் கடந்த ஐந்து வருடங்களாக திருத்தப்படாமல் இருந்து வருவதாக வியாபாரத்தில் ஈடுபடுவோர் விசனம் தெரிவித்துள்ளனர். (68)

# சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



(பருத்தித்துறை)

நீதியமைச்சர் ரவூப்ஹக்கீமினால் பாலகிருஷ்ணன் ரகுநாதன் யாழ். குடாநாட்டுக்கான சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் பருத்தித்துறை மாவட்ட நீதிபதி ஜெ. கஜநிதிபாலன் முன்னிலையில் அண்மையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவரான இவர், ஆசிரியராக, அதிபராக, கோட்டக் கல்விப் பணிப்பாளராக, கல்வித் திணைக்களத்தில் நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக சேவையாற்றியுள்ளார்.

அத்துடன் வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம், மேலைப்புலோலி சதாவதானி கதிரைவேற்பிள்ளை சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றின் தலைவராகவும், புலோலி தென் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவராகவும், வடமராட்சி வடக்கு அரச ஓய்வூதியர்களின் நம்பிக்கை நிதியத்தின் செயலாளராகவும், புலோலி தென் மேற்கு கந்த முருகேசனார் சனசமூக நிலைய உப செயலாளராகவும், புலோலி மத்தி அத்தியடிப்பிள்ளையார் கோவில் உப தலைவராகவும் சமூகப் பணியாற்றி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (18)



கைதடி சரஸ்வதி முன்பள்ளியில் அண்மையில் நடைபெற்ற சிறுவர் தின நிகழ்வின்போது.... (51)

# தமிழற்ற அரசியல் பிரச்சினையை எப்பிடித் தீர்க்கலாம் – 01




'தமிழற்ற அரசியல் பிரச்சினையை எப்பிடித் தீர்க்கலாம் எண்டு எழுதிறதை விட்டிட்டு, சும்மா மற்றவையின்ரை குறைகளைப் பற்றிக் கதைச்சுக்கொண்டிருக்கிறியள் – மன்னிக்கோணும் மற்றவையின்ரை குறைகளைப் பற்றி எழுதிக்கொண்டிருக்கிறியள்' எண்டு நேற்றைக்கு இரவு ஒரு நண்பர் தொலைபேசியில வந்து கிழி கிழியெண்டு கிழிச்சார்.

'ஆயிரத்தெட்டு இணையத்தளங்களிலயும் முப்பது நாப்பது பேப்பர்களிலயும் நானூறு, ஐநூறு அரசியல் ஆய்வாளர்கள் எதையெதையெல்லாமோ எழுதித் தள்ளுகினம். ஒருத்தர் கூட உருப்படியாக ஒரு தீர்வையும் பற்றி எழுதிறதாகக் காணேல்ல.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு தீர்வுத்திட்டம் பற்றி அக்கறையே இல்லை. அதுக்குத் தீர்வுத்திட்டம் எண்டால் என்ன எண்டும் தெரியாது. சும்மா இப்பிடியே 'ஒண்டும் சரிவராது' எண்டு சொல்லிக்கொண்டு திரியுது.

அதைப்போலத்தான் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின்ரை தமிழ்த்தேசிய விடுதலை முன்னணிக்கும் தீர்வைப்பற்றி சரியான விளப்பம் கிடையாது. உருப்படியாகப் பதின்மூன்றாவது திருத்தத்தையே நடைமுறைப்படுத்தக் காணம். அதுக்குள்ள சுயாட்சி, தனித்தமிழீழம் எண்டு பெரிய கதைகள் வேற.....

உருத்திரகுமாரின்ரை நாடுகடந்த தமிழீழத்தைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். அது பானைக்கு வெளியில அரிசியைப் போடுற மாதிரி தோதுப்படாத காரியங்களைப் பார்த்துக்கொண்டிருக்குது.

இப்பிடி பத்துப்பன்னிரண்டு அமைப்புகளில இருந்து கொண்டு ஆளாளுக்கு ஒவ்வொரு மாதிரி அபிப்பிராயம் சொல்லிக்கொண்டிருக்கினமே தவிர, எல்லாரும் ஒண்டாகக் கூடி ஒரு முடிவெடுக்கிறதைப்பற்றிச் சிந்திக்கிறதாகவும் காணேல்ல. உருப்படியாக ஒரு தீர்வை முன்மொழிஞ்சதாகவும் இல்லை.

இந்தச் சிறப்பிலதான் தமிழற்ற அரசியல் போய்க்கொண்டிருக்குது.

ஒருத்தரும் என்ன தீர்வு பொருத்தம் எண்டோ, எப்பிடியான தீர்வு சாத்தியமாகும் எண்டோ சொல்லிறதாக் காணேல்ல. நீங்களும் இதைப்பற்றி எழுதாமல் எல்லாரைப்பற்றியும் குறை சொன்னால்..?????' எண்டு ஒரு போடு போட்டார் நண்பர்.

நண்பர் சொல்லிறதில ஞாயமுண்டு.

எப்ப பார்த்தாலும் எதுக்கும் எல்லாரையும் குறைசொல்லிப் பழக்கப்பட்ட பரம்பரைக் குணமோ தெரியேல்ல. நானும் மனம் பொறுக்காமல் சம்பந்தப்பட்ட ஆட்களை எல்லாம் போட்டு வாங்கியிருக்கிறன்.

சனங்களை ஆர்தான் பேய்க்காட்டினாலும் பொறுக்கேலாது.

அதைத் தமிழர் செய்தால் என்ன சிங்களவர் செய்தால் என்ன, சீனாக்காரனோ அமெரிக்கக்காரனோ செய்தாலும் நான் எதிர்ப்பன்.

நடக்கவே முடியாத சங்கதிகளைப் பற்றிச் சனங்களிட்ட பொய்யாக நம்பிக்கையை விதைச்சுப்போட்டு, அதை ஒப்பேத்தாமல் முழிசிக்கொண்டிருக்கிற தமிழ் அரசியல் தலைமைகள், தங்கட பிழையை மறைக்கிறதுக்குத்தான் அரசாங்கத்தைக் குறை சொல்லிறது.

இந்த உண்மையைச் சுட்டிக்காட்டிற ஆட்களையும் துரோகிப்பட்டியல்ல தூக்கிப் போட்டிடுவினம்.

சரி, இதை விடுவம்.

இப்ப இந்த அரசியல் பிரச்சினைக்கு என்ன தீர்வை வைக்கலாம்? எதைக் கேட்கலாம்? எது சாத்தியமாகும்? இதை ஆர் செய்யிறது? இதில என்ன பிரச்சினைகள் எல்லாம் இருக்கு? எண்ட ஆயிரம் கேள்விகளைப்பற்றி நாங்கள் பார்ப்பம்.

இதைப்பற்றி நீங்களும் உங்கட அபிப்பிராயத்தைச் சொல்லலாம்.

ஏனெண்டால், இதெல்லாம் தனிய ஒரு ஆள் தன்ரை தனிப்பட்ட எண்ணத்தில செய்யிற காரியம் இல்லை. நாலு பேருக்கு நாலு விதமான அபிப்பிராயம் இருக்கும். அதையும் நாங்கள் பாக்கவேணும். அதுதான் ஜனநாயக முறைக்குச் சரியானது. மற்றவையின்ரை அபிப்பிராயங்களுக்கு மதிப்பளிக்கவேணும்.

ஆனால், அது பொருத்தமானதாகவும் நடைமுறைக்கு ஒத்து வரக்கூடியதாகவும் இருக்கோணும்.

எங்கட ஆட்களில ஒரு பழக்கமிருக்கு. நடக்க முடியாத விசயங்களைப் பற்றியே கதைச்சுக்கொண்டிருக்கிறது. செய்ய முடியாத காரியங்களைச் செய்யச்சொல்லிக் கேட்கிறது....

இந்தமாதிரியான குணங்களை முதலில நாங்கள் விட்டுத் தள்ளவேணும்.

நாங்கள் நல்ல ஒரு தீர்வைக் காண வேணும் எண்டால், எல்லாத்துக்கும் முதல், அதுக்கு எங்களைத் தயார்ப்படுத்த வேணும்.

பயிரை நடுகிறதுக்கு முதல் நிலத்தைக் கொத்தியோ உழுதோ பண்படுத்திற மாதிரி எங்கட மனங்களையும் மூளையையும் நாங்கள் பண்படுத்தி வைச்சிருக்க வேணும்.

அப்பதான் நாங்கள் எதையும் புதிதாகச் சிந்திக்கலாம்.

பழைய குப்பைகளை வைச்சுக்கொண்டு நாங்கள் எதையும் செய்யேலாது.

விரதத்துக்கு வீட்டைக் கழுவிற மாதிரி எங்கட சிந்தனையையும் நாங்கள் கழுவித் துப்புரவாக்கி வைச்சால்தான்... புதிசாக எதையாவது செய்யலாம்.

தீர்வைக் காணப்போறம் எண்டால்.... அது ஒரு புதிய விளைச்சல்தானே.

அந்த விளைச்சலை எப்பிடிக் காணுறது எண்டு பார்ப்பம்....

சேமிக்க வேண்டிய நேரத்தில் செலவு செய்யாதீர்கள். செலவு செய்ய வேண்டிய நேரத்தில் சிக்கனம் செய்யாதீர்கள். -செனாகா

தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## ஆயுதத் தீட்டு நாடகம்!

தமிழரசுக் கட்சியினரின் "ஆயுதமேந்திய பெடியள்" மீதான தீட்டு மனோபாவம் பற்றி மேலும் சில விசயங்களைப் பேசவேண்டும்.

கடந்த சனிக்கிழமைக் கூட்டத்தில் வடக்கு முதலமைச்சர் விக்கினேஸ்வரன் அவர்கள் சிவசக்தி ஆனந்தனிடம் வெளிப்படையாகக் கூறியது போன்றே ஒரு வருடத்துக்கு முன்னர் தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனும் ஒரு பத்திரிகைப் பேட்டியில் ஆயுதப் பெடியளை இழிவாகச் சித்தரித்துக் கருத்துக்களைச் சொல்லியிருந்தார்.

ஆயுதப் போராட்டத்திற்குப் பெடியளைக் கொம்புசீவி விட்டது மட்டுமல்லாமல், பிறகு அதனால் நிகழ்ந்த உயிரிழப்புகளை நிறுத்த எந்தவொரு கட்டத்திலும் ஒரு சிறு முயற்சி தன்னும் இவர்கள் மேற்கொண்டது கிடையாது.

ஆயுதமேந்திய இளைஞர்களும் மக்களுமாக பல்லாயிரக்கணக்கானோர் செத்தும், சமூகம் சீரழிந்தும், அழிவுகள் அவலங்களுக்குள் அல்லாடிய போதெல்லாம் இந்தத் தலைவர்கள் உசுப்பேற்றும் வீரப் பேச்சுக்களைப் பேசிக்கொண்டு பாராளுமன்றப் பதவிகளை விடாமல் அனுபவித்து வந்தவர்கள்.

பேரழிவு நிகழாமல் முன்காத்திருக்கக் கூடிய சந்தர்ப்பங்கள் வாய்த்த போதெல்லாம், அந்தத் தீர்வுகளைப் புறக்கணித்தும், சிங்களக் கட்சிகள் தீர்வு நகல்களைக் கொளுத்தும்போது அவற்றுக்கு ஆதரவாக நின்றும், நம் சமூகம் பாழ்நிலைக்குள் வீழ்வதை இரக்கமேயில்லாமல் வேடிக்கை பார்த்து வந்தவர்கள்.

ஆயுதப் போரை உக்கிரமாக நடத்திய புலிகளை ஏகப்பிரதிநிதிகளாக ஏற்றுப் பாராளுமன்றத்தில் முழக்கம் செய்தவர்கள், ஆயுதப் பெடியளால் கிடைத்த எம்பிப் பதவிகளை அவர்களது அலுவலக வாசல்களில் காத்திருந்து கையேந்திப் பெற்றுக் கொண்டவர்கள்.... இப்போது ஆயுதமேந்தியவர்கள் அசிங்கம் என்றும் தங்களைப் புனிதம் என்றும் காட்டிக்கொள்ள முற்படுகிறார்கள்.

இவர்களது கட்சி சார்பில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் சிறிதரன் இப்போதும், என்னுடைய ஆத்மார்த்த தலைவர் பிரபாகரன் என்கிறார். தமிழரசுக் கட்சியின் மாகாண சபை உறுப்பினராக இருக்கும் சிவாஜிலிங்கம் புலிகளின் வழியே தன்வழி என்று தொடர்கிறார்.

அவ்வளவு ஏன், முதலமைச்சர் விக்கினேஸ்வரன் உட்பட தமிழரசுத் தலைகளாகப்பட்ட பலரும் மாவீரர் தினத்துக்கு விளக்குக் கொளுத்தவும் மரங்கள் நடவும் என ஒருபுறம் போட்டிபோட்டு முண்டியடித்துக்கொண்டு, தாங்களெல்லாம் ஆயுதங்களை வெறுக்கும் அகிம்சாமூர்த்திகள் என்று சொல்ல வெளிக்கிடுவது வேடிக்கையாக இல்லையா?

ஒரு பக்கம் புலிகளின் ஆதரவாளர்களாகக் காட்டிக் கொண்டு – கட்சிக்குள் அப்படிக் காட்டிக் கொள்பவர்களை மறுக்காதிருந்து கொண்டு – இன்னொரு புறம் "காந்தீய வழிக் கட்சி நாங்கள், ஆயுதத்தோடு சம்பந்தப்பட்ட யாரும் அருகே வந்து தீட்டுப்படுத்தி விடாதீர்கள்" என்று.... என்னவொரு மகா நடிப்படா சாமி!

தமிழ்த் தலைவர்களாகவும் எம்பிக்களாகவும் மற்றும் மாகாண சபை, பிரதேச சபைகள் என்று என்னென்ன அரசியல் பதவிகள் உண்டோ அத்தனையும் விடாமல் பிடித்துக்கொள்ள எப்படியும் 'பிளேற்'றைத் திருப்பித் திருப்பிப் பேசிக்கொண்டிருக்கலாம் என்று கண்டுவைத்திருக்கிறார்கள்.

சமூகத்துக்காக எந்தவொரு நோவும் இவர்கள் பட்டதில்லை. எந்தவொரு தியாகத்துக்கோ சிறு சிராய்ப்புக்கோ கூட இவர்கள் தயாரில்லை. தங்கள் மக்களுக்காக உயிரைக் கொடுக்கச் சித்தமான இளைஞர்களைப் பார்த்து நீங்கள் தீட்டு, அசிங்கம், இழிபிறவிகள் என்று விண்ணாணம் விட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழ்ச் சமூகத்துக்காக என்ன செய்தார்கள்? எதை இழந்தார்கள்? எதை இழக்கத் துணிவார்கள்? மக்களுக்காக உண்ணாவிரதமிருந்தேனும் இவர்களில் ஒருவர் உயிரை விடுவரா? பொறுத்திருந்து பார்ப்போம்!

- *ஆசிரியர்*

# இரு தமிழ் தேசிய பாடசாலைகளை கொழும்பில் அமைக்க வேண்டும்

## மனோ கணேசன் எம்.பி.கோரிக்கை

கொழும்பு மாநகரில் மேலதிகமாக இரண்டு தமிழ் தேசிய பாடசாலைகளை உருவாக்கி தருமாறு கல்வி அமைச்சர் பந்துல குணவர்தனவிடம் ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

சர்வதேச ஆசிரியர் தினமான நேறறு காலை கல்வி அமைச்சர் பந்துல குணவர்தனவை தொடர்பு கொண்ட மனோ கணேசன் மேற்படி கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இக்கோரிக்கையை சாதகமாக பரிசீலிப்பதாக உறுதியளித்த அமைச்சர், இது தொடர்பில் எழுத்து மூல விபரங்களை உடன அனுப்பி வைக்கும்படியும் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேற்படி கோரிக்கையை யடுத்து, அமைச்சரின் வேண்டுகோளுக்கு இணங்க கல்வி அமைசசருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள எழுத்து மூலமான ஆவணத்தில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சனத்தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் கொழும்பு மாவட்டத்தில் வாழும் 258,655 தமிழர்களில் சுமார் 70 விகிதமானோர் கொழும்பு மாநகரில் வாழ்கின்றனர்.

கொழும்பு மாநகரில் வாழும் தமிழர்களில் 60 விகிதமானோர், அதாவது 106,325 பேர் வட கொழும்பு, மத்திய கொழும்பு ஆகிய இரண்டு தொகுதிகளில் மாத்திரம் வாழ்கின்றனர.

இந்நிலையில் பாரம்பரியமாக தென் கொழும்பு பகுதியிலேயே வளர்ச்சியடைந்துள்ளதாக கருதப்படும் பிரபல தேசிய தமிழ் பாடசாலைகள் அமைந்துள்ளதால், அரசாங்க பாடசாலைகளை நாடும மத்திய வருமானம் கொண்ட தமிழ் பெற்றோர்கள் இப்பாடசாலைகளில் தமது பிள்ளைகளை சேர்த்திட பெரும்பாடு படுகிறார்கள். எனவே தமிழர்கள் கொழும்பில் அதிகம் வாழும் வடக்கு, மத்திய கொழும்பு வலயத்தில் இன்னமும் இரண்டு தேசிய தமிழ் பாடசாலைகளை உருவாக்கி தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

உங்களது வேண்டுகோளின் படி மத்திய கொழும்பின் கணபதி இந்து மகளிர் வித்தியாலயம், வடகொழும்பு இந்து வித்தியாலயம் ஆகிய மாகாணசபை பாடசாலைகளை, தேசிய கல்லூரிகளாக தரமுயர்த்தி அபிவிருத்தி செய்யும்படி சிபார்சு செய்கின்றேன் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம்

ஊவா மாகாணத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர்கள் இருவரும் நேற்று ஊவா மாகாண ஆளுநர் அலுவலகத்தில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டுள்ளனர்.

மக்கள் விடுதலை முன்னணி சார்பில் பதுளை மாவட்டத்தில் 14,161 விருப்பு வாக்குகளைப் பெற்று தெரிவு செய்யப்பட்ட சமந்த வித்தியாரத்ன மற்றும் மொனராகலை மாவட்டத்தில் 5785 விருப்பு வாக்குகளைப் பெற்று தெரிவு செய்யப்பட்ட ஆர்.எம்.ஜயவர்த்தன ஆகியோர் ஊவா மாகாண ஆளுநர் நந்த மெத்திவ் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

இதேவேளை, ஊவா தேர்தலில் வெற்றிபெற்ற ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் நாளை சத்தியப்பிரமாணம் செய்து கொள்ளவுள்ளனர்.

ஊவா மாகாண சபையின் முதலாவது அமர்வு எதிர்வரும் 9 ஆம் திகதி முதல்மைச்சர் சசீந்திர ராஜபக்ஷ தலைமையில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 100 மில்லியன் ரூபா நட்டஈடு கோருகிறார் இடது கையை இழந்த சட்டபீட மாணவி

இடது கையை இழந்த கொழும்பு சட்டபீட மாணவி அரசாங்கத்திற்கு எதிராக நட்டஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

முறையற்ற விதத்தில் தனக்கு சிகிச்சையளிக்கப்பட்டு, தனது இடது கை துண்டிக்கப்பட இரு வைத்தியசாலைகளின் ஊழியர்கள் செயற்பட்டனர்.

எனவே அரசாங்கம் தனக்கு 100 மில்லியன் ரூபா நட்டஈடு வழங்கவேண்டும் எனக்கோரி சட்டத்தரணி ஊடாக மாணவி அச்சலா பிரியதர்சினி வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

மாத்தறை மற்றும் கொழும்பு வைத்தியசாலைகளின் அலட்சியம் காரணமாகவே தனது கை துண்டிக்கப்பட்டது என்று அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

சட்டத்தரணி அருட்பிரகாசம் ஊடாக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கின் எதிரிகளாக, மாத்தறை மற்றும் கொழும்பு தேசிய வைத்தியசாலை இயக்குநர்கள், சுகாதார சேவையின் செயலாளர் நாயகம், சுகாதார அமைச்சின் செயலாளர் மற்றும் சட்ட மா அதிபர் ஆகியோரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

தவறி விழுந்ததினால் கை முறிவு ஏற்பட்டு தான மாத்தறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதாகவும் அங்கிருந்து கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு, கை துண்டிக்கப்பட்ட நிலையிலேயே தான் வெளியேறியதாக அச்சலா தெரிவித்துள்ளார்.

மாத்தறை மற்றும் கொழும்பு தேசிய மருத்துவமனை ஊழியர்கள், தான் அனுமதிக்கப்பட்டிருந்த வேளை உரியமுறையில் மருத்துவ சேவையாறறவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மாத்தறை கீகொடவை சேர்ந்த அச்சலா பிரியதர்சினி, கடந்த வருடம் ஜனவரி மாதம் மாடியிலிருந்து தவறி விழுந்தார்.

இடதுகையில் முறிவு ஏற்பட்டு குறித்த மாணவி மாத்தறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். பின்னர் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். அங்கு அவருக்கு 22 ஆம் திகதி கை அகற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவம் தொடர்பாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனையின் பேரில் அமைச்சின் செயலாளர் குழுவொன்றை அமைத்து விசாரணை நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

# 1500 போலி பேஸ்புக் கணக்குகள் 9 மாத காலப்பகுதியில் முடக்கம்

(கொழும்பு)

இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் சுமார் 1,500 போலி பேஸ்புக் கணக்குகளை (fake profile) முடக்கியுள்ளதாக இலங்கை கணனி அவசர நடவடிக்கை ஒன்றியம் தெரிவித்துள்ளது.

போலி கணக்குகள் தொடர்பில் கிடைக்கும் முறைப்பாடுகள் பேஸ்புக் நிறுவனத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்படுவதாக ஒன்றியத்தின் சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் ரொஷான் சந்திரகுப்த குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய அந்த நிறுவனத்தினால் போலி பேஸ்புக் கணக்குகள் முடக்கப்படுகின்றன.

இதேவேளை, இணையத் தளங்கள் தொடர்பாக இந்த வருடம் 1,800 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக இலங்கை கணனி அவசர நடவடிக்கை ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இதில் அநேகமானவை போலி பேஸ்புக் கணக்குகளுடன் தொடர்புபட்டு காணப்படுவதாக அதன் சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் கூறியுள்ளார்.

போலி பேஸ்புக் கணக்குகளை வைத்திருப்பவர்கள் தொடர்பில் 0112 691 692 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பினை ஏற்படுத்தி முறைப்பாடு செய்ய முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



முல்லைத்தீவு இரணைப்பாலை றோமன் கத்தோலிக்க மகா வித்தியாலயத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற பரிசளிப்பு விழாவின் போது விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும் மாணவனுக்கு பரிசில் வழங்கப்படுவதையும் மாணவர்களின் இசை நிகழ்வினையும் காணலாம். (51)

# சுய அறிவை வளர்க்கும் மாணவர்கள் நற்பிரஜைகளாக திகழ்வார்கள்

## சின்மய மிஷன் சைதன்ய சுவாமிகள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இயற்கையினை நாம் எதிர்த்தால் கடவுளை எதிர்ப்பதற்கு சமனானதாகும். நீங்கள் இயற்கையுடன் ஒத்து செல்ல வேண்டும். அப்படி செயற்ப்படுகின்ற போது மாணவர்களாகிய நீங்கள் சமூகத்திற்கு பயனுள்ளவர்களாக மாற்றமடைவீர்கள். நீங்கள் பெற்றுக்கொள்கின்ற அறிவினை சொந்த அறிவாக மாற்றுகின்ற போது அது ஞானமாக மாறுகின்றது என சின்மய மிஷனின் வதிவிட ஆச்சாரியர் சைதன்ய சுவாமி கள் தெரிவித்தார்

மானிப்பாய் இந்துக்கல்லூரியில் நவராத்திரி விழா இந்து மாமன்ற தலைவர் பா.ஜெயரூபன் தலைமையில் இடம்பெற்ற போது விழாவில் கலந்து கொண்டு சிறப்பு சொற்பொழிவு ஆற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

அவர் தொடர்ந்து உரையாற்றும் போது,

நீங்கள் எந்த வெற்றிகளை எல்லாம் பெறுவீர்களோ அது தான் விஷேட வெற்றியாகும். இந்த உலகத்தில் எல்லோரும் சந்தோஷமாக இருக்கவே விரும்புகின்றனர்.

இந்த உலகத்தில் பல ரகசியங்கள் காணப்படுகின்றன. ரகசியங்கள் யாருக்கும் தெரியாது மாறாக தெரிந்தவர்கள் ஒருசிலர பெரும்பாலானவை அறியப்படாமல் இருப்பவையாகும்.

அற்புதமான ரகசியங்கள் வாழ்விற்கு பயன்படக்கூடிய ரகசியங்கள் இந்த உலகத்தில் இறைவனது படைப்பில் காணபடுகின்றன.

நாம் இந்த உலகத்தில் முக்குணங்களினால ஆட்டிப்படைக்கப்படுகின்றோம் வாழ்வில் வெற்றிபெறுவதற்கு முக்குணங்களில் இருந்து நாம் வெற்றி பெறவேண்டும்.

முக குணங்களில் உள்ள தாமச குணமானது சோம்பல் மனநிலையினை உடையதாகும்.

இக் குணத்திற்குரிய விலங்காக எருமைமாடும் நிறமாக கறுப்பு நிறமும் காணப்படுகின்றது.

எம்மிடையே உள்ள சோம்பலை நீக்குவதற்கு நாம் இயங்க ஆரம்பிக்க வேண்டும். நவராத்திரி விழாவானது எம்மிடம் நல்ல குணங்களை வளர்த்துக் கொளவதற்கான இரகசியங்களினைக் கொண்டதாக காணப்படுகின்றது என்றார். (63)

# ஆசிரியர் தினநிகழ்வு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலையின் ஆசிரியர் தினம் இன்று முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

பாடசாலை பிரதான மண்டபத்தில் இந் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழையமாணவர்கள், பெற்றோர்கள் இணைந்து இந் நிகழ்வை நடாத்தவுள்ளனர்.

இந் நிகழ்வுக்கு பிரதமவிருந்தினராக முன்னாள் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜீனா இருதயநாதன் கலந்து கொண்டு ஆசிரியர்களை கௌரவிக்கவுள்ளார். மாணவர்களின் கலைநிகழ்வுகளும் சிறப்பு நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. இந் நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு பாடசாலை சமூகம் அறிவித்துள்ளது. (48)

# பவிதாவின் நாட்டிய அரங்கேற்றம்



(யாழ்ப்பாணம்)

சுவிறசர்லாந்து நாட்டில் வாழும் மல்லாகத்தை சேர்ந்த மகாலிங்கம் தம்பதியினரின் மகளாகிய செல்வி பவிதாவின் நாட்டிய அரங்கேற்றம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பகல் யாழ்ப்பாணம் நீராவியடியில் அமைந்துள்ள இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

சுவிற்சர்லாந்து தேசத்தின் சலங்கை நர்த்தனாலயத்தின் அதிபரான திருமதி மங்கள நாயகி வசந்தகுமாரனின் மாணவியான இவர் கடந்த பதின்மூன்று வருடங்களுக்கு மேலாக பரதத்தை கற்று தனது தாய் மண்ணில் அரங்கேற்றத்தை நடாத்தியுள்ளார்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் கல்வி வலயத்தின் ஓய்வு பெற்ற நடன ஆசிரிய ஆலோசகர் கலாபூஷணம் திருமதி பத்மின் செல்வேந்திரகுமாரும் சிறப்பு விருந்தினராக கிழக்கு பல்கலைக் கழகத்தின் முன்னாள் நுண்கலைப் பீடத்தலைவர் பேராசிரியர் எஸ்.மௌனகுருவும் கௌரவ விருந்தினர்களாக கலாபூஷணம் நாட்டிய வாரிதி ஸ்ரீமதி லீலாம்பிகை செல்வராசா, கலாகீர்த்தி திருமதி சாந்தினி சிவநேசன், கலாநிதி திருமதி கிருசாந்தி ரவீந்திரா நாட்டிய கலாவித்தகர் திருமதி.நந்தினி சிவராஜன், முதுகல்வி மாணி திருமதி புவனேஸ்வரி வேல்நிதியும் கலந்து கொண்டு ஆசீர்வாதங்களையும் வழங்கினார்கள்.

# தனி நடிப்பு போட்டியில் யாழ்.மாணவன் 2 ஆம் இடம்

கொழும்பு றோயல் கல்லூரி தமிழ் நாட்கமன்றமானது அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையே நடாத்திய மேற்பிரிவு தனி நடிப்பு போட்டியில் மானிப்பாய் இந்துக்கல்லூரியில் கலைப் பிரிவில் கல்வி கற்கும் உதய குமார் கரிஸ் வடமாகாணத்தினை பிரதி நிதித்துவப்படுத்தும் வகையில தேசிய ரீதியில் இரண்டாம் இடத்தினை பெற்றுக்கொண்டுள்ளார்.

இவருக்கான வழிப்படுத்தலினை கல்லூரியின் நாடகத்துறை ஆசிரியர் எஸ்.ரி.அருள்குமரன் மேற்கொண்டுள்ளார்.

இவர் மாவட்ட மட்ட போட்டியில் முதல் இடத்தினை பெற்றுக் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை குணதாசன் தவேன்சன் மேடை நாடகப் போட்டிப் பிரிவில் சிறந்த மேடை முகாமையாளருக்கான வேத்தியல் விருதினை தேசிய ரீதியில் பெற்றுக்கொண்டுள்ளார். (63)

# கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

உலக இலஞ்ச ஊழல் தினத்தை முன்னிட்டு இலஞ்ச ஊழல்களை ஒழிப்போம் என்ற தொனிப் பொருளில் கருத்தரங்கு ஒன்று இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது.

இலங்கை இலஞ்ச ஊழல் திணைக்களத்தின் ஏற்பாட்டில் யாழ்.பொதுநூலகத்தில் காலை 8.30 மணியளவில் இந்தக் கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

மேலும் இந்தக் கருத்தரங்கில் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ சந்திரசிறி, இலஞ்ச ஊழல் தடுப்பு திணைக்கள தலைவர் டி.ஜி பாலபட்ட பண்டிக் மற்றும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு பணிப்பாளர் தர்மவர்த்தன ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (48)

# சாகித்திய விழாவை முன்னிட்டு மாணவரிடையே போட்டிகள்

(யாழ்.நிருபர்)

பேராதனைப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நடாத்தும் சாகித்திய விழாவை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே சித்திரம், கவிதை, கட்டுரை மற்றும் கார்டூன் சித்திரப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

தரம் 1 - 5 முதலாம் பிரிவு, தரம் 6 - 10, இராண்டாம் பிரிவு, தரம் 11 - 13 மூன்றாம் பிரிவு என மூன்று பிரிவுகளாக நடைபெறவுள்ள இப்போட்டிகளுக்கான அனைத்து ஆக்கங்களும் திறந்த தலைப்பில் தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி களில அமையலாம்.

கட்டுரைகள் பிரிவு - I 500 சொற்களும், பிரிவு - II 1000 சொற்களும், பிரிவு - III 1500 சொற்களுக்கும், அதிகமாகவும் இருத்தல் வேண்டும். அனைத்து சித்திரங்களும் 18 x 24 அளவுடையதாக அமைய வேண்டும்.

பாடசாலை மாணவரது ஆக்கங்கள் அதிபரால் உறுதிப்படுத்தப்பட்டு 2014 ஒக்ரோபர் 17 ஆம திகதிக்கு முன் தலைவர், -சாகித்திய விழா ஏற்பாட்டுக்குழு, மாணவர் ஒன்றியம் பேராதனைப் பல்கலைக்கழகம், பேராதனை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (10)

# ஆங்கில மொழி தேசியமட்ட போட்டி

(வலிகாமம்)

இலங்கை கல்வியமைச்சு நடாத்திவரும் தேசிய் மட்ட ஆங்கில மொழிப்போட்டியும் நாடகப் போட்டியும் எதிர்வரும் 11 ஆம், 12 ஆம், 18 ஆம், 19 ஆம் திகதிகளில் கெப்பிட்டி பொலாவ மாவத்தை கொழும்பு 07 இல் அமைந்துள்ள ஸ்ரீ மாவோ பண்டாரநாயக்கா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக வடமாகாண கல்வித்திணைக்கள ஆங்கிலபாட உதவிக் கல்விப்பணிப்பாளர் கே.வந்ணகுலராஜா அறிவித்துள்ளார்.

தரம் 3 - 13 வரையான மாணவர்களுக்கான ஆங்கில உறுப்பெழுத்துப் போட்டி ஆங்கில தொடர் எழுத்துப்போட்டி, ஆங்கில ஆக்கம் ஆங்கிலச் சொல் வதெழுதல் போட்டி என்பன நடைபெறவுள்ளன.

12 ஆம் திகதி தரம் 3 - 13 வரையான மாணவர்களுக்கான ஆங்கில கவிதை சொல்லல் போட்டி தயார் செய்த ஆங்கிலப் பேச்சு என்பன நடைபெறவுள்ளன.

18 ஆம் திகதி நாடகப் போட்டியும் கவிதைப் போட்டியும், 19 ஆம் திகதி நாடகப்போட்டியும் உரையாடல் போட்டியும் நடைபெறவுள்ளன. (06)

– பொதுமக்களுக்கு பொருளாதார நிவாரணம் –

# பொருட்களின் விலைகளை குறைப்பதற்கு நடவடிக்கை

## அமைச்சர் கெஹலியரம்புக்வெல தகவல்



(கொழும்பு)

பொருட்களின் விலையை குறைக்கும் திட்டத்தினை விரைவில் நடைமுறைப்படுத்த வுள்ளதாக பொதுமக்களுக்கு பொருளாதார நிவாரணங்களை வழங்கக் கூடிய பரிந்துரை களை முன்வைக்கும் அமைச்சர வைக் குழுவின் உறுப்பினரான அமைச்சர் கெஹலிய ரம்புக் வெல்ல தெரிவித்துள்ளார். கண்டி யில் நடைபெற்ற நிகழ்வொன்றின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பல்வேறு விடயங்கள் தொடர்பில் பரிந்துரைக் குழு உறுப்பினர்களுன் கலந்துரையாடி னோம். குறிப்பாக அரிசி, மரக்கறி, நெத்தலி மற்றும் கரு வாடு போன்ற அனைத்து பொருட்களுடன் மின்கட்டணம் தொடர்பாகவும் பரந்தளவில் கலந்துரையர்டினோம். பொரு ட்களின் விலை தொடர்பில் பல்வேறு கருத்துகள் முன்வைக் கப்பட்டன. எவ்வாறாயினும் பல் வேறு தீர்மானங்கள் மேற்கொண் டுள்ளோம். ஆகவே நாட்டில் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்தோம். அதேபோன்று நாட்டின பொருளாதாரத்தையும் கட்டியெ ழுப்புவோம். அத்துடன் பொது மக்களின் வாழ்வாதாரப் பிரச்சி னைக்கு தீர்வைப் பெற்றுக் கொடுக்க அடுத்த கட்ட நட வடிக்கையை செயற்படுத்த வுள்ளோம். தேர்தல்களுக்காக போலியான வாக்குறுதிகளை நாம் வழங்குவதில்லை என்றார்.

# ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கவில்லை

## ஜே.வி.பி. பொதுச் செயலாளர் தெரிவிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தல் தொடர் பில் இறுதித் தீர்மானங்கள் எதுவும் இதுவரையில் எடுக்கப்பட வில்லை என ஜே.வி.பி.யின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

நாட்டின் அரசியல் அமைப் பிற்கு அமைவாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மூன்றாம் தடவையாக போட்டியிட முடி யாது.

அரசியல் அமைப்பிற்கும் நாட்டின் அடிப்படைச் சட் டத்திற்கும் முரணான வகையில் அரசாங்கம் தேர்தல் நடாத்த வுள்ளது. எனவே உத்தேசிக்கப் பட்டுள்ள ஜனாதிபதித் தேர்தலா னது சட்டவிரோதமானதாகும்.

அரசாங்கத்தின் சட்டவிரோத முயற்சி குறித்து நாட்டு மக் களை தெளிவூட்டும் நடவடிக் கைகள் மேற்கொள்ளப்படும்.

நாடு தழுவிய ரீதியில் மக்களை தெளிவுபடுத்தும் நோக்கில் பல்வேறு நடவடிக்கை கள எடுக்கப்படவுள்ளன.

# கடல்சார் பல்கலைக்கழகத்தை மேம்படுத்த சீனா ஒத்துழைப்பு

(கொழும்பு)

இலங்கையின் கடல்சார் பல்கலைக்கழகத்தை மேம்படுத் துவதற்கு சீனா ஒத்துழைப்பு வழங்கவுள்ளதாக அறிவித்துள் ளது.

சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையிலான குழுவினர், சீனாவின் வடமேற்கு கடல்சார் பல்கலைக்கழகத்தின் தலைவர், பேராசிரியர் யூஷியாங் உடன் நடாத்திய பேச்சுவார்த்தையின் அடிப்படையிலேயே இந்த இணக் கம் வெளியிடப்பட்டுள்ளது.

விஞ்ஞான ரீதியான தொழில்நுட்பங்கள் மற்றும் முகாமைத்துவ அறிவைப் பகிர்ந்து கொள்ளவுள்ளதாக சீன பல்கலைக்கழகத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இலங்கை கடல்சார் பல்கலைக்கழகத்தில் 10 மாணவர்களுக்கு புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதுதவிர, எதிர்காலத்தில் மேலும் பல மாணவர்களுக்கு கடல்சார் கல்வியை வழங்குவ தற்கு கடல்சார் பல்கலைக் கழகம் துரித நடவடிக்கைகளை எடுக்கத் தயாராகி வருகின்றது.

# இனங்களுக்கிடையிலான சகோதரத்துவத்தை சீர்குலைக்கும் அமைப்பு பொதுபலசேனா

## ஜமயதுல் உலமாசபை கண்டனம்

(கொழும்பு)

பொதுபலசேனா அமைப்பு இனங்களுக்கிடையிலான சகோ தரத்துவத்தை சீர்குலைக்கும் ஓர் அமைப்பாகும் என அகில இலங்கை ஜமயதுல் உலமா சபை கடும் கண்டனத்தை வெளி யிட்டுள்ளது.

கடந்த மாதம் 28ஆம் திகதி சுகததாச அரங்கில் நடைபெற்ற பொதுபலசேனா மாநாட்டில, ஜமயதுல் உலமா சபை, சூரா சபை மற்றும் முஸ்லிம் பேரவை ஆகியனவற்றின் நடவடிக் கைகள் குறித்து விமர்சனம் செய்யப்பட்டிருந்தது.

இந்த விமர்சனங்களுக்கு பதிலளிக்கும் வகையில் உலமா சபை அறிக்கை ஒன்றை வெளி யிட்டுள்ளது. பொதுபல சேனா போன்று ஏனைய இன மத சமூ கங்களை இழிவுபடுத்தும் வெறும் அமைப்புக்கள் கிடையாது.

சமத்துவம், சகோதரத்துவம் மற்றும் மனிதநேயம் போன்ற சிரேஷ்ட மானுட பண்புகளை போற்றும் இஸ்லாமிய மார்க் கத்தை பொதுபல சேனா இழிவு படுத்தி வருகின்றது.

பொதுபல சேனாவின் இந்த நடவடிக்கைகள் வருத்தமளிக் கும் வகையில் அமைந்துள்ளன.

ஜமயதுல் உலமா சபை அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட ஓர் கடும்போக்குவாத அமைப்பு என பொதுபல சேனாவின் தலை வர் கிரம விமலஜோதி தேரர் குற்றம் சுமத்தியிருந்தார். இந்தக் குற்றச்சாட்டு வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியதாகும்.

புலனாய்வுப் பிரிவு பாது காப்பு தரப்பு போன்றன முஸ் லிம் கடும்போக்கு வாதம் நாட்டில் கிடையாது எனத் தெரிவித் துள்ள நிலையில் ஜமயதுல் உலமா சபை ஓர் கடும்போக் குவாத அமைப்பு என பொதுபல சேனா சுமத்தி வரும் குற்றச்சாட்டு நகைப்பிற்குரியது.

ஜமயதுல் உல்மா சபை ஒருபோதும் வன்முறைகளைத் தூண்டியதில்லை தூண்டப் போவதுமில்லை.

முஸ்லிம் சமூகத்தை ஆத்திர மூட்டி அதன் மூலம் வன்முறை களைத் தூண்ட சில பௌத்த பிக்குகள் முயற்சிக்கின்றனர்.

பொதுபல சேனா பௌத்த பிக்குகளின் நடவடிக்கைகள் மிகவும் இழிவான வகையில் அமைந்துள்ளன.

குருடர்களின் யானை பற்றிய விளக்கத்தைப் போன்று ஞானசார தேரர் குர்ஆன் தொடர்பில் கருத்துரைக்கின்றார்.

தேசிய சூரா சபை மற்றும் முஸ்லிம் பேரவை ஆகியன தொடர்பிலும் பொதுபல சேனா பிழையான கருத்துக்களை வெளியிட்டு வருவதாக ஜமயதுல் உலமா சபை வெளியிட் டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# ஐரோப்பிய வாழ் இலங்கையர்கள் ஜனாதிபதிக்கு முழு ஆதரவு

நாட்டினை அபிவிருத்தி பாதையில் முன்னோக்கி கொண்டு செல்லும் ஜனாதிபதிக்கு எமது முழு ஆதரவும் எப்போதும் இருக் குமென ஐரோப்பிய நாடுகளில் உள்ள இலங்கையர்கள் தெரி வித்துள்ளனர்.

ரோம்நகரில் ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷவை சந்தித்து கலந்துரையாடியபோதே அவர்கள் இந்த உறுதிமொழியை வழங்கி யுள்ளனர். நாட்டின் சமாதானம், உறுதிப்பாடு, வளர்ச்சி மற்றும் தேசிய நல்லிணக்கத்தினை தொடர்ந்தும் ஏற்படுத்த ஜனாதி பதியின் தலைமைத்துவம் அவசிய மாகும். இதுவரை காலமும் நாம் எமது தாய்நாட்டினை தொடர்ந் தும் நேசித்து வந்த போதும் அங்கு நிலவும் அமைதியற்ற சூழ்நிலைகளினால் நாட்டினை விட்டு விலகியே இருக்கிறோம். முன்னரான காலப்பகுதியில் எல்லாம் நாட்டின் எதிர்காலம் குறித்து சரியான பயமும் அச்ச மும் நிலவி வந்தது. ஆனால் தற்போது பயங்கரவாதம் அழிக்கப்பட்டு ஜனாதிபதியின் தலைமைத்துவத்தின் கீழ் நாடு கொண்டு செல்லப்படும் இந் தக்காலத்தில் நாம் எந்தவித அச்சமுமின்றி நிம்மதியாக வாழ்வினை கழித்து வருகிறோம் என தெரிவித்தனர்.

# பொலிஸ் திணைக்களத்தில் கடுமையான அரசியல் தலையீடுகள்

## பாலிதரங்கே பண்டார எம்.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)


பொலிஸ் திணைக்களத்தில் கடுமையான அரசியல் தலை யீடுகள் இடம்பெற்று வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடா ளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார குற்றம் சுமத் தியுள்ளார்.

பொலிஸ்மா அதிபர் நேர்மை யான அதிகாரி என்ற போதிலும் அவரினால் கடமைகளை சுயாதீன மான முறையில் மேற்கொள்ள முடியவில்லை.

ஆளும் கட்சியினர் தேவையற்ற விதத்தில் தலையீடு செய்கின்றனர்.

பொலிஸ் திணைக்களத்தின் நியமனங்கள், பதவி உயர்வு கள், இடமாற்றங்கள் உள்ளிட்ட சகல நிர்வாக நடவடிக்கைகளும அமைச்சு செயலாளரின் தேவைக்கு ஏற்ற வகையிலேயே மேற்கொள்ளப்படுகின்றது.

எதிர்காலத்தில் நடைபெற வுள்ள தேசிய தேர்தல் ஒன்றை கருத்திற் கொண்டு அரசாங்கம்



ஐந்து பிரதிப் பொலிஸ்மா அதிபர்களின் சேவைக் காலத்தை நீடித்துள்ளது. பொலிஸ உத்தியோகத்தர்கள் பலருக்கு பதவி உயர்வுகள் வழங்கப்படவுள்ளன.

அரசியல் ரீதியாக தமக்கு தேவையான வகையில் பொலிஸ் உத்தியோகத்தர்களை வழிநடத்துவதே இந்தப் பதவி உயர்வுகளின் நோக்கமாகும்.

எதிர்காலத் தேர்தல்களின் போது ஓய்வு பெற்ற பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் ஆளும் கட்சியின் சார்பில் போட்டியிட் டாலும் ஆச்சரியமடைவதற் கில்லை. அரசாங்கம் பொலிஸ் திணைக்களத்தை அரசியல் மயப்படுத்தியுள்ளது.

சுயாதீனமான முறையில் தேர்தல்களை நடாத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஊவா மாகாணசபைத் தேர் தல்களின் போது பொலிஸார் மேல் அரசாங்கம் அடக்குமுறைகளை பிரயோகித்தது.

வெல்லாவாய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆளும் கட்சியின் தேவைக்கு ஏற்பவே நியமிக்கப்பட்டிருந்தார்.

புலிகளின் சார்பில் ஆவ ணங்களைத் தயாரித்தமை உள்ளிட்ட இரண்டு பாரிய குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டவரே இந்த வெல்லவாய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி என பாலித ரங்கே பண்டார தெரி வித்துள்ளார்.

# பௌத்தர்களை பாதுகாப்பவர்களை தேர்தலில் ஆதரிக்க வேண்டும்

## ஜாதிகஹெல உறுமய சட்ட ஆலோசகர் யோசனை

(கொழும்பு)

சிறப்புரிமைக்காக வாக்குக் களை ஏலம் போடும் தொண் டமான், ஹக்கீம் போன்றவர் களை ஓரம் கட்டி பௌத்தர் களை பாதுகாக்க யார் முன் வருகின்றார்களோ அவர்க ளையே ஜனாதிபதி தேர்தலில் ஆதரிக்கவேண்டும் என ஜாதிகஹெல உறுமயவின் சட்ட ஆலோசகரும் மேல் மாகாண சபை உறுப்பினருமான உதய கம்பன்பில தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் 10 இலட்சம் சிங்கள பௌத்த வாக்குகளை அதிக ரிக்க நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும் இதுவே எமக்குள்ள சவால்.

அமைச்சர், பிரதி அமைச்சர் மற்றும் திணைக்கள தலைவர் பதவிகளை பணத்திற்காக தமக்கு கிடைக்கும் வாக்குகளை ஏலம் போடுகின்றார்கள்.


அதற்கமையவே நாட்டு தலைவர்களைத் தீர்மானிக்கும் நிலையை மாற்றி நாயைப் போலவால் ஆட்டுவிப்பதைத்



தவிர்த்து நாய் வாலை ஆட்டு விக்கவேண்டும். சம்பந்தன் 6 இலட்சம் வாக்கு, ஹக்கீம் 3 இலட்சம் வாக்கு, தொண்டமான் 2 இலட்சம் வாக்குகளை தம்வசம் வைத்துள்ளனர். இதனைத் தகர்க்க சிங்கள பௌத்தர்களான நாம் வழி யமைக்க வேண்டும்.

எதிர்காலத்தில் ஜனாதிபதி வேட்பாளராக வருபவர்களுக்கு இதைக் கூறி சிங்கள பௌத் தர்களான நாம் ஒரு அணியில் இணைய வேண்டும்.

எதிர்காலத்தில் சிங்கள பௌத்தர்களை பாதுகாக்கும் ஒருவருக்கே நாம் ஜனாதிபதி தேர்தலில் ஆதரவு வழங்க வேண்டும் என்றார்.




யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரியில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற சிறுவர் தின நிகழ்வில் ஆசிரியர்கள் அமர்ந்திருப்பதையும், மாணவர்களின் கலை நிகழ்வையும் காணலாம். (105)

# முதியவர்களுக்கு வயது அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்

## மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

திணைக்களங்கள், நிறுவனங்கள் என எவையாக இருந்தாலும் முதியவர்கள் தங்களுடைய தேவைகளை நிறைவேற்ற வரும்போது வயது அடிப்படையில் அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ் மாவட்ட இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்தார்.

முதியவர்களுக்கு உரிய சட்டங்கள் மற்றும் அவற்றை அமுல்படுத்துவதில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் என்பன தொடர்பில் கருத்தாய்வு ஒன்று கைதடி முதியோர் இல்லத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முதியவர்களுக்கு என்று சட்டங்கள் அரசியல் அமைப்பில் அமுல்படுத்தப்படவில்லை. எனினும் அடிப்படை உரிமைச்சட்டம் மற்றும் குடும்ப வன்முறை என்பன தொடர்பில் மட்டுமே பொதுவான சட்டங்கள் காணப்படுகின்றன. எனினும் இன்று முதியவர்களது பிரச்சினை அதிகமாக காணப்படுகின்றது.

இதற்கு பிள்ளைகளது செயறபாடுகளே காரணமாக அமைகின்றன. அத்துடன் சமூகத்தில் அவர்களுக்கு கொடுக்கின்ற மதிப்பும் குறைவாகவே இருக்கின்றது.

வீதிகளில் வயோதிபர் ஒருவர் நிற்கும்போது அவரை பேருந்தில் ஏற்றி இடம் கொடுக்க வேண்டும் என்றும் அதனால் சிரமங்களை எதிர்நோக்க வேணடும் என்றும் நினைத்து அவர்களை ஏற்றாது செல்வதும், குறித்த இடத்தில் யாரையாவது இறக்க வேண்டுமாயின் முதியவர் நிற்கும் இடத்திற்கு அப்பால் கொண்டு சென்று பேருந்தை நிறுத்துவதும் தற்போது நடைபெற்று வருகின்றன.

இந்த நிலை எதிர்காலத்தில் நிறுத்தப்பட வேண்டும். இதற்கு உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்தார். மேலும் முதியவர்கள் தங்களுடைய தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு திணைக்களங்கள், பொலிஸ் நிலையங்கள், வைத்தியசாலைகள், அஞ்சல் அலுவலகங்கள் மற்றும் வங்கிகளுக்கு வரும் போது முதியவர்களை என்று கூட பாராது நீண்ட நேரமாக காத்து இருந்தே தேவைகளை நிறைவேற்றிச் செல்ல வேண்டியுள்ளது.

இதனால் அவர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். எனவே முதியவர்கள் தங்களுடைய தேவைகளை நிறைவேற்ற வரும் போது அங்குள்ள அதிகாரிகள் வயது அடிப்படையில் அவர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (48)

# கிறீன் வைத்தியசாலை வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

(சுன்னாகம்)

மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட மானிப்பாய் கிறீன் வைத்தியசாலையின் பின்புற வீதியின் நிலை மிக மோசமாக காணப்படுவதால் இவ்வீதியூடாக பயணத்தை மேற்கொள்ளும் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் இவ்வீதியூடாக போக்குவரத்து செய்ய முடியாத அவலநிலை தோன்றியுள்ளது.

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியை இணைக்கும் சுமார் 500M (1/2km) தூரம் கொண்ட இவ்வீதி கனரகவாகனப் போக்குவரத்துக்கு தடை செய்யப்பட்டுள்ள நிலையில் சாதாரண மக்களின் போக்குவரத்துக்கு இவ்வீதி பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளமை பற்றி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறித்த வீதியில் தேங்கும் வெள்ளம் ஓட முடியாது தேங்கி நிற்பதால் அப்பகுதியில் தொற்று நோய்கள் ஏற்படலாம் எனவும் பொதுமக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர். இது குறித்து அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா என பொதுமக்கள் கேள்வி எழுப்புகின்றனர். (66)

# தையல் பயிற்சிவகுப்பு

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி வடக்கு கிராம அபிவிருத்திச்சங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க நீர்வேலி காமாட்சி அம்பாள் கோவிலின் முன்பாக உள்ள மண்டபத்தில் தேசிய அருங்கலைகள் பேரவையினால் தையல் பயிற்சி வகுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 1 ஆம் திகதி மேற்படி கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் த.பரராசசிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ் ஆரம்ப நிகழ்வில் ஈ.பி.டி.பி.கோப்பாய் பிரதேசப்பொறுப்பாளர் ஐங்கரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

தேசிய அருங்கலைகள் பேரவையின் யாழ். மாவட்ட உதவித்திட்டப்பணிப்பாளர் எஸ்.நவதர்சன் மேற்படி பேரவையின் திட்டஆலோசகர் திருமதி.த.இருதயராணி, கைத்தொழில் அபிவிருத்தி உதவியாளர் எஸ்.சசீந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர். சுமார் இருபது பயிற்சியாளர்கள் பங்குபற்றும் இப்பயிற்சி நெறியை திருமதி.எஸ்.தயாமதி ஆசிரியை நெறிப்படுத்தி நடாத்தி வருகின்றார்.

# பரிசளிப்பு விழா

(நீர்வேலி)

நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியின் 2014 இற்கான பரிசளிப்பு விழா நாளை புதன் கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி முதல்வர் கு.ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவின் பிரதமவிருந்தினராக வடமாகாண கல்விப்பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராசா, சிறப்பு விருந்தினர் களாக பொ.அருணகிரிநாதன் பிரதிக்கல்விப் பணிப்பாளர் க.கிருபாகரன் (பழைய மாணவன்) ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளார்கள்.

நிறுவுநர் நினைவுப்பேருரையை பழைய மாணவன் ச.நவரத்தினம் நிகழ்த்துவார். மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.(85)

# சண்முகப்பிரியனின் மிருதங்க அரங்கேற்றம்

(யாழ்.நிருபர்)

யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் க.கஜனின் மாணவன் அ.சண்முகப்பிரியனின் மிருதங்க அரங்கேற்ற நிகழ்வு நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இணுவில் கந்தசுவாமி கோவில் இளந்தொண்டர்சபை கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பேராதனைப்பல்கலைக்கழக தமிழ்த்துறைத்தலைவர் பேராசிரியர் வ.மகேஸ்வரனும் சிறப்புவிருந்தினராக தெல்லிப்பளை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகனும் கௌரவவிருந்தினர்களாக யாழ்.கோட்டக்கல்விப்பணிப்பாளர் சு.சண்முககுமார், தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அதிபர் கே.இரத்தினகுமார், மகாஜனக்கல்லூரி இசை ஆசிரியை மு.ஜெயகௌரி ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (10)

# முரசின் இன்றைய பலன்



(07.10.2014 செவ்வாய்க்கிழமை)

ஜய வருஷம் புரட்டாதி மாதம் 21 ஆம் திகதி.
மரணயோகம் / சதுர்த்தசி திதி.
பூரட்டாதி நட்சத்திரம் மு.பகல். 11.44 வரை. பின் உத்தரட்டாதி.
இராகு காலம் 03.02 - 04.32 வரை. சுபநேரம் 10.32 - 12.02 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | இனிய நினைவுகளை மீட்டு ஆனந்தம் தக்க வைக்கும் ஆனந்த நாளாகும், வெளியூர் பயணம் பெற்றோரின் மறுப்புக்கிணங்க கைவிட உத்தேசித்தல். |
| ரிஷபம் | சில நாட்களாக தம்பதியர் மத்தியில் நிலவிய மனத் தாங்கல் மறைதல், சுபகாரியமொன்று எதிர்பாராமல் ஏற்பட்டு கொண்டாட்டத்திற்கு கடன்படல். |
| மிதுனம் | நிகழ்விற்குப் பிந்திச் சமுகமளித்தல், புதிய கொள்வனவு செய்யுமுன் அவற்றின் நம்பகத்தன்மையைப் பாருங்கள். |
| கடகம் | சுற்றாடல் சுத்தத்தை மேற்கொள்ள குடும்ப சகிதம் ஈடுபடல், அதீத சத்தத்தினால் வியாபாரம் பாதிக்கப்பட்டு களேபரம் ஏற்படல். |
| சிம்மம் | மனக்கிலேசம் நீங்கியதால் ஈடுபட்ட பணி தேக்கமின்றி நிறைவேறல், பட்டகடன் தீர பூர்வீகச்சொத்தின் ஒரு பகுதியை விற்க முனைதல். |
| கன்னி | இக்கட்டான சூழலில் நண்பர் செய்யும் உதவியை நன்றிப்பெருக்குடன் பாராட்டுதல், விசாரணையின் பின்னால் விவாகம் செய்யும் நிலைப்பாடு தக்கவைத்தல். |
| துலாம் | பொறுமை சகிப்புத்தன்மையை மேற்கொள்ளல், பரீட்சைச் சித்தியினால் கேட்டதை வாங்கிக் கொடுக்க விழைதல். |
| விருச்சிகம் | செய்த நன்றியை மறந்து விரட்டிய உறவினரை எண்ணி மனம் நோகுதல், கட்டாக்காலிகளினால் சேதமடைந்ததை எண்ணி அயலவருடன் முரண்படுதல். |
| தனுசு | கையில் எடுத்த முக்கியமான பொறுப்பினை பிறருக்கு கொடுப்பதை தவிர்க்கவும், உதவிகேட்டு வந்தவரின் தகுதியை ஆராய்தல். |
| மகரம் | விரலுக்குத்தக்கதாக வீக்கம் இருப்பதைப்போல இயலக்கூடிய கருமத்தில் பிரவேசியுங்கள், வெளியூரினின்றும் உறவுகள் வந்து சேர்வதினால் மகிழ்ச்சி ஏற்படல். |
| கும்பம் | அலுவலகத்தில் சகஊழியர்களைத் தட்டிக் கொடுத்து கருமமாற்ற முற்படுதல், ஆவணக்குறைபாட்டினால் சமுகமளித்து நேர்முகப்பரீட்சை காலை வாரிவிடல். |
| மீனம் | கால்நடை குறுக்கேபாயும் வேளையில் சமயோசிதத்தினால் விபத்து நேராமை, நேர்மறையாகச்சிந்தித்து பிறரை அனுசரித்துப்போவதினால் முரண்பாடு விலகுதல். |



## நிஷிகோரி சம்பியன்

(டோக்கியோ)

ஜப்பான் ஓப்பன் ரென்னிஸ் தொடரில் ஜப்பான் வீரர் நிஷிகோரி சம்பியன் பட்டம் வென்றார்.

டோக்கியோவில் ஜப்பான் ஓப்பன் ரென்னிஸ் தொடர் நடைபெற்றது. இதன் ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் ஜப்பானின் நிஷிகோரி, கனடாவின் மிலோஸ் ரனோச்சை எதிர் கொண்டார்.

டை-பிரேக்கர் வரை சென்ற முதல் செட்டை 7-6 என கைப்பற்றிய நிஷி கோரி, இரண்டாவது செட்டை 4-6 என கோட்டைவிட்டார். வெற்றியாளரை நிர்ண யிக்கும் கடைசி செட்டில் அசத்திய நிஷிகோரி 6-4 என வென்றார். முடிவில், நிஷிகோரி 7-6, 4-6, 6-4 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தைத் தட்டிச்சென்றார்.

## இன்றுடன் நிறைவு

(கொழும்பு)

அகில இலங்கை பாடசாலைகளுக் கிடையிலான தேசிய மட்ட தடகளப் போட்டி இன்றுடன் நிறைவு பெறவுள்ளது. கடந்த 2ஆம் திகதி முதல் நடைபெற்று வரும் இப்போட்டித் தொடரில் வடமாகாண வீர,வீராங்கனைகள் நேற்று முன்தினம் வரை ஏழு தங்கம், ஆறு வெள்ளி, இரண்டு வெண்கலம் அடங்கலாக 15 பதக்கங்களை வென்று ஐந்தாமிடத்தைப் பிடித்துள்ளனர். இன்றைய இறுதி நாளில் மேலும் சில பதக்கங்களை வடமாகாண வீர,வீராங் கனைகள் கைப்பற்றிக்கொள்ளக்கூடிய வாய்ப்பிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. ஹஜ் பெரு நாள் காரணமாக நேற்றைய தினம் போட்டிகள் நடைபெறவில்லை.

# சீன ஓப்பன்; ஷரபோவா, ஜோகோவிச் வசம் கிண்ணம்

(பீஜிங்)

சீன ஓப்பன் ரென்னிஸ் போட்டித் தொடரின் சம்பியன் பட்டத்தை மரியா ஷரபோவா மற்றும் ஜோகோவிச் ஆகியோர் கைப்பற்றிக் கொண்டனர்.

சீன ஓப்பன் ரென்னிஸ் தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் ரஷ்ய வீராங்கனை மரியா ஷரபோவா, செக் குடியரசின் பெத்ரா குவித்தோவா ஆகியோர் மோதினர்.

சிறப்பாக விளையாடிய ஷரபோவா 6-4 என்ற கணக்கில் முதல் செட்டை கைப்பற்றி முன்னிலை பெற்றார். இரண்டாவது செட்டில் கடும் நெருக்கடி கொடுத்த குவித்தோவா 6-2 என வெற்றி பெற, சமநிலை ஏற்பட்டது. கடைசி செட்டில் குவித்தோவாவின் சேர்வீஸ் ஆட்டங்களை முறியடித்து முன்னேறிய ஷரபோவா 6-4, 2-6, 6-3 என்ற செட் கணக்கில் இரண்டரை மணி நேரம் போராடி வென்று கோப்பையை கைப்பற்றினார். இந்த வெற்றியால், மகளிர் ஒற்றையர் பிரிவு தரவரிசையில் அவர் 2ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.





இதேவேளை, ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் செக் குடியரசின் தோமஸ் பெர்டிச்சுடன் மோதிய முதல்நிலை வீரர் நோவாக் ஜோகோவிச் (சேர்பியா) 6-0, 6-2 என்ற நேர் செட்களில் மிக எளிதாக வென்று 5ஆவது முறையாக சீன ஓப்பன் சம்பியன் பட்டத்தை கைப்பற்றி அசத்தினார். இறுதிப் போட்டி ஒரு மணி, 6 நிமிடம் மட்டுமே நீடித்தமை குறிப்பிடத்தக்கது.

## காரணத்தை அறிய விரும்பும் கெவின்

(லண்டன்)

நான் ஏன் அணியிலிருந்து நீக்கப்பட்டேன் என்பதை அறிந்து கொள்ள விரும்புகின்றேன் என இங்கிலாந்து அணியின் முன்னாள் வீரர் கெவின் பீற்றர்சன் தெரிவித்துள்ளார்.

அவுஸ்ரேலியாவுக்கு எதிரான ஆஷஸ் தொடரில் இங்கிலாந்து 0-5 என்ற கணக்கில் மோசமாகத் தோற்றது.

இதனால் இங்கிலாந்து அணி கடும் விமர்சனத்துக்கு உள்ளானது. இதற்கு பலிக்கடாவாக கெவின் பீற்றர்சன் நீக்கம் செய்யப்பட்டார். அதற்கு காரணம் பயிற்சியாளர் ஆன்டிபிளவர் கப்டன் குக் என்று தகவல் வெளியானது. அவர் கடந்த சில மாதங்களுக்கு முன்பு ஓய்வு பெற்றார்.

இந்த நிலையில் அவர் டெய்லி டெலிகிராப் பத்திரிகையில் அளித்த பேட்டியில் பயிற்சியாளர் ஆன்டி பிளவர், விக்கெட் காப்பாளர் பிரையர் ஆகியோர் மீது குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது:

நான் ஏன் அணியில் இருந்து நீக்கப்பட்டேன் என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன். இங்கிலாந்து ஓய்வறையில் சுமூகமான சூழ்நிலை இல்லை. அங்கு வீரர்களை திட்டுவது, மனரீதியாக காயப்படுத்துவது போன்றன நடக்கின்றன.

பிடிகளை தவற விடுவதற்காக சிரேஷ்ட பந்துவீச்சாளர்கள், விக்கெட் காப்பாளர் மட் பிரையர் ஆகியோர் கடுமையான வார்த்தைகளால் திட்டுவார்கள்.

இதில் பயிற்சியாளர் ஆன்டி பிளவரின் செயற்பாடும் திருப்தியாக இல்லை. அவரும் கடுமையாக நடந்து கொண்டார்.

மன்னிப்புக் கேட்க வலியுறுத்தியதால் ஓய்வறையில் வாக்குவாதம் ஏற்பட்டது. ஏன் அவர்கள் பிடிகளைத் தவற விடவே மாட்டார்களா? ஏன் நீங்கள் பந்துகளை வெய்டாக வீசவே மாட்டீர்களா?

விக்கெட் காப்பாளர் பிரையர் தவறான அணுகுமுறை, சூழ்நிலை கொண்டுள்ளார். பயிற்சியாளர் ஆன்டி பிளவர் இங்கிலாந்து வீரர்களை மிரட்டி பயத்துடனேயே வைத்து இருக்கிறார் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஒரு நாள் தொடர் இன்று ஆரம்பம்
# ருவென்ரி-20இல் ஆஸி. வெற்றி

(டுபாய்)

அவுஸ்ரேலிய, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் முதல் போட்டி இன்றைய தினம் சார்ஜாவில் நடைபெறவுள்ளது.

அவுஸ்ரேலியா-பாகிஸ்தான் அணிகள் மூன்று ஒருநாள் மற்றும் இரண்டு டெஸ்ட், ஒரேயொரு ருவென்ரி 20 போட்டிகளைக் கொண்ட கிரிக்கெட் தொடரில் ஐக்கிய இராஜ்ஜியத்தில் விளையாடவுள்ளது.

இந்நிலையில் இரு அணிகளுக்குமிடையிலான ருவென்ரி-20 போட்டி நேற்று முன்தினம் டுபாயில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய பாகிஸ்தான் அணி மைக்ஸ்வெல்லின் பந்துவீச்சிற்கு ஈடு கொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் பாகிஸ்தான் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 96 ஓட்டங்களைப் பெற்றது. இதில் நசீம் 25, வகாப் ரியாஸ் 16, ஹசன் 13 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் மைக்ஸ்வெல் மூன்று, போய்ஸ் இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 97 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய அவுஸ்ரேலிய அணி 14 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் டேவிட் வோர்னர் 39 பந்துகளை எதிர்கொண்டு நான்கு பவுண்டரிகள், மூன்று சிக்ஸர்கள் அடங்கலாக ஆட்டமிழக்காது 53, மைக்ஸ்வெல் 17 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் ஹசன் இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய மைக்ஸ்வெல் போட்டியின் ஆட்டநாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார்.




இதேவேளை, இரு அணிகளுக்குமிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடர் இன்றைய தினம் சார்ஜாவில் நடைபெறவுள்ளது. ஒரு நாள் தொடர் மிகுந்த சவால் நிறைந்ததாகவே இருக்கும். இருப்பினும் அந்தச் சவால்களை எதிர்கொண்டு தொடரை வெல்வோம் என பாகிஸ்தான் அணிக் கப்டன் மிஸ்பா உல் ஹக் தெரிவித்துள்ளார்.

## களத்திற்கு வெளியில்....

சம்பியன் லீக் ருவென்ரி-20 தொடரின் இறுதிப் போட்டியில் களமிறங்கும் 11 பேர் கொண்ட அணியில் இடம்பெற்றது உண்மையிலேயே எனக்கு கிடைத்த கௌரவமாகும். முதல் முறையாக இறுதிப்போட்டியில் விளையாடியதால் நெருக்கடிக்குள்ளானேன். கப்டன் டோனி என்னை ஊக்குவித்து நிறைய நம்பிக்கையை அளித்தார். பந்தை மேல்வாக்கில், மெதுவாக வீசும்படியும், பரிசோதனை முயற்சியை அதிகமாக கையாள வேண்டாம் என்றும் என்னை அறிவுறுத்தினார். பந்து நன்கு சுழன்று திரும்பியதால் உற்சாகமாக பந்து வீசினேன்.

**பவான் நெகி (சென்னை)**

சம்பியன் லீக் ருவென்ரி-20 தொடரின் கொல்கத்தா அணிக்கெதிரான இறுதிப் போட்டியில் சுரேஷ் ரெய்னாவின் ஆட்டம் உலகத்தரம் வாய்ந்ததாக இருந்தது. அதனால் தான் அவர் ருவென்ரி-20 கிரிக்கெட்டில் உலகின் சிறந்த துடுப்பாட்ட வீரர்களில் ஒருவராக திகழ்கிறார். அவரின் ஆட்டம் என்னையே புல்லரிக்கச் செய்தது.

**மக்கலம் (சென்னை)**

சர்வதேச கிரிக்கெட்டில் நான் 3ஆவது வரிசையில் ஆடிவருகின்றேன். ஆனால் சென்னை அணிக்கு வந்த பின் 4ஆவது வரிசையில் ஆடுகிறேன். இதுவும் நல்ல விடயம் தான். நான் களம் இறங்கும் போது பெரும்பாலும் சுழற்பந்து வீச்சை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. சுழலை சமாளித்து எனது ஆட்டத்திறனை வளர்க்கும் போது, அது சர்வதேச கிரிக்கெட்டுக்கு உதவும். சுரேஷ் ரெய்னாவின் துடுப்பாட்டம் அருமையாக இருந்தது. எனது வாழ்க்கையில் நான் பார்த்ததில் அனேகமாக இதைத் தான் சிறந்த ருவென்ரி-20 ஆட்டமாக நினைக்கிறேன்.

**டுபிளிஸ்சர்ஸ் (சென்னை)**

இரண்டு முறை இறுதி ஆட்டத்தில் (ஐ.பி.எல்.யும் சேர்த்து) தோற்றிருந்தோம். இந்த தருணத்திற்காக நாங்கள் 3 ஆண்டுகள் காத்திருந்தோம். இறுதிப்போட்டியில் வெற்றி பெற்றமை பூரிப்பு அளிக்கிறது. நாங்கள் தோற்றாலும், வென்றாலும் எல்லா வகையிலும் எங்களுக்கு ஆதரவாக இருக்கும் சென்னை ரசிகர்களுக்கு நன்றி.

**ஜடேஜா (சென்னை)**

மும்பை இந்தியன்ஸ் அணியில் இருந்து சென்னை அணிக்கு மாறியதை புத்திசாலித்தனமான முடிவாக கருதுகிறேன். நான் விளையாடியதில் சிறந்த அணி சென்னை சூப்பர் கிங்ஸ் தான். எனது செயற்பாடு மிகுந்த ஏமாற்றம் அளித்தது. ஆனால் மற்றவர்கள் பொறுப்பை உணர்ந்து ஆடினர். இறுதிப்போட்டிக்கு முன்னேறினால், கோப்பை எமக்கு தான் என்று சக வீரர் பத்ரீயிடம் அடித்துக் கூறியதை இங்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். எங்களது அணி மேன்மேலும் வலுவடையும்.

**டுவைன் ஸ்மித் (சென்னை)**

சம்பியன் லீக் ருவென்ரி-20 கிரிக்கெட் தொடர் இந்தியாவில் நடைபெற்றமை எங்களுக்கு கூடுதலான அனுகூலமாகவே அமைந்திருக்கின்றது. நாளை ஆரம்பமாகவுள்ள இந்திய அணிக்கெதிரான ஒரு நாள் போட்டித் தொடரில் சாதிப்பதற்கு சம்பியன் லீக் ருவென்ரி-20 தொடர் மிகுந்த நம்பிக்கையை அளிப்பதாகவே உணர்கின்றேன்.

**பிராவோ (மே.தீவுகள் அணி கப்டன்)**

# டினுசன் மாயாஜாலம் யாழ். மத்தி அபார வெற்றி




(யாழ்ப்பாணம்)

டினுசனின் மாயாஜால சுழற்பந்து வீச்சின் மூலம் யாழ். மத்திய கல்லூரி அணி ஒன்பது விக்கெட்டுக்களால் அபார வெற்றிபெற்றது.

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்படவுள்ள பிரிவு மூன்றின் 13 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இனிங்ஸ் கிரிக்கெட் போட்டியை முன்னிட்டு தற்போது பயிற்சி ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இதில் யாழ். மத்திய கல்லூரி மற்றும் கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய அணிகளுக்கிடையிலான இனிங்ஸ் கிரிக்கெட் போட்டி நேற்று முன்தினம் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதல் இனிங்ஸிற்காக ஆடிய கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய அணி டினுசனின் சுழற்பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 62 ஓட்டங்




களைப் பெற்றது. இதில் யசிக்குமார், லவன் ஆகியோர் தலா 15, தனுசன் 12 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் டினுசன் 10 ஓவர்கள் பந்து வீசி 24 ஓட்டங்களைக் கொடுத்து எட்டு விக்கெட்டுக்களைச் சாய்த்தார்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிய யாழ். மத்திய கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 83 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ராஜ் கிளிங்டன் 22, கப்டன் இயலரசன் 18, பிரசாத், அபியுத் ஆகியோர் தலா ஒன்பது ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சபின், லவன் ஆகியேர் தலா மூன்று, யதுர்சன் இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

21 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய அணி டினுசன், சதுசன் ஆகியோரின் பந்துவீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் திறணியதுடன் விக்கெட்டுக்களையும் வேகமாக பறிகொடுத்தது. இறுதியில் கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய அணி இரண்டாவது இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 67 ஓட்டங்களைப் பெற்றது. இதில் தனுசன் 14, சபின் 11, யசிக்குமார் 10 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் சதுசன் நான்கு ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து, டினுசன் 26 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து விக்கெட்டுக்களைக் கைப்பபற்றினர்.

பதிலுக்கு 12 ஓவர்களில் 47 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய யாழ் மத்திய கல்லூரி அணி பிரசாத்தின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் 7.4 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதன் மூலம் யாழ். மத்திய கல்லூரி அணி ஒன்பது விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. இதில் பிரசாத் 23 பந்துகளை எதிர்கொண்டு ஆறு பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 30, டினுசன் ஆட்டமிழக்காது 11 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் லவன் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்.

இரு இனிங்ஸிலும் 13 விக்கெட்டுக்களைச் சாய்த்த டினுசன் அணியின் வெற்றிக்கு வித்திட்டார். (எஸ்.பி.)

## மல்லாவி வீரருக்கு வர்ண விருது

(கொழும்பு)

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட உயரம் பாய்தல் போட்டியில் முல்லைத்தீவு - மல்லாவி மத்திய கல்லூரி வீரர் வைகுந்தவாசன் லோஜிதன் வர்ண விருது வென்றுள்ளார்.

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட தளகளப் போட்டி கொழும்பு சுகததாஸ் உள்ளக விளையாட்டு அரங்கில் நடைபெற்று வருகின்றது.

இதில் 17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உயரம் பாய்தல் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இப்போட்டியில் சிறப்பான முறையில் செயற்பட்ட மல்லாவி மத்திய கல்லூரி வீரர் வைகுந்தவாசன் லோஜிதன் 1.85 உயரம் பாய்ந்து வர்ண விருதை வென்றார்.

மல்லாவி மத்திய கல்லூரிக்கு மிக நீண்ட காலத்திற்கு பின்பாகஇவ் வர்ண விருது கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தேசிய மட்ட மெய்வல்லுநர் போட்டியில் வர்ணவிருதை வென்ற வைகுந்தவாசன் லோஜிதனுக்கு முல்லைத்தீவு மல்லாவி மத்திய கல்லூரிச் சமூகம் பாராட்டுத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (48)

விளையாட்டுச் செய்திகள்

# தேசிய பாடசாலை கால்பந்து அணியில் மகாஜனக் கல்லூரி வீரர் கஜானனன்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை பாடசாலைகளின் தேசிய மட்ட கால்பந்தாட்ட அணியில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி வீரர் ஞானேஸ்வரன் கஜானன் இடம்பிடித்துள்ளார்.

இந்தியா, நேபாளம், பூட்டான், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளுக்கான கால்பந்து சுற்றுப் போட்டிகளுக்கான அகில இலங்கை பாடசாலைகளின் 15 வயதுப்பிரிவு அணி அண்மையில் தேசிய ரீதியில் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் சுற்றுப் போட்டிகளிலும் பங்குபற்றி வருகின்றது.

இப்போட்டிக்கான 20 பேர் கொண்ட அணியில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி வீரர் ஞானேஸ்வரன் கஜானன் இடம்பிடித்துள்ளார். சிறு வயது முதல் கால்பந்து மீது தீராத காதல் கொண்ட கஜானன் பாடசாலை, கோட்டம், வலயம், மாகாணம், தேசிய மட்டப் போட்டிகளில் தனது உச்ச திறமைகளை வெளிப்படுத்தி தேர்வுக் குழுவின் கவனத்தை தன் பக்கம் ஈர்த்துக் கொண்டார். இதன் விளைவாக தற்போது இந்தியாவில்




போட்டிகளில் பங்குபற்றிவரும் இலங்கை அணியில் இடம்பிடித்து அசத்தி வரும் கஜானன் அடுத்து நேபாளம், பூட்டான், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளுக்கு விஜயம் செய்து அந்த அணிகளுக்கு எதிராக நடைபெறவுள்ள போட்டிகளிலும் பங்குபற்றவுள்ளார்.

தேசிய அணியில் ஆடிவரும் கஜானன் குறித்து தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அதிபர்மணிசேகரம் குறிப்பிடுகையில், தேசிய மட்ட கால்பந்தாட்ட அணியில் எங்கள் கல்லூரி சார்பாக அவர் பங்குபற்றி வருவது மகிழ்ச்சி அளிக்கின்றது. கஜானனுக்கு இயல்பாகவே கால்பந்து மீது அதிக ஆர்வம் இருந்து வந்ததை எங்களால் உணர முடிந்தது. எங்களால் செய்து கொடுக்கக்கூடிய அனைத்து வசதிகளையும் நாம் அவருக்கு செய்து கொடுத்தோம். எதிர்காலத்திலும் செய்து கொடுப்போம். இதற்கும் அப்பால் பெண்களுக்கான 14 வயதுப் பிரிவில் சானு மற்றும் கௌரி ஆகியோர் கடந்த இரு ஆண்டுகளாக தேசிய மட்ட கால்பந்து அணியில் இடம்பிடித்து எமது கல்லூரிக்கு பெருமை சேர்த்தார்கள். அதே போன்று கஜனானும் எங்கள் கல்லூரிக்கு பெருமை சேர்ப்பது பெரு மகிழ்வைத் தருகின்றது என்றார். (93)

## மென்பந்து இறுதியில் வேலணை, கோப்பாய்

(வட்டுக்கோட்டை)

அரச அதிபர் வெற்றிக் கிண்ணத் தொடரின் பெண்கள் மென்பந்து கிரிக்கெட் தொடரின் இறுதி ஆட்டத்திற்கு வேலணைப் பிரதேச செயலகம் மற்றும் கோப்பாய் பிரதேச செயலக அணிகள் தகுதி பெற்றுள்ளது..

யாழ். மாவட்ட செயலக நலன்புரிக் கழகத்தினால் நான்காவது ஆண்டாக நடாத்தப்பட்டு வரும் பிரதேச செயலக உத்தியோகஸ்தர்களுக்கான பெரு விளையாட்டுப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இதில் பெண்களுக்கான மென் பந்து கிரிக்கெட் போட்டி அண்மையில் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் ஊர்காவற்றுறை பிரதேச செயலக உத்தியோகஸ்தர் அணியும் வேலணைப் பிரதேச செயலக உத்தியோகஸ்தர் அணியும் மோதின. ஐந்து ஓவர்களைக்கொண்ட இப்போட்டியில் முதலில் ஆடிய ஊர்காவற்றுறை பிரதேச செயலக உத்தியோகஸ்தர் அணி ஒரு விக்கெட்டை இழந்து 48 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 49 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய வேலணைப் பிரதேச செயலக அணி 4.5 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதன் மூலம் வேலணைப் பிரதேச செயலக உத்தியோகஸ்தர் அணி இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியது.

மற்றைய அரையிறுதிப் போட்டியில் கோப்பாய் பிரதேச செயலக உத்தியோகஸ்தர் அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தேசிய கூடைப்பந்தாட்டம் மூன்றாமிடம் வடமாகாணம்

(கொழும்பு)

தேசிய மட்ட கூடைப்பந்தாட்டப் போட்டியில் வட மாகாணம் மூன்றாமிடத்தைப் பிடித்து அசத்தியுள்ளது.

39ஆவது தேசிய விளையாட்டு விழாவின் பெருவிளையாட்டுப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இதில் பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டி நேற்று முன்தினம் கொழும்பு டொறின்டன் ிளேஸ் கூடைப்பந்தாட்ட மைதானத்தில் நடைபெற்றது.

சிறப்பாக செயற்பட்ட வடமாகாண அணி அரையிறுதிப் போட்டியில் தோல்வியைத் தழுவியது. இந்நிலையில் மூன்றாமிடத்திற்கான போட்டியில் தென்மாகாண அணியும் வடமாகாண அணியும் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய வடமாகாண வீராங்கனைகள் புள்ளிகளை குவித்தவண்ணமிருந்தனர். இதற்கு ஈடுகொடுக்க முடியாமல் தென்மாகாண அணி திணறியது. இறுதியில் வடமாகாண அணி 52-39 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது. (93)



அவுஸ்ரேலியா, நியூசிலாந்தில் நடைபெறவுள்ள உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் கிண்ணம் கடந்த 30ஆம் திகதி சிம்பாப்வே நாட்டிற்கு கொண்டு செல்லப்பட்டது. இதன் போது சிம்பாப்வே அணி மசகட்ச கிண்ணத்தை கொண்டு செல்வதையும் அருகில் பிரண்டன் ரெய்லர் மற்றும் பாடசாலை மாணவர் சிம்பாப்வே தேசியக் கொடியுடன் வலம் வருவதையும் காணலாம்.

# படுகொலைகள் அதிகமதிகம் ஆகட்டும் என்கிற விடுதலை ஆவேசப் பண்பு...

**- கா. முருகேசன் கட்டுரையிலிருந்து.**



**யூ**ன் மாதம் ஆரம்பித்து யூலை வரை 50 நாட்கள் பலஸ்தீனம் மீது இஸ்ரேல் நடாத்திய காட்டுமிராண்டித்தனமான விமான, தரைவழித் தாக்குதல் களின் போது, 2,100 இற்கும் அதிகமான பலஸ்தீன மக்கள் கொல்லப்பட்டனர்.

பல்லாயிரக்கணக்கான மக்கள் படுகாயம் அடைந்தனர். இஸ்ரேல் ஐ.நா. நிர்வகிக்கும் பாதுகாப்பிடங் களில் அடைக்கலம் தேடியிருந்தோ ரைக் கூட விட்டு வைக்கவில்லை. இஷ்ரேல் தரப்பில் 66 இராணுவ வீரர்கள் மட்டுமே இறந்துள்ளனர்!

இந்த இராணுவ நடவடிக்கை களின் போது, பலஸ்தீனத்தின் காஸா பகுதியில் 5,226 இலக்கு களைத் தாம் தாக்கியதாக இஷ் ரேல் இராணுவம் அறிவித்துள்ளது.

அதேநேரம் காஸா பகுதியை நிர்வகித்து வரும் ஹமாஸ் இயக்கம் இஸ்ரேல் மீது 4,591 ரொக்கட் மற்றும் மோட்டார் குண்டுகளை ஏவியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் நடைபெற்ற இறுதிக்கட்டப் போரில் இருதரப் பாலும் கொல்லப்பட்ட பொதுமக் களின் (பல்லாயிரக்கணக்கான) தொகையைப் பார்க்கும் போது, காஸாவிலும் இஷ்ரேலிலும் நடாத்தப்பட்ட பல்லாயிரக் கணக் கான தாக்குதல்களில் இறந்தவர் களின் தொகை ஆச்சரியத்தை உண்டுபண்ணும் அளவுக்குக் குறைவாக உள்ளதை அவதானிக்கலாம்.

ஏன் இலங்கைப் போரில் இவ்வளவு அழிவும், பலஸ்தீனத் தில் இஷ்ரேல் நடாத்திய தாக்கு தலில் இவ்வளவு குறைவான அளவு உயிரிழப்புகளும் ஏற்பட்டன என பலருக்கு வியப்பாகவும் இருக்கலாம். அதுவும் இலங்கையுடன் ஒப்பிடுகையில் இஷ்ரேலிடம் உள்ள படை பலமும், நவீன ஆயுதங்களின் தரமும் பல மடங்கு உயர்வானவை.

இலங்கை இறுதிக்கட்டப் போரில் 40,000 வரையிலான பொதுமக்கள் இறந்ததாக ஐ.நா. தெரிவித்துள்ளது. அதேநேரத்தில் சில புலம் பெயர் அமைப்புகளும், தமிழ் நாட்டின் பழ.நெடுமாறன், வை.கோ. போன்ற வகைய றாக்களும் இறுதிக்கட்டப் போரில் ஒன்றரை இலட்சம், இரண்டு இலட்சம் வரையி லான தமிழர்கள் ராஜபக்ஸ அரசால் இனப்படுகொலை செய்யப்பட்டதாக தமது மன விருப்பத்துக்கு ஏற்றவாறு சொல்லி வருகின்றனர்.

ஐ.நா.வின் கணக்குகள் உள்பட இந்தக் கணக்குகள் எவ்வளவு தூரம் சரியானவை என்று யாரும் சொல்ல முடி யாது. ஏனெனில் இதுவரை இலங்கை அரசோ, சர்வதேச நிறுவனங்களோ அல்லது பக்கச்சார்பற்ற எந்தவொரு அமைப்போ இறுதிக்கட்டப் போரில் இறந்தவர்கள் பற்றிய முழுமையான ஆய்வு எதையும் செய்ய வில்லை. இருப்பினும் பொது மக்கள் மத்தியில் இருந்து கிடைக்கும் தகவல்களின்படி இறுதி யுத்தத்தில் பல ஆயிரம் அப்பாவிப் பொது மக்கள் கொல்லப்பட்டிருக்கி றார்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் இருக்க முடியாது.

ஆனால் நிச்சயமாக பலஸ்தீனத்தில் இஷ்ரேல் மேற்கொண்ட ஆயிரக்கணக் கான தாக்குதல்கள் அளவுக்கு வன்னியில் அரச படைகளோ புலிகளோ தாக்குதல்கள் மேற்கொண்டிருப்பார்கள் என்றும் சொல்வதற்கில்லை.

அப்படியிருக்க பலஸ்தீனத் தில் ஏற்பட்டிராத அளவுக்கு இலங்கை இறுதி யுத்தத்தில் பல்லாயிரக்கணக்கானவர்கள் கொல்லப்படக் காரணம் என்ன என்ற கேள்வி எழுகின்றது.

பலஸ்தீனத்தில் இஷ்ரேலின் தாக்குதல்களால் பல்லாயிரக்கணக்கான மக்கள் இறந்து போகாமல் ஹமாஸ் இயக்கத்தால் மக்களை எப் படிப் பாதுகாக்க முடிந்தது?

இங்குதான் ஹமாஸ் இயக்கத்துக்கும், புலிகளுக் கும் இடையில் இருக்கின்ற அடிப்படையான ஒரு குணாம்ச வித்தியாசம் தெரிய வருகிறது.

புலிகள் முதலில் கிழக்கு மாகாணத்தில் இருந்து பின்வாங்கினார்கள். பின்னர் வவுனியா, மன்னார், கிளி நொச்சி என ஒவ்வொரு இடத்திலிருந்தும் பின்வாங்கத் தொடங்கினார்கள். இந்த இடங்களில் இடம்பெற்ற மோதல்களின் போது புலிகள் முள்ளிவாய்க்காலில் செய்தது போல தமக்குப் பாதுகாப் பாகப் பொதுமக்களைப் பிடித்து வைத்திருக்கவில்லை. அதனால் பொதுமக்களுக்கு அதிக இழப்புகள் எதுவு மின்றி அந்த மோதல்கள் முடிந்தன.

ஆனால் கிளிநொச்சியில் இருந்தும் புலிகள் பின்வாங் கிய பின்னர் புலிகளுக்கு வேறு போக்கிடம் எதுவும் இருக்கவில்லை. அதனால் பிரபாகரன் உட்பட புலிகளின் தலைமை முள்ளிவாய்க்கால் என்ற குறுகிய நிலப்பரப்புக் குள் புகலிடம் தேடியதுடன், அங்கு பாதுகாப்புக்காக ஒதுங்கிய மூன்று இலட்சம் பொதுமக்களையும் தமக்குப் பாதுகாப்புக் கேடயமாகப் பிடித்து வைத்துக் கொண்டனர்.

புலிகள் அவ்வாறு பொது மக்களைப் பாதுகாப்புக் கேடயமாகப் பிடித்து வைத்திருந்ததிற்குப் பல காரணங்கள் இருந்தன.

பொதுமக்கள் மத்தியில் பதுங்கி இருக்கும் தம்மீது அரசாங்கப் படைகள் தாக்கு தல் நடாத்தப் புறப்பட்டால், அதனால் தமக்கு பாதுகாப்பு வேலியாக இருக்கும் பல்லா யிரக் கணக்கான மக்கள் மடிய வேண்டி வரும் என்ப தால், அரசாங்கம் தம்மீது தாக்குதல் நடாத்தும் எண்ணத் தைக் கைவிட்டுவிடும் என அவர்கள் நம்பினார்கள்.

அத்துடன் இப்படியான ஒரு நெருக்கடியான சூழலில் ஐ.நா.வோ அல்லது வெளி நாடுகள் சிலவோ தலையிட்டு இராணுவத்தைப் பின்வ[illegible]க வைக்கக்கூடும் எனவும் நம்பினர். (சில பலம்வாய்ந்த நாடுகள் கப்பல்களை அனுப்பி பிரபாகரனையும் இதர புலித் தலைவர்களை யும் பாதுகாப்பாக வெளி யேற்றும் என அவர்களுக்கு நம்பிக்கை அளிக்கப் பட்டிருந்ததாகவும் கூறப்படுகின்றது).

ஆனால் புலிகளின் எதிர் பார்ப்புகளை தவிடுபொடி யாக்கி விட்டு, அரச படைகள் புலிகள் மீது தமது இறுதித்

---

# கே.வி. மகாதேவன் 5

**- பி.ஜி.எஸ்.மணியன் -**



**வருடம் 1952.**

**மௌன**ப் பட காலத்திலேயே பெயரும் புகழும் பெற்றிருந்த இயக்குநர் ஆர். பத்மநாபன். பிரபல இயக்குநர் கே. சுப்பிரமணியம் அவர்களின் திரை உலகப் பிரவேசத்துக்கு காரணமானவர் இவர்.

பத்மநாபன் தயாரித்து இயக்கி 1952 இல் வெளிவந்த படம் தான் "குமாரி".

மக்கள் திலகம் எம்.ஜி.ஆரின் ஆரம்ப காலப் படங்களில் ஒன்று.

கதாநாயகனாக எம்.ஜி.ஆரும், அவருக்கு ஜோடியாக ஸ்ரீரஞ்சனியும் நடித்தனர்.

கவிஞரும், எழுத்தாளருமான கு.சா. கிருஷ்ணமூர்த்தி படத்தின் கதையையும் சில பாடல்களையும் எழுதினார். டி.கே. சுந்தர வாத்தியாரும் சில பாடல்களை எழுதினார்.

இசை அமைக்கும் வாய்ப்பு கே.வி. மகாதேவனுக்கு கிடைத்தது.

அந்த வகையில் கே.வி. மகாதேவன் இசை அமைத்த முதல் எம்.ஜி.ஆர். படம் "குமாரி"தான்.

இந்தப் படத்தில் உதவி இயக்குநராக அறிமு- கமான ஏ.சி.டி. சந்தர் அவர்கள்தான் பின்னாளில் பிரபலமான இயக்குநர் ஏ.சி. திருலோகசந்தர்.

இளவரசி ஒருத்தி தேரில் செல்லும்போது குதி ரைகள் தறிகெட்டு ஓட விபத்தை சந்திக்க நேருகிறது. அந்த விபத்திலிருந்து அவளை ஒரு சாதாரண வாலிபன் காப்பாற்றுகிறான். இருவரும் காதல் வயப்படுகின்றனர். ஆனால் மகாராணியோ தன் மகளை தனது உருப்படாத தம்பிக்கே மணமுடிக்க நினைக்கிறார். தடைகளை கடந்து காதலர்கள் கடைசியில் ஒன்று சேருகின்றனர்.

மகாராணியாக மாதுரிதேவியும் அவரது தம்பியாக டி.எஸ். துரைராஜும் நடித்தனர்.

எச்.எம்.வி. யில் இரண்டு தனிப் பாடல்களை தெலுங்கில் தானே எழுதி மெட்டமைத்துப் பாடி பிரபலமடைந்த ஒரு இருபத்து இரண்டு வயது வாலிபன் கதாநாயகன் எம்.ஜி.ஆருக்கு பின்னணி பாட ஒப்பந்தம் செய்யப்பட்டார்.

அவர் தான் ஏ.எம்.ராஜா. ஆம். ஏ.எம்.ராஜா முதல்முதலில் சினிமாவில் பாட ஒப்பந்தம் செய்யப்பட்ட படம் குமாரி.

(ஆனால் இந்தப் படம் வெளிவருவதற்கு முன்னால் ஜெமினி நிறுவனம் தயாரித்த "சம்சாரம்" படம் ஏ.எம்.ராஜா பாடிய முதல் பாடலை தாங்கி வந்து அவர் அறிமுகமான முதல் படம் என்ற பெருமையை தட்டிக்கொண்டது.)

ஏ.எம்.ராஜாவைப் பொறுத்தவரை "குமாரி" அவர் வாழ்வில் மறக்கவே முடியாத படம் என்றும் கூறலாம்.

ஏனென்றால் முதல் முதலாக ஜிக்கியுடன் இணைந்து அவர் பாடிய "இருளிலே நிலவொளி போல் அவர் வருவார்" பாடல் இந்தப் படத்தில் தான் இடம்பெற்றது.

இந்த இருவரைத் தவிர பி. லீலா, ஏ.பி. கோமளா, என்.எல். கானசரஸ்வதி ஆகியோரும் இந்தப் படத்தில் பாடி இருந்தனர்.



'குமாரி' படத்தில் எம்ஜிஆர், ஸ்ரீரஞ்சனி

ஜிக்கி பாடிய "லாலலீ லாலி" என்ற மாதுரி தேவி பாடுவதாக அமைந்த பாடல் அந்த நாளில் பிரபலமாக இருந்தது என்பதை ராண்டார் கை அவர் களின் கட்டுரை மூலம் அறிந்துகொள்ள முடிகிறது.

உண்மையில் இந்தப் பாடல் "தஸ்தான்" என்ற ஹிந்திப் படத்தில் சுவையாவும், முகமது நபியும் பாடிய பாடலின் தழுவல் மெட்டு. ஒரிஜினல் பாடலுக்கு இசை அமைத்தவர் நௌஷாத் என்ற கூடுதல் தகவலும் நமக்கு கிடைக்கிறது.

அந்தக் காலத்தில் தயாரிப்பாளர்களுக்கு இது ஒரு வழக்கமாகவே இருந்து வந்தது.

மக்களுக்கு அறிமுகமே இல்லாத புதிய மெட்டுக்களில் பாடல்களைக் கொடுத்துவிட்டு அவை மக்களைக் கவரவேண்டுமே என்று படபடப்புடன் காத்துக்கொண்டிருப்பதை விட ஏற்கெனவே மக்களுக்கு பரிச்சயமான மெட்டுக்களில் பாடல்களை அமைப்பதையே அவர்கள் விரும்பினர்.

ஆகவேதான் ஆரம்ப காலப் படங்களில் இரவல் மெட்டுக்களைத் தவிர்க்க இயலாமல் போனது.

அழியா வரம் பெற்ற இசை அரசி எம்.எஸ். அவர்களின் "காற்றினிலே வரும் கீதம்" பாடல் கூட வங்காளத்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மெட்டுத்தான்.

ஆரம்ப காலத்தில் தங்களுக்கு ஒரு நிலையான இடம் கிடைக்கும் வரை தயாரிப்பாளர்களின் விருப்பங்களுக்கு ஏற்ப இசை அமைப்பாளர்கள் வளைந்து கொடுத்தாக வேண்டிய நிர்ப்பந்தம் இருந்தது.

இந்த விதிக்கு கே.வி. மகாதேவனும் விலக்கல்ல.

ஆகவேதான் "குமாரி"யில் இரவல் மெட்டுக்களை அப்படியே பிரதி எடுத்து ஜிக்கியை மாதுரிதேவிக்காகப் பாடவைத்தார் அவர்.

"குமாரி"- வெளிவந்த வேகத்திலேயே தோல்வியைத் தழுவியது. "நல்ல நடிகர்களை வீணடித்த படம்" என்றும் "விமரிசனத்துக்கே அருகதையற்ற படம்" என்றும் பத்திரிகைகள் கடுமையாகச் சாடின.

ஆனால் கே.வி.எம். பின்னாளில் எம்.ஜி.ஆரின் பல வெற்றிப்படங்களுக்கு இசை அமைப்பாளராக பணியாற்றும் வாய்ப்புக்கு ஒரு அஸ்திவாரமாக "குமாரி" படம் அமைந்தது.

(தொடரும்)

தாக்குதலை மேற்கொண்டனர். அதுமாத்திரமின்றி, புலிகள் மீதான இறுதித் தாக்குதலை வெற்றிகரமாக நடாத்தி அவர்களை முற்றுமுழுதாக அழித்தொழிக்க வேண்டுமென்பதில் இந்தியா உட்பட சில மேற்கு நாடுகளும் அரசாங்கத்தின் பக்கம் திடமாக இருந்ததால்தான், அவர்களை காப்பாற்றுவதற்கு எவரும் முயற்சிக்கவில்லை என்ற கருத்தும் நிலவுகின்றது.

எதுஎப்படியிருந்த போதிலும், புலிகள் செய்த வேலையால், அதாவது பொது மக்களைத் தமது பாதுகாப்புக்காகப் பிடித்து வைத்திருந்ததால், அநியாயமாக ஆயிரக்கணக்கான மக்கள் மடிய வேண்டிய நிலையை அவர்கள்தான் உருவாக்கினார்கள் என்பதுதான் உண்மை. போதாதிற்கு தம்மிடம் இருந்து தப்பியோடிய பொதுமக்களைப் புலிகளும் சுட்டுக் கொன்றிருக்கிறார்கள் என்பதற்கும் ஆதாரங்கள் இருக்கின்றன.

அதாவது ஒரு விடுதலை இயக்கம் எனத் தம்மை அழைத்துக்கொண்ட புலிகள், பொதுமக்களின் பாதுகாப்பை விடத் தமது பாதுகாப்பு மேலானது என்ற எண்ணத்தில் அவர்களைப் பாதுகாப்புக் கேடயமாக வைத்திருந்தது மட்டுமின்றி, அவர்களைச் சுட்டுக் கொலை செய்தது மிகப்பெரிய மனித உரிமை மீறலிலும் ஈடுபட்டிருக்கிறார்கள்.


மாறாக, பலஸ்தீனத்தில் இஷ்ரேல் கண்மூடித்தனமாகத் தாக்குதல் நடாத்திய வேளையில் ஹமாஸ் இயக்கம் எங்குமே பலஸ்தீன மக்களைத் தனக்குப் பாதுகாப்புக் கேடயமாகப் பிடித்து வைத்திருக்கவில்லை.

அதனால்தான் ஹமாஸ் இயக்க இலக்குகளை இஷ்ரேலிய இராணுவம் குறிவைத்துத் தாக்கிய போது, பல்லாயிரக்கணக்கான பலஸ்தீன மக்கள் உயிரிழப்பிலிருந்து தப்ப முடிந்தது. இதுவே ஹமாஸ் இயக்கத்துக்கும் புலிகளுக்கும் இடையில் இருக்கின்ற அடிப்படை வித்தியாசம்.

இறுதியில் தம்மைப் பாதுகாப்பதற்காக பொதுமக்களைப் பலிகடாக்களாக்க முயன்ற புலிகள், முடிவில் பொதுமக்களையும் அழித்து, தம்மையும் அழித்துக் கொண்ட பயங்கரவாத இயக்கமொன்றின் வரலாற்றுக்கு உதாரணமாகிப் போனார்கள்.

(நன்றி: வானவில் இதழ் 44)

# வேடிக்கை பார்த்துப் பணத்தை இழந்த சந்நியாசி!



ஒரு கிராமத்தின் ஒதுக்குப்புறமாக இருந்த மடத்தில் ஒரு சந்நியாசி இருந்தார். அவர் பிச்சை எடுத்துச் சேர்த்த காசையெல்லாம் கந்தையில் முடித்துத் தன் அக்குளில் வைத்துக் கொண்டு திரிந்தார். இரவும் பகலும் அந்தக் கந்தை அவரை விட்டு நீங்காமல் இருந்தது.

சந்நியாசி பணமுடிப்பை எப்போதும் அக்குளில் வைத்துக் கொண்டு திரிவதைத் திருடன் ஒருவன் கவனித்துப் பார்த்தான். அந்தப் பணப்பையை எப்படித் திருடலாம் என்று யோசித்தான். இதற்கு அவன் ஒரு சூழ்ச்சி செய்தான். ஒருநாள் சந்நியாசியிடம் சென்று, சந்நியாசியின் கால்களில் விழுந்து வணங்கினான்.

"சுவாமிகளே! இந்த உலகமே ஒரு மாயை... காலை மலர்ந்து மாலை உதிரும் மலருக்கு ஒப்பானது. வாழ்க்கையோ காய்ந்த புல்லில் பற்றிக் கொண்ட நெருப்புப் போன்றது. வாலிபப் பருவமோ அருவியின் வேகத்தைப் போன்றது. இவை அனைத்தையும் நான் நன்றாக உணர்ந்தவன். தங்களிடம் உபதேசம் கேட்க வந்திருக்கிறேன். என்னைச் சீடனாக ஏற்றுக் கொண்டு நல்வழி காட்ட வேண்டும்!" என்று வேண்டினான்.

சந்நியாசியும் அவனைத் தன் சீடனாக ஏற்றுக் கொண்டார். அந்தத் திருடனும் மிகவும் நல்லவன் போல் சந்நியாசிக்குப் பணிவிடைகள் செய்து வந்தான்.

ஒருநாள் ஓர் அந்தணன் இவர்களுக்கு விருந்து வைத்தான். விருந்துண்டு சென்ற பிறகு, சீடன் தன் தலையில் கிடந்த ஒரு துரும்பைக் காட்டி, "சுவாமி! நமக்குச் சோறு போட்ட அந்தணன் வீட்டிலிருந்த இந்தத் துரும்பு என்னையும் அறியாமல் ஒட்டிக் கொண்டு வந்து விட்டது. உணவளித்தவன் வீட்டுப் பொருளை ஒரு துரும்பானாலும் எடுத்து வரலாமா? இதோ நான் ஓடிப்போய் இதைத் திருப்பிக் கொடுத்து விட்டு வந்து விடுகிறேன்!" என்று கூறி ஓடினான்.

சிறிது தூரம் சென்று ஒரு மறைவான இடத்தில் நெடுநேரம் உட்கார்ந்திருந்து விட்டு அவன் திரும்பி வந்தான்.

இந்நிகழ்ச்சிக்குப் பிறகு சந்நியாசிக்குத் தன் சீடன் மேல் நம்பிக்கை அதிகமானது.

ஒருநாள் சந்நியாசியும் சீடனும் ஒரு குளக்கரையை அடைந்தனர். குளத்தில் இறங்கிக் கைகால் கழுவிக் கொண்டு வருவதாக சந்நியாசி போகும் போது கரையில் இருந்த சீடனிடம் என்றும் விட்டுப் பிரியாத கந்தை முடிப்பைக் கொடுத்து, வைத்திருக்கும் படி கூறிவிட்டுப் போனார்.

சந்நியாசி கைகால் கழுவிக் கொண்டு திரும்பும் போது குளத்தின் எதிர்க்கரையில் இரண்டு செம்மறி ஆடுகள் சண்டையிட்டுக் கொண்டிருந்தன. ஆடுகள் இரண்டும் ஆங்காரத்தோடு விலகிப் பின் வாங்குவதும் மீண்டும் ஓடிவந்து ஒன்றையொன்று முட்டி மோதிக் கொள்வதுமாக இருந்தன. மண்டையில் இருந்து ரத்தம் பெருக்கெடுத்து ஓடியது.

தூரத்திலிருந்து இதைப் பார்த்துக் கொண்டிருந்த குள்ளநரி ஒன்று கீழே சொட்டும் ரத்தத்தை நக்கிச் சாப்பிட எண்ணி அங்கு வந்தது. ஆடுகள் விலகிப் பின்னடையும் போது புகுந்து ரத்தத் துளிகளை நக்கிச் சுவைத்தது. ஆடுகள் முட்டிக் கொள்ள முன்னே வரும் போது நரி தந்திரமாக பின்னே சென்று விடும். இவ்வாறு நடப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தார் சந்நியாசி.

"அடப்பாவமே! இந்தக் குள்ள நரியின் முட்டாள் தனத்தை என்னவென்று சொல்வது? ஆட்டுச் சண்டையின் மத்தியில் அது சிக்கிக் கொண்டால் நிச்சயமாக அது செத்துப்போகுமே; வேறு எதுவும் நடக்கப் போகிற மாதிரி எனக்குத் தோன்றவில்லை!" என்று எண்ணிச் சிரித்தார்.


மறுபடியும் ஆடுகள் முட்டிச் சண்டையிட நெருங்கின. ரத்தத்தைச் சுவைத்து ருசி கண்ட நரி ஆவலோடு இப்போது நெருங்கி வந்து கொண்டே இருந்தது. ஆடுகளின் மத்தியில் வசமாக மாட்டிக் கொண்ட நரி கீழே தள்ளப்பட்டு உயிரைவிட்டது. ஆட்டுச் சண்டையில் குள்ளநரி செத்தது. இந்த வேடிக்கையைப் பார்த்துக் கொண்டிருந்த சந்நியாசி தன்னை மறந்து நின்று கொண்டிருந்தார்.

இதுதான் சரியான சந்தர்ப்பம் என எண்ணிய சீடன் பணமுடிப்பை எடுத்துக் கொண்டு ஓடிவிட்டான்.

நரி சாகப்போகிறதே என நினைத்து, அதை வேடிக்கை பார்த்துக் கொண்டே தன்னுடைய பணமூட்டையை இழந்தார் அந்த சந்நியாசி.

# மிகையுணர்ச்சி, அலங்காரம் என்பவை...

- ஜெயமோகன்



புனைவுகளில் கையாளப்படும் உணர்வுநிலைகளை உணர்ச்சிகள் [emotions] சிற்றுணர்ச்சிகள் [sentiments] என பிரித்துப் பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கக் கற்றுக்கொள்வதற்குத்தான் இலக்கிய ரசனை என்று பெயர்.

சிற்றுணர்ச்சிகளை அடையாளம் கண்டுகொள்வது மிக எளிது. பெரும்பாலும் நாம் அனைவரும் அறிந்த, அன்றாட வாழ்க்கையில் சந்திக்கக்கூடிய, சம்பிரதாயமான உணர்ச்சி நிலைகளைத்தான் சிற்றுணர்ச்சிகள் என்று சொல்கிறோம். தமிழ்சினிமாக்களில் வரும் தாய்ப் பாசம், தங்கச்சிப்பாசம், தியாகம் போன்றவை சிற்றுணர்ச்சிகள்.

இலக்கியமும் தாய்மை, சகோதரத்துவம், தியாகம் போன்றவற்றைப் பற்றித்தான் பேசும். ஆனால் பேசும் முறையில் முன்பிலாத தன்மை ஒன்றைக் கொண்டிருக்கும். அவற்றினூடாக அது உணர்த்தும் தரிசனம் முற்றிலும் புதியதாக இருக்கும்.

சிற்றுணர்ச்சிகள் எப்போதும் அப்பட்டமானவையாக, நேரடியானவையாக இருக்கும். ஏனென்றால் அவை நாமறிந்த அனுபவத்தளம் சார்ந்தவை. ஆனால் இலக்கியம் கையாளும் உணர்ச்சிகள் சிக்கலானவையாக, உள்மடிப்புகள் விரிந்துகொண்டே செல்பவையாக இருக்கும். அவை சொல்வனவற்றை விட அதிகமாக குறிப்புணர்த்தப்படும்.

சுருக்கமாக இப்படிச் சொல்லலாம். சிற்றுணர்ச்சிகளில் நாம் நமது வழக்கமான உணர்ச்சிகளைக் கண்டுகொள்கிறோம். இலக்கியம் காட்டும் உணர்ச்சிகளில் நம்மை நாமே புதியதாக அடையாளம் காண்கிறோம்.

உணர்வுநிலைகள் முற்றிலும் [illegible]ாக வெளிப்படுகின்றன.

இன்னும் எளிமையாகச் சொல்லப்போனால் இலக்கியம் காட்டும் உணர்ச்சிகள் உண்மையானவை. நாம் உண்மைகளை காண்பதன் விளைவாக உருவாகக்கூடியவை. சிற்றுணர்ச்சிகள் மிகையானவை. ஆகவே பொய்யானவை.

உதாரணமாக ஒரு மரணத்தை மிகையாகச் சித்தரித்து வெறும் துயரை உருவாக்குவது சிற்றுணர்ச்சி. மரணத்தை அறியும் அனுபவத்தை நம்மில் நிகழ்த்திக்காட்டுவது இலக்கியம். முதல் உணர்ச்சி தற்காலிகமான மன எழுச்சி. இரண்டாவது ஒரு ஆழ்ந்த மனநகர்வு. இரண்டுமே "கண்ணீர் சிந்தல்" என்னும் விளைவை உருவாக்கலாம். இரண்டும் வெவ்வேறு கண்ணீர்.


ஒரு படைப்பை வாசித்து கண்ணீர் சிந்துவதென்பது ஓர் உயர்ந்த மன நிலையே. நாமறிந்த மகத்தான இலக்கிய வாசகர்கள், மேதைகள் அனைவருமே அப்படிச் செய்வதுண்டு என்பதை பதிவுசெய்திருக்கிறார்கள். அது அன்றாட வாழ்க்கையை விட்டு, அறிவின் முரட்டு இறுக்கத்தை விட்டு, அகங்காரத்தை விட்டு மனம் மேலெழுவதன் அடையாளம்.

ஒரு எளிய துயரைக் கண்டு மனம் கலங்குவதற்கும் மானுட மேன்மையை, வரலாற்றின் பெருக்கை, வாழ்க்கையின் பொருளின்மையை அறிந்து கண்ணீர் மல்குவதற்கும் வேறுபாடுண்டு. அவ்வேறுபாட்டை அறியாத ஒருவர் வாசிக்கவே ஆரம்பிக்கவில்லை.

# பூசணி மகத்துவம்!

பூசணிக்காய்க்கு ஆங்கிலத்தில் "பம்ப்கின்" (Pumkin) என்று பெயர். இதில் பொட்டாசியம், மங்கனீஸ், துத்தநாகம், கல்சியம், புரதம், இரும்புச்சத்து, செலனியம், பொஸ்பரஸ், கந்தகம், விற்றமின்கள் "ஏ", "சி", "ஈ" முதலியன அடங்கி உள்ளன.

இக்காய் உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கச் செய்து வைரஸ், பற்றீரியாக்களை அழிக்கும் ஆற்றல் உள்ளது. இதில் கணிசமான அளவு விற்றமின் "ஏ" உள்ளதால் கண் பார்வை குறைபாட்டைச் சீர்செய்வதில் முக்கிய பங்காற்றுகிறது. உடலில் சேரும் நச்சுப் பொருள்களை வெளியேற்றும் தன்மை உடையது. இது ஒரு சிறந்த மலமிளக்கி ஆகும். எலும்புகள் வளர்ச்சிக்கும், வலுப்படுத்தவும் சிறந்த இயற்கை மருந்து. இரத்தத்தில் கொழுப்பு சேர்வதைத் தடுக்கும் தன்மை உடையது.






# யார் கொலையாளி?

துப்பறியும் சிறுகதை

மதிய வெயில் சுரீரென்று காற்றை பொசுக்கிக்கொண்டிருக்க, ஈ.சி.ஆர் ரோட்டில் சற்றே தாழ உள்ளடங்கிய லக்ஸர் ரிசார்டின் வாசலில் ரோட்டோரமான ரிசார்டின் தென்னை மரங்களின் நிழலில் கிரீச்சிட்டு நின்றது அந்த பொலிஸ் ஜீப். உள்ளிருந்து விறைப்பாய் மிடுக்காய் இறங்கினார் இன்ஸ்பெக்டர் நல்லசிவம்.



"செல்வம், ஜீப்பை உள்ள போடாத. கொஞ்சம் தள்ளி போட்டுட்டு வா" திரும்பி ஜீப்பை ஓட்டிவந்த டிரைவர் செல்வத்திடம் சொல்லிக்கொண்டே அகண்ட ரிசார்ட்டின் வாசலை கவனமாக ஊடுருவ, செல்வம் அதை முன்பே எதிர்பார்த்தவனாய் ஜீப்பை சற்று தள்ளி நிறுத்த கடந்து போனான். செல்வத்துக்குத் தெரியும். நல்லசிவத்தின் வழக்கமான செய்கைகள் தான். கொலையாளி ரிசார்ட்டை விட்டு வெளியேறியிருப்பின் நடந்தோ, ஓடியோ அல்லது ஏதோவொரு வாகனத்திலோ போயிருந்தால், அந்தத் தடங்களை பொலிஸ் ஜீப்பின் டயர்கள் அழித்துவிடக்கூடாது என்ற எச்சரிக்கை உணர்வுதான் காரணம்.

> சில நேரங்களில், துப்புத் துலக்குபவரின் தீவிரத்தில், குற்றவாளிகள் மாட்டிக்கொள் ளாமல் இருக்க மேலும் மேலும் தவறு செய்வார்கள், அல்லது சாட்சிகளைக் கலைப்பார்கள்.

நல்லசிவத்துக்கு அந்த வெயிலோ, அந்த மாதிரியான ரிசார்ட்டோ, அல்லது அங்கே அவர் துப்புத்துலக்க வந்த அந்த கொலையோ எதுவுமே புதிதில்லை. அவர் சர்வீஸில் இதைப் போல எண்ணற்ற வழக்குகளைப் பார்த்திருக்கிறார், முதலில் கான்ஸ்டெபிள், அப்புறம் ஏ.எஸ்.ஐ, பிறகு எஸ்.ஐ, இப்போது இன்ஸ்பெக்டர். எந்த வழக்கையும் கண்டுபிடிக்காமல் விட்டதில்லை. அதனால் தானோ என்னவோ இந்தக் கொலையும் இவரது கையிலேயே.

அவரைப் பற்றிய சில மேல்விவரங்கள், அவருக்கு வயது முப்பத்து ஒன்பது (கவர்மென்ட் ரிகார்ட்ஸ்ல், உண்மையான வயது நாற்பது). திருமணமாகி இரண்டு பிள்ளைகள். காலேஜில் ஒரு பையனும், ப்ளஸ் ஒன்னில். ஒரு பெண்ணும். விசாலமான அறிவை புத்தகங்களை நாடி அடைந்ததாலோ அல்லது அமைதியான அழகான குடும்பப்பிண்ணனி அமைந்த காரணத்தினாலோ என்னவோ நல்லசிவம் பெயருக்கேற்றார்போல நல்லவர். பழகுவதற்கு மென்மையானவர். இந்த மென்மைத்தன்மை அவரின் தொழிலிலும் தொடர்ந்தது. துப்புத் துலக்குவதில் நல்லசிவம் அஹிம்சா பேர்வழி. அமைதியாகவே வேலை செய்வார். மிகத்தெளிவாக கேள்வி கேட்பார். இரத்தினச்சுருக்கமாக இருக்கும் அவரின் கேள்விகள். வேலை நேரத்தில் யாரிடமும் அதிகம் பேசவோ, விவாதமோ செய்யமாட்டார்.

இது ஒரு வகையில் ஒரு நல்ல ஸ்ட்ராடெஜியாகத்தான் இருந்திருக்கிறது. குற்றவாளிகளுக்கோ, குற்றவாளிகளின் கையாள் களுக்கோ அவர் குற்றவாளியை நெருங்கி விட்டாரா இல்லையா என்பது மர்மமாகவே இருக்கும். அந்த மர்மத்திலேயே அவர் தனது விசாரணையைத் தொடரு வார்.

சில நேரங்களில், துப்புத்துலக்குபவரின் தீவிரத்தில், குற்றவாளிகள் மாட்டிக்கொள்ளாமல் இருக்க மேலும் மேலும் தவறு செய்வார்கள், அல்லது சாட்சிகளைக் கலைப்பார்கள். இதனால், துப்புத் துலக்குபவருக்கு சிக்கல் அதிகரிக்கும். குற்றவாளி தப்பிவிடும் வாய்ப்புக்களும் அதிகமாகிவிடும். அதனால்தானோ என்னவோ, நல்லசிவத்தின் ஆளுமை அவராலேயே மௌனித்திருக்கும். பதுங்கும் சிறுத்தை போல. பல சமயங்களில், இவரெங்கே பிடிக்கப்போகிறார் என்பதாக நினைக்க வைக்கும். ஒரு துப்புத் துலக்குபவரின் பொதுவான குணாதிசயங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டிருக்கும் அவரின் ஒவ்வொரு அசைவும்.

நல்லசிவம் கவனித்தவரையில், ரிசார்ட்டின் மெயின் கேட்டில் ஏதொரு தடயமும் இருக்கவில்லை. அகலமான மெயின்கேட். ஈ.சி.ஆர் ரோட்டிலிருந்து சற்றே உள்ளடங்கி தாழ்வாக இருந்தது. தென்னை மரங்களின் நிழலில் அத்தனை வெம்மை தெரியவில்லை. கிராமங்களில் ஒரு தென்னந்தோப்பில் நின்று இளநீர் குடிப்பதான உணர்வுதான். ரிசார்ட் மிகக் காஸ்ட்லியானதுதான். தென்னை மரங்களின் நிழலில் இதமாக காற்று வீசுவதை முழுவதும் அனுபவிக்க விடாதபடி பகல் சூரியனும், ஒரு கொலையும் தடுத்துக்கொண்டிருந்தன மனதளவிலும். யாரோ ஒரு அரசியல்வாதியின் பினாமியின் சொத்து. அதனால் தானோ என்னவோ, உயர் அதிகாரிகளிடமிருந்து தகவல் வருவதற்கு முன்னரே அந்த அரசியலவாதியின் ஆட்களே தொடர்பு கொண்டுவிட்டார்கள். நடுத்தர குடும்பங்கள் சர்வ நிச்சயமாய் இங்கெல்லாம் எட்டிக்கூடப் பார்க்காது. நிச்சயம் பெரிய இடத்து மக்கள் தான் வருவார்கள். அப்படியானால், குற்றங்களுக்கு பஞ்சமே இருக்காது என்று நினைத்துக்கொண்டார்.




.வெள்ளை பாண்ட், உள்ளே விடபட்ட வெள்ளை சேர்ட், அதைத் தாண்டியும் பிதுங்கித் தொங்கிய தொப்பை, கறுப்பு பெல்ட், கறுப்பு 'ஷ என ஐந்தடியில், இரண்டு கைகளையும் குறுக்கே கட்டி, தோல்கள் குறுக்கி மாநிறத்தில் ஒருவர் நல்லசிவத்தை பார்த்ததும் அவரை வரவேற்கும் தோரணையில் ஓடி வந்தார். அந்தத் தோரணை, வரவேற்கும் தோரணையா, பதட்டமா, பயமா, பணிவா, தன்னடக்கமா, அல்லது வேறு ஏதாவதா என்று தோன்றும் வகைக்கும் ஒரு குழப்பமான உணர்வை வெளிக்காட்டுவதாக இருந்தது. ஓடி வருகையிலேயே விழுந்துவிடுவார் போலிருந்தது.

"யார் .·.போன் பண்ணினது?".

"சார், நாந்தான் சார். சீக்கிரம் வாங்க சார். அவனைப் புடிச்சி வச்சிருக்கோம் சார்".

"யாரை?".

"அவந்தான் சார். அந்த பொண்ணைக் கொலை பண்ணினவன". அந்த பரபரப்பான நேரத்திலும் நல்லசிவத்துக்கு லேசாக சிரிப்பு வந்தது. எல்லோரும் சி.ஐ.டி வேலை பார்க்கத்தொடங்கிவிட்டார்கள் என்று நினைத்துக்கொண்டார். "ஹ்ம்ம் நீங்க யாரு? உங்க பேரு?".

"நான் இங்க மானேஜர் சார். பிரதீபன் சார்".

"ஹ்ம்ம் பாடி எங்க?".

"வாங்க சார். காட்றேன்". கொஞ்சம் விட்டாலும் நல்லசிவத்தை நிற்க வைத்து சாஷ்டாங்கமாய்க் காலில் விழுந்துவிடுவார் போலிருந்தது. அத்தனைக் குழைந்தார் அவர். அவர் செய்கைகளைப் பார்க்கையில் ஒரு கொலை செய்யக் கூடிய ஆளாக இருப்பதாகத் தெரியவில்லை என்பதை உணர்ந்தபடியே நல்லசிவம் பின்னால் நடக்க, ரிசப்ஷனை ஒட்டிய போர்டிகோவைத் தாண்டி, இடதுபுறம் அழகாக /பென்சிங்குடன் கூடிய தோட்டத்தையும், வலதுபுறம் வரிசையாய் தங்கக்கூடிய அளவிலான ஓரடுக்கு கொண்ட தங்கும் சொகுசு அறைகளையும் கொண்ட பகுதியினூடே சிமெந்து கற்கள் பதித்த நடைபாதையில் பிரதீபன் அழைத்துச்சென்றார்.

வலதுபுறம் கீழ்த்தளத்தில் சொகுசு அறை வாசலில் /ப்ராக்கில் ஒரு பெண்பிள்ளை கையில் பந்துடன் இவரையே பார்த்து நின்றது. முதல்மாடியில் இருந்த சொகுசு அறையின் பால்கனியில் ஒருவர் இடது கையில் சீப்பை பிடித்து, தலைவாரிக்கொண்டே பார்த்துக்கொண்டிருந்தார். அவர் பார்வை, நடப்பதை ஏதோவொரு அசூசையுடன் பார்ப்பது போல் பட்டது நல்லசிவத்திற்கு. இது போல் பல சமயங்களை கடந்திருக்கிறார் அவர். சாமான்யர்களுக்கு என்றோ நடக்கும் இது போன்ற விஷயங்கள் காவல்துறையைப் பொறுத்தமட்டிலும் அன்றாட நிகழ்வுகள் தானே. போகிற போக்கில் ஏனைய அறைகளையும் ஒரு பார்வை பார்த்தார். அவைகள் காலியாகவே இருந்தன.

(தொடரும்.....)

# மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதில் முனைப்புடன் செயற்படுபவர் அமைச்சர் டக்ளஸ்

## - யாழ்.மாநகர முன்னாள் முதல்வர் தெரிவிப்பு -



யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் நலன்களுக்காகவும் மேம்பாட்டுக்காகவும் ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷவுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு அதனூடாக பலன்களை பெற்றுக் கொடுப்பதில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றார் என யாழ்.மாநகர முன்னாள் முதல்வர் திருமதி. யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏ மண்டபத்தில் அண்மையில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் ஒழுங்கமைக்கப்பட்ட யாழ்.மாவட்டத்தில் நிழல் (ஜனசெவன) திட்டத்திற்கு அமைவான உதவித் திட்டங்களை வழங்கி வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

1945ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்டதுடன், ஐந்து சபைகளையும் கொண்டமைந்துள்ளது.

அந்த ஸ்தாபனத்திற்கு ஊடாக உலகின் பல பாகங்களிலும் பல்வேறுபட்ட செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் எமது நாட்டிலும் அதனூடாக செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் குடியிருப்பு வாரத்தை முன்னிட்டு யாழ். மாவட்டத்தின் மக்களின் நிழல் (ஜனசெவன) என்ற திட்டத்தின் கீழ பத்து இலட்சம் தேசிய வீடமைப்பு மற்றும் குடியிருப்பு நடவடிக்கைக்கு அமைவாக காசோலைகள் மற்றும் காணிகளுக்கான உறுதிகளை வழங்கும் நிகழ்வு தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட எமது மக்களின் நலன்களுக்காகவும் வாழ்வாதார மேம்பாட்டுக்காகவும் ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷவுடன் நேரடியாகவும் தொலைபேசி வாயிலாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அடிக்கடி கலந்துரையாடுவதன் பயனாக பல அபிவிருத்திகள் இங்கு முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றார்.

# கிளைக் குழு உறுப்பினர்களால் தீர்மானம் நிறைவேற்றம்

மண்டான்கிளை, கரணவாய்தெற்கு கல்லுவம் கிளை முருகமூர்த்தி கிளை, கொற்றாவத்தை கிளை இமையாணன் வடக்கு கிளை ஆகிய கிளைக் குழு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மண்டான் கிளை முன்றலில் கூடி கீழ்வரும் தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது.

இதன்படி ஆறுகிளைகளையும் தன்னிச்சையாக நெறியாளர் சபையின் தீர்மானங்களுக்கு புறம்பாக மூடுவதை எதிர்ப்பதுடன் இக்கிளைக்கு அத்தியாவசிய நுகர்வுப்பொருட்களை வழங்கக் கூடாது என்று பொதுமுகாமையாளருக்கு பணித்துள்ளது கண்டனத்திற்குரியதாகும்.

இது தொடர்பாக வடபகுதியிலுள்ள கூட்டுறவுடன் தொடர்புடைய அதிகரிகளுக்கு தெரியப்படுத்தியும் அவ்வதிகாரிகளின் ஆணையை தலைவர் கருத்தில் எடுத்ததாக அவரின் நடவடிக்கையிலிருந்து தெரியவில்லை பிடிவாதமாக கிளைகளுக்கு பொருட்கள் வழங்காமல் உள்ளார். இதனால் பொதுமக்கள் பாதிப்புக்குள்ளாகின்றார்கள்.


மேலும் வடமாகாண கூட்டுறவு அமைச்சருக்கும் இது தொடர்பாக தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

கிளைகளுக்கு அத்தியாவசிய நுகர்வுப் பொருட்கள் வழங்காத நிலை தொடர்ந்தால் சாத்வீத போராட்டம் நடாத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (18)

# பொதுக்கூட்டம்

காரைநகர் சிவன்கோவில் மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு மாணிக்கவாசகர் மடாலய மண்டபத்தில் கல்விக்காருண்யன் ஈ.எஸ்.பி நாகரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

எனவே அடியார்கள் மற்றும் அங்கத்தவர்கள் அனைவரையும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டு ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்குமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.



யாழ்.மாவட்ட செயலகத்தில் செயலக நலன்புரிக்கழகத்தினால் நடாத்தப்பட்ட வாணிவிழா அண்மையில் இடம்பெற்றது. இதில் அரசஅதிபர் தலைமையில் பூசை வழிபாடுகள் இடம்பெறுவதைக் காணலாம். படம்:- ஆர்.ராஜகுமார்

# பதிவிருக்கப் பெட்டகம்

வன்முறைக் காட்சிகளை அலட்சியமாகவும் இருண்ட நகைச்சுவை நிரம்பியதாகவும் காட்டுவதன் மூலம் நாம் வன்முறைக்கான அருவருப்பை இழந்து உணர்வற்றவர்களாகி தடித்த தோல் சமூகமாய் மாறிவிட்டோம் என்று உணர்த்துவது Quentin Tarantino படங்களின் அழகியல் பாணிளு 'ஜிகர் தண்டா' படம் பல விதங்களில் டரெண்டி னோவின் பாணியை பயன்படுத்திக்கொள்கிறது. சின்ன சின்ன காட்சி விபரங்கள், வசனங்களில் குரூர நகைச்சுவை ஒருபுறம என்றால், 'ஜிகர்தண்டா' படத்தை முழுமையாக டரெண் டினோ பாணி படமாக மாற்றுவது சந்தோஷ் நாராயணின் இசையமைப்பு தான். முதல் கொலைக்காட்சிக்கு 'மலர்ந்தும் மலராத பாதி மலர் போல' என்ற சிவாஜி கணேசன் செண்டிமெண் டெல்பாட்டை இணைத்ததிலிருந்தே சந்தோஷ் நாராயணனின் ரகளை ஆரம்பித்து விடுகிறது. சேதுவை பாரின் கழிப்பறையில் வைத்து கொல்ல முயற்சி நடக்கும் போது பின்னணியில் "நம்ம ஊரு சிங்காரி" பாடல் ஒலிக்கிறது.

படத்தில் பல இடங்களில் 'அன்பே சிவம்' படத்தின் இசை பின்னணியாக ஒலித்துக்கொண்டே இருக்கிறது. மணிரத்னம் படங்களிலிருந்து குறிப்பாக 'தளபதி', 'நாயகன்' படக்காட்சிகள references ஆகவும் reversal ஆகவும் வருகின்றன.

தமிழ் சினிமா வரலாற்றில் மணிரத்னத்தின் படங்கள் பெரும் வரவேற்பினை பெற்றபின்பு அதற்கு முன் புகழ் பெற்றிருந்த பாரதிராஜா படங்களும் அவர் பாணியில் அமைந்த கிராமத்து படங்களும் ஒரம் கட்டப்பட்டன செல்வாக்கையும் புகழையும் இழந்தன. ஆகஸ்ட் 24, 2014 தி இந்து தமிழ் செய்தித்தாளில் பேட்டியளித்த பாரதிராஜாவே மணிரத்தினத்தின் வருகைக்குப் பின் தன் பாணி கிராமத்துப் படங்கள் வணிகரீதியாக வெற்றி பெறுவதற்கு வாய்ப்பில்லை என்று சொல்கிறார். மணிரத்னத்தின் படங்களை கடும் விமர்சனத்திற்கு உள்ளாக்கும் 'ஜிகர்தண்டா' பாரதிராஜா வகைப் படங்கள் ஒரங்கட்டப்பட்டதையும் அவற்றின் முக்கியத்துவத்தையும முன் நிறுத்தத் தவறவில்லை.

– எம்.டி.முத்துக்குமாரசாமி

Pictorial Represent (காட்சிரீதியான பிரதிநிதித்துவம்) என்ற மொழியைப் பிரதானமாகக் கொண்ட கலைதான் சினிமா. இதை முற்றிலும் தமிழ் சினிமா மறந்துவிட்டது என்று கூறுவது மிகையில்லை.

அன்று ஆரூர்தாஸ், கருணாநிதி போன்றோர் தாங்கள் எழுதிய ஆழமான வசனங்களின் மூலம் பெற்ற செல்வாக்கும், வசனங்களைத் தங்களுக்கே உரிய விதத்தில் பேசிய சிவாஜி, ரஜினி போன்றோரின் வெற்றிகளும் நடிகர்களையும் வசன கர்த்தாக்களையும் இயக்குநர்களையும் தவறான பாதையில் அழைத்துச் சென்றுவிட்டனவா? திரைக்கலையை வாழ்க்கையைக் கற்றுக் கொள்வதற்கும் கற்பிப்பதற்கும் ஆன ஊடகமாகப் பார்த்த மகேந்திரன், ஜெயகாந்தன், பாலு மகேந் திரா போன்றோரின் காலம மலை யேறிவிட்டது. புதிதாய் வரும படைப்பாளிகளையும் திடீர்புகழும் வணிகமும் மயக்கிவிடுகினறன. பணம் போட்டுப் படம் எடுக்கிறோம், அதைப் பல மடங்குகளாக்க நினைப்பது தவறா என்ற கேள்வி எழுவதும் நியாயமே.

சர்வதேச சினிமாவுக்கும் வணிகம் ஒரு நோக்கமாக இருக்கிறது. ஆனால் தமிழ்த் திரையுலகுக்கு அது மட்டுமே நோக்கமென்று இருப்பதுதான்வேதனையிலும்வேதனை. வணிக முனைப்புடன் செயல்படும் அதே ஹொலிவுட்டிலிருந்து சிறந்த சினிமாக்களும் உருவாக்கப்படுகின்றன. சென்ற வருடம் வெளியாகி சிறந்த படத்திற்கான ஒஸ்கார் விருதை வென்ற 12 Years a Slave திரைப்படம் கறுப்பின என்ற மக்களின் அடிமைத்தனத்தைப் பதிவுசெய்தது.

அதில் கறுப்பினப் பெண் தன் அடிமை வாழ்வில் சவுக்கால் அடிவாங்கும் உள்ளத்தை உறைய வைக்கும் காட்சி இடம்பெற்றது. அக்காட்சி அடிமைத்தனத்தை அனுபவித்திராதவருக்கும் கண்ணீரை வரவழைக்கும். இதே பின்னணியில் தமிழில் ஒரு படம் எடுக்கப்பட்டால் நாயகன் வீறு கொண்டு எழுந்து வந்து 'எவ்வளவு நாளாடா அடிச்சிட்டே இருப்பீங்க' என்று வசனம் பேசிவிட்டு முதலாளிகளைப் பறந்து பறந்து தாக்கியிருப்பார்.

வாழ்க்கை பற்றிய நமது புரிந்துணர்வைக் கூர்மைப்படுத்தும் கலை வடிவங்கள்தாம் சினிமாவும் இலக்கியமும். தமிழ் சினிமா அந்த நோக்கத்தைச் செயல்படுத்த அதிகமும் தயங்கிவருகிறது. வாழ்வின் சித்திரங்களைக் காட்சிப்படுத்தாமல், பாத்திரங்களைக் காட்சி மொழியில் வழக்காமல் வசனங்களாலேயே இயங்கிவரும் நிலையில் வாழ்க்கை பற்றிய புரிந்துணர்வு எப்படிக் கூர்மைப்படும்?

– ஜெய சரவணன

## வேலணை செட்டிபுலம் மக்களின் குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை



வேலணை பகுதிக்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் அடிப்படைத் தேவைகள் தொடர்பில் நேரில் ஆராய்ந்தறிந்து கொண்டார்.

வேலணைப் பகுதிக்கு அமைச்சர் நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்டார். இதன்போது அவர் மண்கும்பான் பகுதி மக்களுடன் கலந்துரையாடிய அம்மக்களின் தேவைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.

குறிப்பாக, மண்கும்பானிலிருந்து வெள்ளைக் கடற்கரை வரையிலான பாதையைப் புனரமைப்பது உள்ளிட்ட கோரிக்கைகளை மக்கள் முன்வைத்தனர்.

கோரிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்திய அமைச்சர் தீர்வுகளுக்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமெனத் தெரிவித்தார்.

வேலணை செட்டிபுலம் பகுதியில் குடிநீரைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு அங்கு கூடியிருந்த மக்களுடன் கலந்துரையாடிய அமைச்சர், மக்களின் தேவைப்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்தினார். இதன்போது அங்கு வாழும் 90 குடும்பங்கள் குடிநீரைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு தாம் எதிர்நோக்கி வரும் இடர்பாடுகளை அமைச்சருக்கு தெளிவுபடுத்தினர்.

இதனடிப்படையில் குடிநீரை சிரமமின்றி பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் விரைவில் முன்னெடுக்கப்படுமென அமைச்சர் தெரிவித்தார்.

## சிறுவர்களின் பொழுதுபோக்கு மையத்திற்கு விஜயம்



யாழ்ப்பாணம் பழைய பூங்கா வளாகத்தில் அமையப் பெற்றுள்ள சிறுவர்களின் பொழுதுபோக்கு மையத்திற்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் சிறுவர்களுடன் கலந்துரையாடி அவர்களை மகிழ்ச்சிப்படுத்தினார்.

சிறுவர் பொழுது போக்கு மையத்திற்கு அமைச்சர் நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்டார். சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு சிறுவர்களுக்கான பொழுது போக்கு மையத்தில் பல்வேறுபட்ட பொழுது போக்கு அம்சங்களுடன் சிறுவர்களுக்கான விளையாட்டு முற்றங்களும் தற்காலிகமாக அமைக்கப்பட்டிருந்தன.

அங்கு நின்றிருந்த சிறார்கள் பல்வேறு விளையாட்டுக்களிலும் பங்கெடுத்து குதூகலித்தனர்.

இதன்போது அங்கு சென்றிருந்த அமைச்சர் சிறுவர்களுடன் கலந்துரையாடி அவர்களை மகிழ்ச்சிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மொழியுரிமை செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய காரியாலயத்தின் ஏற்பாட்டில் நாளை மொழியுரிமை தொடர்பான ஒரு நாள் செயலமர்வு ஒன்று யாழ்.கிறீன் கிறாஸ் விடுதியில் காலை 9 மணி தொடக்கம் பிற் பகல் 3 மணி வரை நடைபெற வுள்ளது.

இலங்கை மனிதஉரிமை ஆணைக் குழுவின யாழ்.பிராந்தியக் காரியாலயம் கடந்த யூலை மாதம் 18 ஆம் திகதி ஏற்பாடு செய்திருந்த மொழியுரிமை தொடர்பான கலந்துரையாடலில் முன்வைக்கப்பட்ட முக்கிய விடயமான சிவில் சமூகப் பிரதிநிதிகளுக்கு மொழியுரிமை தொடர்பில் செயலமர்வு ஒன்று நடாத்தப்பட வேண்டும் என்பதாகும் இதற்கு அமைவாகவே மொழியுரிமை செயலமர்வு ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதாக இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ்.காரியாலய இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்துள்ளார். (பா)

## அனுமதியற்ற கட்டடங்களை இடிப்பதற்கு கால அவகாசம்

கிளிநொச்சி நகர் பகுதியில் அனுமதியின்றி அமைக்கப்பட்ட 8 வர்த்தக நிலையக் கட்டடங்களை அகற்றுவதற்காக 14 நாட்கள் காலஅவகாசம் கொடுக்கும் நீதிமன்ற அறிவித்தல் துண்டுப்பிரசுரம் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய அந்தந்த கட்டடங்களில் ஒட்டப்பட்டுள்ளதாக கரைச்சி பிரதேச சபை பொதுச்சுகாதார பரிசோதகர் பி.சிவகுமார் தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபைச் சட்டத்தின் பிரிவு 52 இன் கீழ் எந்த அனுமதியும் பெறாது கட்டப்பட்ட கட்டடங்களையும் பிரதேச சபையின் தீர்மானத்துக்கு அமைய பிரதேசச் சபை தவிசாளரது அனுமதியுடன் இடித்து அகற்ற முடியும் என கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றம் கூறியது.

அதற்கமைய, கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச சபைக்குட்பட்ட ஏ – 9 வீதியில் 15 வர்த்தக கட்டடங்கள் அனுமதி பெறாமல் கட்டப்பட்டமை அடையாளம் காணப்பட்டது.

அவற்றில் முதற்கட்டமாக 8 கட்டடங்களை இடித்து அகற்றுவதற்கான அனுமதி கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தின் மூலம் பெறப்பட்டது.

இடிப்பதற்கான நீதிமன்ற அனுமதி பெறப்பட்டு, கட்டடங்களின் உரிமையாளர்கள் 14 நாட்களுக்குள் கட்டடங்களை அகற்றுவதற்குரிய காலஅவகாசம் வழங்கும் துண்டுப்பிரசுரம் உரிய கட்டடங்களில் தற்போது ஒட்டப்பட்டுள்ளன.

காலஅவகாசத்திற்குள் அகற்றப்படாத கட்டடங்களை அகற்றுவதற்கு பிரதேச சபை நடவடிக்கை எடுக்கும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## இறம்பொடை நீர்வீழ்ச்சியில் மூழ்கி கொக்குவில் இளைஞன் மரணம்

யாழ்ப்பாணம் கொக்குவில் கிழக்கைச்சேர்ந்த 24 வயதான நாகராசா விஜலேந்திரன் என்ற இளைஞன் நுவரெலியா மாவட்டத்திலுள்ள கொத்மலை, இறம்பொடை நீர்வீழ்ச்சியில் மூழ்கி மரணமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று திங்கட்கிழமை மு.ப.11.10 இற்கு இடம்பெற்றுள்ளது. யாழ்ப்பாணத்திலுள்ள சிலருடன் இறம்பொடைக்கு சுற்றுலா வந்திருந்த நிலையிலேயே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவருடைய சடலம், கொத்மலை ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப் பட்டுள்ளது.

## 60 குடும்பங்களுக்கு அரிசி வழங்கல்


வட்டுக்கோட்டை, இந்துவாலிபர சங்கத்தால் மல்லாகம் நீதவான் நலன்புரி நிலையத்தில் வசிக்கும் 60 குடும்பங்களுக்கு தலா 10 கிலோ வீதம் அரிசி பைகள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன.

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினர் மக்களின் வாழ்வாதார விருத்திக்கு உதவிகள் வழங்கும் நடவடிக்கையின் கீழ் இந்த அரிசி பைகளை வழங்கியுள்ளனர்.

மல்லாகம் நீதவான் நலன்புரி நிலைய முன்பள்ளி மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில், வட்டு இந்துவாலிபர் சங்கத் தலைவரும சட்டத்தரணியுமான க.சுகாஸ், வட்டு மத்திய கல்லூரி அதிபர் ந.சபாரட்ணசிங்கி ஆகியோா கலந்துகொண்டு அரிசிப்பைகளை வழங்கினர்.

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கம் மக்களின் வாழ்வாதார விருத்திக்காக யாழ். மாவட்டத்தில் மட்டுமல்லாமல். கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட மக்களுக்கும் உதவிகளை புரிந்து வருகின்றனர்.





அரச வெளிக்கள அலுவலர்களுக்கு வழங்குவதற்கென யாழ்ப்பாணம் கொண்டு வரப்பட்டு துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நிறுத்திவைக்கப்பட்டுள்ள மோட்டார் சைக்கிள்களைக் காணலாம். (படங்கள்- நிருஜன்)

# க.பொ.த. (சா/த) மாதிரி வினாத்தாள்
# G.C.E. (O/L) Examination model Paper

## கணிதம்

### பகுதி I

1) கூட்டுக. $\frac{1}{7} + \frac{2}{7}$

2) 6400 ÷ 1000 சுருக்குக.

3) 6, 3, 2, 3, 7, 8 ஆகாரம் யாது?

4) $\frac{13}{100}$ தசமத்தில் தருக.

5) x + 1 = 5 தீர்க்க.

6) சுட்டி விதியைப் பயன்படுத்தி சுருக்குக $x^2 \times x^5$

7) 24 லீற்றர் எத்தனை மில்லிலீற்றர் ஆகும்.

8) சுருக்குக. 3a + 2 + 5a


9) $65^0$ நிரப்புகோணம் யாது?

10) $\varepsilon = \{1, 2, 3, 4, 5, 6, 7\}$ , $A = \{2, 6, 7\}$ எனின், தொடை $A^1$ இன் உறுப்புகளை எழுதுக.

11) ரூபா 600 இன் 8% ஐக் காண்க.

12) $110_{\text{இரண்டு}}$ பத்தின் அடியில் எழுதுக.

13)




x இன் பெறுமானம் யாது?

14) குறித்த ஒரு வேலையைச் செய்து முடிப்பதற்கு 8 மனிதர்களுக்கு 6 நாட்கள் தேவைப்பட்டது. 12 மனிதர்களுக்கு அவ்வேலையை முடிப்பதற்கு எத்தனை நாட்கள் எடுக்கும்?


15) $1 - \left[\frac{1}{2} + \frac{1}{4}\right]$ சுருக்குக.

16) ரூபா 5000 ஐ 15% எளிய வட்டிக்கு கடனாகப் பெற்ற ஒருவர் மூன்று வருடங்களின் இறுதியில் செலுத்த வேண்டிய வட்டி எவ்வளவு?

17) $\sqrt{8}$ சேடாக மாற்றி எழுதுக.

18) $3^{x-1} = 9$ தீர்க்க

19)




முக்கோணி ABC இல் $A\hat{C}B = 90^0$ ஆகும். பக்கம் AC இன் நீளத்தைக் காண்க.

20) $(a+b)^2 = a^2 + 2ab + b^2$ எனின், அதனூடாக $(x+3)^2$ இன் விரிவை எழுதுக.

21) நேர்கோட்டின் சமன்பாடு 2x - y -1 = 0 ஆகும்.
I இச்சமன்பாட்டை y = mx + c வடிவில் எழுதுக.
II இச்சமன்பாட்டின் படித்திறனை எழுதுக.

22) A இன் வயது 18 ஆகும். B இன் வயது 15 ஆகும். B, A இன் வயதுகளுக்கிடையிலான விகிதத்தை எளிய வடிவில் தருக.

23) S = a (p +2) சூத்திரத்தில் p ஐ எழுவாயாக மாற்றுக.

24) கீழே விஞ்ஞானமுறைக் குறிப்பீட்டில் தரப்பட்டுள்ள எண்ணை சாதாரண முறையில் எழுதுக.
$6.12 \times 10^2$

25) கீழுள்ள எண் பரம்பலில் முதலாம் காலணையைக் காண்க. 4, 9, 7, 10, 2, 5, 8


26) P = {a, b, c, d, e, f, g} ஆகும்.
கீழுள்ள இடைவெளிகளுக்குப் பொருத்தமான தொடை குறியீடுகளை இடுக.
i . a ........... P
ii. (a, e) ......................P

27) b= 5, c= -2 எனின், y = b-c சூத்திரத்தில் y இன் பெறுமானம் காண்க.

28) காரணிகளை வேறாக்கி எழுதுக.
a(x+y) + 2x + 2y

29) ABC ஒரு முக்கோணியாகும். இம்முக்கோணியின் மூன்று பக்கங்களுக்கும் சமதூரத்தில் அமையும் புள்ளியை அறிய வேணடியுள்ளது. ஒழுக்க பற்றிய உமது அறிவைப் பயன்படுத்தி புள்ளியைக் காணும் முறையை சுருக்கமாக எழுதுக.

30) உருவில் PQRS செவ்வகமும், QTVR சதுரமுமாகும். PTVS இன் சுற்றளவிற்கான கோவையை a,b இல் எழுதிக் காட்டுக.





### பகுதி II

1) வியாபாரி ஒருவன் தான் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு பொருளிற்கும் 15% இலாபம் வைத்து விலை குறிக்கிறான். உடனடி பணத்திற்கு விற்கும் போது 4% கழிவு கொடுக்கிறான்.

1) ரூ. 100 பெறுமதியான பொருளொன்றிற்காக வியாபாரி எதிர்பார்க்கும் இலாபம் எவ்வளவு?
2) ரூ.500 இற்கு கொள்வனவு செய்த பொருளிற்கு குறித்த விலை யாது?
3) ரூ. 3500 இற்கு கொள்வனவு செய்த பொருளை உடனடி காசுக்கு விற்கும் விலை யாது?
4) நுகர்வோர் ஒருவர் ரூ.8280 செலுத்தி கொள்வனவு செய்த பொருளின் குறித்த விலை யாது?

02) தோட்டமொன்றின் பூ பாத்தி உருவில் காட்டப்பட்டுள்ளது. அதன் நீளம் 15 m உம் அகலம் 7 m உம் ஆகும். நிழற்றபபட்ட பகுதியில் புல் வளர்க்கப்பட்டுள்ளதுடன் எஞ்சிய பகுதியில் பூ வளர்க்கப்பட்டுள்ளது. (AP =AQ =BR =BS ஆகும்)




a) QR இன் நீளத்தைக் காண்க.
b) பூ வளர்க்கப்பட்டுள்ள பகுதியின் சுற்றளவைக் காண்க.
c) புல் வளர்க்கப்பட்ட பகுதியின் பரப்பளவைக் காண்க.
d) புல் வளர்க்கப்பட்ட பகுதியில் புல் நட முன்பாக 10 cm ஆழத்திற்கு மண் அகற்றப்பட்டது எனின், அகற்றிய மண்ணின் கனவளவு யாது?

03) 6, 10, 14, x, y .......................... என்பது கூட்டல் விருத்தி ஒன்றின் முதல் 5 உறுப்புகளாகும்.

a) x, y இன் பெறுமானம் காண்க.

b) விருத்தியின் பதினைந்தாவது உறுப்பைக் காண்க.


c) முதல் 15 உறுப்புகளின் கூட்டுத்தொகையைக் காண்க.

d) 6, 18 இற்கிடையிலான கூட்டலிடைகள் 2 தருக.

**04)** a தரப்பட்டுள்ள வென் உருவில் $P\cap Q^1$ ஐ நிழற்றுக.

b) கீழுள்ள வெண் உருவை அடிப்படையாகக்கொண்டு,


1) தொடை B ஐ சொற்களில் விபரிக்குக.




2) தொடை A, B இற்கிடையிலான தொடர்பை தொடை குறிப்பீட்டில் தருக.

3) $(A\cap B^1)$ தொடையின் மூலகங்களை எழுதுக.

4) $n(B^1)$ எத்தனை?




**05)** 100 இற்கு வழங்கிய வினாப் பத்திரத்திற்கு குறிப்பிட்ட மாணவர்கள் பெற்ற புள்ளிகள் தண்டு இலை வரைபில் காட்டப்பட்டுள்ளது.

| தண்டு | இலை |
|---|---|
| 1 | 2 3 5 |
| 2 | 1 0 2 |
| 3 | 3 4 |
| 4 | 5 9 |
| 5 | 0 2 |

a) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை யாது?

b) மாணவர்கள் பெற்ற புள்ளிகளின் வீச்சு யாது?

c) மாணவர்கள் பெற்ற புள்ளிகளின் இடையைக் காண்க.

d) இக்குழுவில் ஒரு மாணவனை எழுமாறாகத் தெரிவு செய்யும் போது அவன் 50 புள்ளிகளுக்கு மேல் பெற்றவனாக இருப்பதற்கான நிகழ்தகவினைக் காண்க.

## பகுதி II B

**01)** மின்சார உபகரணமொன்று உடனடிக் காசுக்கு ரூ. 27, 250 ஆகும். அதற்கு ஆரம்பத்தில் ரூ. 3250 செலுத்தி மீதியை வட்டி உள்ளடங்கலாக சமனான 16 மாதக் கட்டணங்களாக செலுத்திப் பெறலாம். வட்டி வீதம் ஆண்டுக்கு 5% ஆகும்.

a) மீதிக் கடன் பணம் எவ்வளவு?

b) மாதாந்தம் செலுத்தப்படும் கடனின் பகுதி எவ்வளவு?

c) வட்டியுடன் தவணைக் கட்டணம் ஒன்றின் பெறுமதி எவ்வளவு?

**02)** $y= 2x^2 + 4$ எனும் சார்பினை வரைவதற்குரிய பூரணமற்ற அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

| x | -3 | -2 | -1 | 0 | 1 | 2 | 3 |
|---|---|---|---|---|---|---|---|
| y | -14 | -4 | ---- | 4 | ---- | -4 | -4 |

a) i) x = -1, x=1 ஆகும் போது y இன் பெறுமானத்தைக் காண்க.

ii) பொருத்தமான அளவீடுகளைக் கொண்டு சார்பின் வரைபை வரைபு தாளில் வரைக.

b) சார்பு நேராகும் x இன் பெறுமானவீச்சை எழுதுக.

c)

i) மேற்படி வரைபு மீது அமைந்த x ஆள்கூறுகள் y ஆள்கூறுகளிலும் இருமடங்காகும். புள்ளியைக் காண்பதற்கு தேவைப்படும் ஏகபரிமாண வரைபின் சமன்பாட்டினை எழுதுக.

ii) ஏகபரிமாண வரைபை மேற்படி ஆள்கூற்றுதளத்தில் வரைக.

iii) அப்புள்ளிகளின் ஆள்கூறுகளை எழுதுக.

**03)** i) தீர்க்க $3a - 4b = 10$
$2a - 3b = 7$

ii) $A = \begin{pmatrix} 1 & 0 & 2 \\ 2 & 1 & 4 \\ 0 & 2 & 1 \end{pmatrix}$ உம் $3A + B = \begin{pmatrix} 2 & 1 & 7 \\ 7 & 3 & 0 \\ 2 & 7 & 2 \end{pmatrix}$ எனின்,


B தாயத்தைக் காண்க.

**04)** a) தீர்க்க $2x + 1 = \frac{6}{x}$

b) பகுதியையும் தொகுதியையும் எழுதுக.

$(2x^2 + x + 3) \div (x + 2)$

**05)** a) பூமிக்கு 50 m உயரத்தில் S புள்ளியிலிருந்து பார்க்கும் போது P, Q புள்ளிகளின் இறக்கக் கோணம் முறையே $18^0$ உம் $12^0$ உம் ஆகும். திரிகோண கணித விகிதங்களையும் மடக்கை அட்டவணையையும் பாவித்து PQ இன் தூரத்தைக் கணிக்க.




b) புவியின் மீது அமைந்த X, Y, Z புள்ளிகளின் அமைவு பின்வருமாறு ஆகும்.


A இற்கு வடக்கில் B அமைந்துள்ளது.

B இலிருந்து C இன் திசைகோள் $220^0$ ஆகும்.

AB = AC ஆகும்.

A இலிருந்து C இன் திசைகோளைக் காண்க.

**06)** கேத்திர கணித உருக்களைப் பயன்படுத்தி செய்த உரு கீழே காட்டப்பட்டுள்ளது. அது O ஐ மையமாகக் கொண்ட இரு ஆரைச் சிறைகளையும் POQ செங்கோண முக்கோணியையும், ABCD செவ்வகத்தினையும் உடையது.




i) $\sqrt{2} = 1.41$ எனக் கொண்டு PQ இன் நீளத்தைக் காண்க.

ii) இவ்வுரு கம்பிகளால் செய்யப்பட்டிருப்பின் தேவைப்பட்ட கம்பியின் நீளத்தைக் காண்க.

iii) இவ்வுருவினால் உள்ளடக்கப்படும் பரப்பளவைக் காண்க.

**07)**

a) கிணறு தோண்டும் ஒருவர் முதல் மீற்றருக்கு ரூ. 350, இரண்டாவது மீற்றருக்கு ரூ. 700, மூன்றாவது மீற்றருக்கு ரூ. 1400 என அறவிடுகின்றார். குறித்த ஒரு கிணறைத் தோண்டியதற்காக அவருக்கு கிடைத்த கூலி ரூ. 22,050 ஆகும். கிணற்றின் ஆழத்தைக் காண்க.

b) மடக்கை அட்டவணையை உபயோகித்து பெறுமானம் காண்க.

$$\frac{6.071 \times 1.25^2}{\sqrt{0.072}}$$

**08)**

cm / mm அளவிடை, கவராயம் மாத்திரம் பயன்படுத்தி

a) AB =7cm, $A\hat{B}C = 60^0$, $B\hat{A}D = 75^0$ உடைய $\Delta$ ABD அமைக்க.

b)i) BAD இன் இருசமகூறாக்கியை வரைக

ii) BC =7 cm ஆகுமாறு நாற்பக்கல் ABCD ஐ பூரணப்படுத்துக.

c) i) C ஊடாக DB இற்கு சமாந்தரம் ஒன்றை அமைக்க. அதனை நீட்டும் போது அது AB ஐ சந்திக்கும் புள்ளியை P என பெயரிடுக.

ii) ADP $\Delta$ உம் நாற்பக்கல் ABCD உம் பரப்பளவில் சமனாகும் எனக் காட்டுக.

**09)**

தொடர்பாடல் நிலையமொன்றில் குறிப்பிட்ட கால எல்லையினுள் கிடைத்த இலாபம் கீழே தரப்பட்டுள்ளது.

| வருமானம் (ரூ) | 360 | 380 | 400 | 420 | 440 | 460 | 480 | ,500 |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாட்களின் எ.கை | 02 | 06 | 10 | 12 | 13 | 09 | 05 | 03 |


a) மேற்படி தரவுகளின்

i) ஆகாரம்

ii) இடைக்கோணம் என்பவற்றை காண்க.

c) மேற்படி கால எல்லையினுள் எழுமாறாகத் தெரிவு செய்த நாள் ஒன்று ரூ. 400 இற்கு மேல் வருமானம் கிடைக்கும் நாளாக இருப்பதற்கான நிகழ்தகவினைக் காண்க.

**10)** உருவில் காட்டப்பட்டிருக்கும் வட்டத்தின் மையம் O ஆகும்.




i) இங்குள்ள வட்ட நாற்பக்கல் இரண்டினைப் பெயரிடுக.

ii) ABD, AED இற்கிடையிலான தொடர்பை எழுதுக. காரணம் குறிப்பிடுக.

iii) DEF இற்கு சமனான கோணங்கள் இரண்டு எழுதுக.

iv) $A\hat{C}D = 70^0$ எனின், AOD இன் பெறுமானம் காண்க.

v) ABD = DEF என முறையாக நிறுவுக.






யாழ்.பிரிட்டிஸ் பிஸ்னஸ் கல்லூரியின் ஆசிரிய தின விழா நேற்று கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முன்பள்ளி சிறார்கள் ஆசிரியர்களை கௌரவிப்பதையும், மாணவி கே.சிவனுகாயினி ஆசிரியர் தின கவிதை வாசிப்பதையும் காணலாம்.
(படங்கள்-பா.பார்த்தீபன்)

# கல்விக்காக ஏங்கும் மாணவர்களுக்கு சேவையாற்றுவதே மகத்தானது

## ஆசிரியர்களுக்கு சந்திரகுமார் எம்.பி.பாராட்டு



(கிளிநொச்சி)

ஆசிரியர் தினத்தை கொண்டாடும் அனைத்து ஆசிரியர்களும் கல்விக்கான உன்னத பணியோடு இணைந்திருக் கும் நாம் எமது ஆசிரியர்தின வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர்களின் சேவை மிகவும் போற்றத்தக்கது அதிலும் கல்விக்காக ஏங்கிக்கொண்டிருக்கும் பின்தங்கிய பகுதி மாணவர்களுக்கு சேவையாற்றும்போதே ஆசிரியர் சேவை மேலும் மகத்துவம் அடைகின்றது. என நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கிளி. விவேகானந்தா வித்தியாலயத்தில் நடைபெற்ற ஆசிரியர் தின விழாவில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு ஆசிரியர்களை வாழ்த்தி உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்.

ஆரம்பத்தில் மக்களின் கோரிக்கைக்கு அமைவாக நாம் அம்பாள்குளத்தில் விவேகானந்தா வித்தியாலயத்தை நிறுவினோம் இன்று இவ்வித்தியாலயம் அனைத்து துறைகளிலும மேம்பட்ட ஒரு வித்தியாலயமாக உயர்ந்து நிற்பதை எண்ணி நாம் பெருமை அடைகின்றோம்.

இப்பாடசாலையின் அதீத வளர்ச்சிப் போக்கு காரணமாக ஏனை பாடசாலைகள் மத்தியில்லும் முன்னேற்றங்களைநோக்கி பயணிக்க வேண்டும் என்ற போட்டிநிலைமை இம்மாவட்டத்தில் உருவாக்கப்பட்டிருக்கின்றது. அது மட்டுமன்றி இப்பாடசாலையின் வளர்ச்சி இம் மாவட்டத்தில் உள்ள ஏனைய பாடசாலைகளின் வளர்ச்சிக்கு ஒரு உந்து சக்தியகா அமைந்துள்ளது என்றார்.

சர்வதேச ஆசிரியர் தின விழா கிளிநொச்சி விவேகானந்தா வித்தியாலயத்தில் இன்று நேற்று முன்தினம் மு.ப 10.30 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

வித்தியாலய மாணவர்களினால் ஆசிரியர்கள், முதன்மை, சிறப்பு மற்றும் கௌரவ அதிதிகள் தமிழ் இன்னிசை வாத்திய இசை அணிவகுப்புடன் நிகழ்வின் பிரதான மண்டபத்திற்கு அழைத துவரப்பட்டதையடுத்து, நிகழ்வுகள் ஆரம்ப மாகின.

இந்நிகழ்வில் வடக்கு மாகாணசபையின் உறுப்பினர் வை.தவநாதனும் கலந்து கொண்டு ஆசிரியர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்தார் அத்தோடு கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் கிருஸ்ண சாமி கிளிநொச்சி கல்விவலத்தின் தமிழ்பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி மதுர நாயகம் மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர் பெற்றோர்கள் மாணவர்கள் எனப்பலரும் கலந்துகொண்டு நிகழ்வை சிறப்பித்தனர்.

# வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா இன்று

(அச்சுவேலி)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலய தேர்த்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.15 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நாளை 8 ஆம் திகதி புதன் கிழமை மாலை 5 மணிக்கு சமுத்திரத் திருவிழாவும் நாளை மறுதினம் 9 ஆம் திகதி வியாழக்கிழமை பட்டுத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெற்று மாலை 6 மணிக்கு கொடி இறக்கத்துடன் வருடாந்த பெருந்திருவிழா இனிதே நிறைவுபெறவுள்ளது.

அத்துடன் இத்திருவிழாக் காலத்தில் ஆழ்வார் ஆலயத்தைச் சுற்றியுள்ள அன்னதான மடங்களில் அன்னதானம் வழங்கலும் இடம்பெறவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஆலயத்திற்குச் செல்வதற்காக பருத்தித்துறை இ.போ.ச மற்றும் வடமராட்சி தனியார் பேருந்து சங்கம் என்பன குடாநாட்டின் எல்லாப் பகுதிகளுக்குமான விசேட பேருந்துச் சேவையினையும் ஒழுங்கு செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(85)

# மன்னார் பூநகரி வீதியின் புனரமைப்பு பணிகள் ஆரம்பம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட பூநகரி சங்குப்பிட்டி பிரதான வீதி புனரமைக்கப்பட்டு வருகின்றது.

மேற்படி சங்குப்பிட்டி பூநகரிக்கான சுமார் 5 கிலோ மீற்றர் வீதி திருத்தப்பட்டு வருவதால் இனி வருங்காலத்தில் மக்கள் இலகுவாக பயணத்தை மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும் என தெரிவிக்கப்படுகிறது.

ஏ.32 பிரதான வீதியின் சங்குப்பிட்டி பாலத்திற்கான வீதி பெரும் சிரமத்தின் மத்தியில் அகலிப்பு செய்யப்பட்டு வருவதால் மக்கள் தங்கள் மன மகிழ்ச்சியை தெரிவித்தனர்.

மன்னார் தொடக்கம் யாழ்ப்பாணத்திற்கான ஏ-32 வீதி காப்பெற் வீதியாக புனரமைக்கும் பணிகள் இந்தியன் நிதியுதவியில் கிளிநொச்சி வீதி அபிவிருத்திச் சபையின் பங்களிப்புடன் நடைபெற்று வருகின்றன.

நீண்டகாலமாக இவ்வீதி புனரமைப்பு இல்லாமல் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்கி வந்த நிலையில் தற்போது. இவ்வீதி புனரமைக்கப்படுகிறது சிறந்தததென என பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

(140)

# நீர்வேலி வடக்கில் சமூக அபிவிருத்திக்குழு

(நீர்வேலி)

நீர்வேலி வடக்கு கிராம அலுவலர் பிரிவில் சமூக அபிவிருத்திக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

வலி.கிழக்கு பிரதேச சபை தனது எல்லைப் பரப்பில் செய்யப்படவேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் சம்பந்தமாக மக்களின் பங்கேற்புடன் செயற்றிட்டத்தின் முன்மொழிவுகளைப் பெற்று வருகின்றது.

அந்த வகையில் நீர்வேலி வடக்கு கிராம அலுவலர் பிரிவுக்கான சமூக அபிவிருத்திக் குழு கடந்த சனிக்கிழமை நீர்வேலி றோ.க.த.க. பாடசாலை மண்டபத்தில் தெரிவு செய்யப்பட்டது.

இதில் தலைவராக த.பரராச சிங்க. , உப தலைவராக சு.சுப்பிரமணியம், செயலாளராக வே.மகேந்திரன் மேலும் நால்வர் கொண்ட குழு தெரிவு செய்யப் பட்டது.

பிரதேச சபைத் தலைவர் க.துரைசிங்கம், நீர்வேலி உப அலுவலக பொறுப்பதிகாரி சி.தவராசா சமூக அபிவிருத்திக்குழு உத்தியோகத்தர் சி.தவநாயகம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# ‘கருவி’ சமூக வள நிலையத்தால் மாணவர் - திறந்த பிரிவுகளில் போட்டிகள்

சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு கருவி மாற்றுத்திறனாளி சமூக வள நிலையம் மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் இடையே கவிதை, கட்டுரை, சிறுகதை மற்றும் ஓவியப் போட்டிகளை நடாத்தவுள்ளது.

**போட்டி நிபந்தனைகளாக கட்டுரைப்போட்டியில் மாணவர்களுக்கான தலைப்புகளாக**

மாற்றுத்திறனாளிகள் மீதான சமூகப்பார்வை, மாறறுத்திறனாளிகளின் மேம்பாட்டில் கல்வியின் முக்கியத்துவம், தாங்கள் அறிந்த மாற்றுத்திறனாளி ஒருவரின் வாழ்வியல் வரலாறு.

தரம் 6 -9 200 தொடக்கம் 300 சொற்கள். தரம் 10 -13 400 தொடக்கம் 500 சொற்கள்

**பொதுமக்களுக்கான தலைப்புகளாக**

உலகப்புகழ்பெற்ற ஒரு மாற்றுத்திறனாளியின் சரிதம், மாற்றுத் திறனாளிகளின் உரிமைகளும் கடமைகளும், இலக்கியங்களில் மாற்றுத்திறனாளிகள் - சொற்கள் 700 தொடக்கம் 1000.

**கவிதைப் போட்டியில் மாணவர்கள் மற்றும் பொது மக்களுக்கான தலைப்புக்கள்**

மாற்றுத்திறனாளிகளின் வாழ்வி யலை சித்தரிப்பனவாய் இருத்தல் வேண்டும், மரபுக் கவிதையாகவோ அல்லது புதுக கவிதையாகவோ இருத்தல் வேண்டும்,

கவிதைகள் 24 வரிகளுக்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.

**சிறுகதைப்போட்டியில்**

மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்கான தலைப்புக்களாக மாற்றுத்திறனாளிகளுடன் தொடர்புடைய கருப்பொருளை உள் ஈர்த்து இருத்தல் வேண்டும்.

சொற்கள் - மாணவர்கள் தரம் 6 -9 200 தொடக்கம் 300 சொற்கள், தரம் 10 -13 400 தொடக்கம் 500 சொற்கள். பொதுமக்கள் 500 தொடக்கம் 750 சொற்கள்.

**ஓவியப்போட்டியின தலைப்பு**

மாற்றுத்திறனாளிகள் வாழ்வை சித்தரிப்பனவாய் அமைதல் வேண்டும்.

ஓவியங்கள் ஏ-3 தாளில் வரைதல் வேண்டும். போட்டியாளர்கள் ஆக்கங்களை கணனியில் தட்டச்சு செய்தோ அல்லது தெளிவான கையெழுத்தினால் எழுதியோ அனுப்பலாம்.

போட்டியாளரின் முழுப் பெயர் முகவரி, தொலைபேசி இலக்கம் மாணவர்களாயின் பாடசாலையின் பெயர் என்பவனவற்றை ஆக்கத்துடன் தெளிவாக இணைத்து அனுப்புதல் வேண்டும்.

மாணவர்களது ஆக்கங்கள் பாடசாலை அதிபரினாலும்; பொதுமக்களினது ஆக்கங்கள் சமாதான நீதவான் அல்லது கிராம அலுவலராலோ உறுதிப்படுத்தப்பட வேண்டும். ஆக்கங்களை எதிர்வரும் 11 ஆம் திகதிக்கு முன்னர் கருவி, மாற்றுத்திறனாளிகள் சமூக வள நிலையம், அருளம்பலம் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஜெயலலிதாவின் விடுதலைக்காக தொண்டர்கள் இரத்தக்கையெழுத்து



ஜெயலலிதாவின் விடுதலைக்காக அமைச்சர்கள் முதல் தொண்டர்கள் வரை இரத்தக் கையெழுத்து, தீச்சட்டி என கடவுளை வலம் வந்து கொண்டிருக்கிறார்கள்.

ஜெயலலிதாவின் விடுதலையை வலியுறுத்தி மேற்கு மாம்பலத்தில் சட்டமன்ற உறுப்பினர் கலைராஜன் தலைமையில் அதிமுகவினர் இரத்த கையெழுத்து இயக்கம் நடத்தினர்.

2500 இற்கும் மேற்பட்ட தொண்டர்கள் தங்கள் இரத்தத்தினால் கையெழுத்துப்போட்டு குடியரசுத் தலைவருக்கும், ஆளுநருக்கும் மனு அனுப்பியுள்ளனர்.


கழக இலக்கிய அணிசார்பில் அரசினர் தோட்டத்தில் உள்ள அரச மரத்தடி விநாயகர் கோவிலில் சிறப்பு யாகம் நடத்தப்பட்டது.

சைதாப்பேட்டை இளங்காளியம்மன் கோவிலில் அமைச்சர் பா.வளர்மதி தீச்சட்டி ஏந்தினார். அவருடன் 500 தொண டர்களும் தீச்சட்டி எடுத்து கோவிலை வலம் வந்தனர்.

அம்மனுக்கு சிறப்பு வழிபாடுகள் நடாத்தி ஜெயலலிதா பெயரில் அர்ச்சனை செய்து உடனடியாக விடுதலை பெற வேண்டி கூட்டு பிரார்த்தனையும் செய்தனர். இதில் மேயர் சைதை துரைசாமி, மாவட்ட செயலாளர் விருகை ரவி, கவுன்சிலர் பாபு உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# எல்லையில் அத்துமீறுவதை பாகிஸ்தான் நிறுத்த வேண்டும்

## ராஜ்நாத் சிங் எச்சரிக்கை



இந்திய எல்லையில் அத்துமீறுவதை பாகிஸ்தான் நிறுத்திக் கொள்ள வேண்டும் என மத்திய உள் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் எச்சரிக்கை விடுத்துள்ளார்

இந்திய எல்லையில் அர்னியா, ஆர்.எஸ்.புரா பகுதியில் பாகிஸ்தான் இராணுவம் நடத்திய தாக்குதலில் இரண்டு பெண்கள் உட்பட 5 பேர் பலியாகினர், 25 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

இதற்கிடையில் டில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்: "எல்லையில் அத்துமீறுவதை பாகிஸ்தான் நிறுத்திக் கொள்ள வேண்டும். இந்தியாவில் இப்போது அரசியல் நிலைமை மாறிவிட்டது என்பதை பாகிஸ்தான் புரிந்துகொள்ள வேண்டும்.

எல்லையில் பாகிஸ்தான் இராணுவத் தாக்குதலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பணிகளை அரசு முடுக்கிவிட்டுள்ளது. ஜம்மு-காஷ்மீர் எல்லை நிலவரத்தை அரசு தொடர்ந்து கூர்ந்து கவனித்து வருகிறது" என்றார்.

# ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு கனடாவும் எதிர்ப்புத்தெரிவிப்பு

ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகளுக்கு எதிராக வான்வழி தாக்குதல்களை நடத்த கனடாவும் முன்வந்துள்ளது. ஐ.எஸ். ஐ.எஸ் அமைப்பை ஒழிக்க பிரித்தானியா அமெரிக்கா, பிரான்ஸ் உள்ளிட்ட பல சர்வதேச நாடுகள வான்வழித் தாக்குதல்களை நடத்தி வருகிறன.

இந்நிலையில் கனடாவும் வான்வழி தாக்குதல்களை நேச நாடுகளுடன் இணைந்து நடத்த முன்வந்துள்ளதாக நேற்று முன்தினம் அந்நாட்டின் நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து பிரதமர் ஸ்டீபன் ஹாப்பர் கூறுகையில், ஈராக்கில் இஸ்லாமிய போராளிகளுக்கு எதிரான நட வடிக்கைகளில் 69 கனேடிய ஆலோசகர்களின் உதவியை வழங்க கனடா ஏற்கனவே முன் வந்துள்ளது என்றும் நிச்சயம் ஐ.எஸ்.ஐ.எஸ் வெறியாட்டத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வரும் எனவும் தெரிவித்துள்ளார்.

## உலகச் செய்திகள்

# வடகொரியா அதிபரின் உடல் நிலையில் தளர்வு



வட கொரியாவின் இளம் அதிபர் கிம் ஜோங உன், உடல் நிலை மிகவும் மோசமாக இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. ஆனால், அந்த தகவலை, அந்நாட்டு அரசு மறுக்கிறது.

ஜப்பான் கடல் பகுதியில் அமைந்துள்ள வட கொரியா மற்றும் தென் கொரியா நாடுகளுக்கு இடையே நீண்ட காலமாக மோதல் நிலவி வருகிறது. இளம் அதிபர், கிம் ஜோங் உன தலைமையிலான வட கொரியாவில் இராணுவப் புரட்சி நடைபெறுவதாகவும், அதிபர் உடல் நிலை சரியில்லாமல் போனதை அடுத்து அங்கு உள்நாட்டு குழப்பம் நடைபெறுவதாகவும், தென் கொரியாவில் இருந்து வரும் தகவல்கள் தெரிவித்தன.

# ஆளில்லா ஆயுதப் படகு உருவாக்கியது அமெரிக்கா



அமெரிக்கக் கடற்படை உருவாக்கிய ஆளில்லா ஆயுதப் படகுகளின் சோதனையில் பயன்படுத்தப்பட்ட பிரதான படகு. ஆயுதங்களைத் தாங்கிச் செல்லும் திறனுள்ள ஆளில்லாப் படகை அமெரிக்கக் கடற்படை உருவாக்கியுள்ளது. அமெரிக்கக் கடற்படையின் ஆராய்ச்சிப் பிரிவுத் தலைவர் ரியர் அட்மிரல் மாத்யூ கிளண்டர் இது தொடர்பாக நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்,

நீண்டகால ஆராய்ச்சிக்குப் பிறகு, ஆளில்லா ஆயுதப் படகுத் தொழில்நுட்பம் உருவாக்கப்பட்டுள்ளது. இதனை உருவாக்க குறைந்த செலவே ஆகும். தனித்து அல்லது ஒன்றிணைந்து, தமது ஆயுதங்களைப் பயன்படுத்தும் திறன் இவற்றுக்கு உள்ளது. இதற்கான ஆணையை தொலைவிலிருந்து ஒரு கடற்படை அதிகாரி கொடுக்க முடியும். இந்த வகையில் ஆளில்லா ஆயுதப் படகுகள் குழாமானது எதிரிக் கப்பலைத் தாக்கி அழிக்க வல்லது. அதே சமயம், அமெரிக்க போர்க்கப்பலுக்கு எதிரிகளிடமிருந்து பாதுகாப்பு அளிக்கும் விதமாகவும் இந்த ஆளில்லா ஆயுதப் படகுக் குழாமைச் செலுத்தலாம் என்றார்.

# கடலுக்கு அடியில் விரிவுரை முயற்சியில் இரு அமெரிக்கர்கள்



(மியாமி)

அமெரிக்காவை சேர்ந்த 2 பேராசிரியர்கள் கடலுக்கு அடியில் 73 நாட்கள் தங்கியிருந்து, மாணவர்களுக்கு இணையத் தளம் மூலம் பாடம் நடாத்த முன்வந்துள்ளனர்.

அவர்கள் புளோரிடாவில் கடலுக்கு அடியில் உள்ள ஆய்வு மையத்தில் இருந்தபடியே பாடம் நடத்தவுள்ளனர்.

அமெரிக்காவின் தென் கிழக்கு புளோரிடா மாநிலத்தில் உள்ள டென்சி நகரில் ரோனே மாநில சமுதாய கல்லூரி மிகவும் பிரபலமானது.

இங்கு ப்ரூஸ் கான்ட்ரல் (63) மற்றும் ஜெசிக்கா பைன் (25) ஆகிய 2 பேராசிரியர்கள் பணியாற்றுகின்றனர்.

காரே லார்கோ பகுதியில் உள்ள கடலுக்கு அடியில் ஜூலிஸ் கடல் ஆய்வு மையத்தில் இவர்கள இருவரும் கடல் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கடல் பாதுகாப்பு மற்றும் ஆய்வு தொடர்பான யு டியூப் இணையதளம் மூலம் ஆராய்ச்சி மாணவர்களுக்கு எதிர்வரும் டிசம்பர் 25 ஆம் திகதி வரை வீடியோ மூலம் பாடம் நடாத்துகின்றனர்.

தற்போது கான்ட்ரலும் ஜெசிக்காவும் கடலுக்கு அடியில் 73 நாட்கள் தங்கியிருந்து ஆய்வு பணிகளை மேற்கொள்ளும் செயல் ரிச்சர்ட்டின் சாதனையை முறியடித்து, கின்னஸ் சாதனையில் இடம்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

# பூமியில் 11.7 கோடி ஏரிகள்

## சுவீடன் விஞ்ஞானி கண்டுபிடிப்பு

பூமியில் உள்ள ஏரிகளின் எண்ணிக்கை 11.7 கோடி என சுவீடனைச் சேர்ந்த பல்கலைக்கழகம் நடத்திய ஆய்விலிருந்து தெரிய வந்துள்ளது.

சுவீடனின் உமேயா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சுற்றுச்சூழலியல் விஞ்ஞானி டேவிட் ஸீகெல், உலகிலுள்ள ஏரிகளின் எண்ணிக்கை குறித்து வேறு சில ஆராய்ச்சியாளர்களுடன் நடத்திய ஆய்வு முடிவுகள் ஜியோ.ஃபிஸிகல் ரிஸர்ச் லெட்டர்ஸ் எனும் புவியியல் ஆய்வேட்டில் வெளியிடப்பட்டுள்ளன. அதில் தெரிவித்துளள விவரம்,

பூமியில் உள்ள ஏரிகளின் எண்ணிக்கை 11.7 கோடி எனத் தெரிய வந்துள்ளது. அனைத்து ஏரிகளின் மொத்த பரப்பளவு 50 இலட்சம் சதுர கிலோ மீற்றராகும். இவை பூமியில் 3.7 சதவீத இடத்தைப் பிடித்துள்ளன. ஒன்பது கோடி ஏரிகள் அரை ஏக்கர் முதல் இரண்டரை ஏக்கர் வரை பரப்புள்ளவை. செயற்கைக்கோள் மூலமாகப் பெறப்பட்ட படங்களை சூப்பர் கணனி கொண்டு ஆய்வு செய்து இந்த விவ ரங்கள் பெறப்பட்டுள்ளன.

# எபோலா நோய்த்தாக்கம் இங்கிலாந்திலும் பரவும் அபாயம்

பிரான்ஸ் மற்றும் இங்கிலாந்தில் எபோலா நோய் இந்த மாத இறுதிக்குள் பரவும் வாய்ப்பு உள்ளதாக எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. அதேநேரத்தில் பெல்ஜியம், ஸ்பெயின் மற்றும் சுவிட்சர்லாந்து உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளுக்கும் பரவும் அபாயமுள்ளது.

மேற்கு ஆபிரிக்க நாடுகளான கினியா, சியாரா லியோன், லைபீரியா மற்றும் நைஜீரியா நாடுகளில் "எபோலா" வைரஸ் என்ற உயிர்க்கொல்லி நோய் கடுமையாக பரவி வருகிறது. இங்கு எபோலா நோய்க்கு இதுவரை 3500 பேர் பலியாகியுள்ளனர்.

இலட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நோய்க்கு மருந்து கண்டு பிடிக்கப்படாததால் பேரழிவு நோய் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொற்று நோய் என்பதால் பல நாடுகள் லைபீரியா, சியாரா லியோன் உள்ளிட்ட நாடுகளுக்கு விமான போக்குவரத்தை இரத்துச் செய்து விட்டன. இந்தியா உள்ளிட்ட அனைத்து நாடுகளும் விமான நிலையங்களில் சுகாதார பணியாளர்களை நியமித்து ஆபிரிக்கா நாட்டு பயணிகளுக்கு "எபோலா" நோய் பரிசோதனை நடத்துகின்றன.

இதற்கிடையே எபோலா நோய் பிரான்ஸ் மற்றும் இங்கிலாந்திலும் பரவும் அபாயம் இருப்பதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். குறிப்பாக பிரான்ஸ் நாட்டில் அதிவேகமாக பரவும் வாய்ப்பு இருப்பதாக கருதப்படுகிறது.

# இழுவைப் படகு தொழிலுக்கு தடை; மாற்றுத்தொழில் கோரி போராட்டம்

## மாகாண அமைச்சுக்கு எதிராக கோஷம் வல்வெட்டித்துறை மீனவர்கள் களத்தில்



தங்களின் இழுவைப்படகு தொழிலுக்கு தடை விதித்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் மாற்றுத் தொழில் நடவடிக்கையை ஏற்படுத்தித் தருமாறு கோரியும் யாழ். வல்வெட்டித்துறை கிழக்குப் பகுதியிலுள்ள இழுவைப்படகு மீனவர்கள் நேற்று உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இழுவைப்படகு மீன்பிடியில் ஈடுபட்ட 23 மீனவர்களுடன் அவர்களின் குடும்பத்தவர்களும் இணைந்து ரேவடி கடற்கரை விநாயகர் கோவில் முன்றலில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இழுவைப்படகு மீன்பிடி முறை மூலம் கடல்வளம் அழிக்கப்படுவதால், இம்முறையில் மீன்பிடிப்பதற்கு மத்திய கடற்றொழில் நீரியல்வளத்துறை அமைச்சால் தடை விதிக்கப்பட்டது. இதற்கமைய, வடமாகாண மீன்பிடி அமைச்சு மேற்படி மீனவர்களின் இழுவைப்படகு மீன்பிடிக்கு தடை விதித்தது.

இதனால், தாங்கள் தொழில் வாய்ப்பை இழந்துள்ளதாகவும் தங்களின் பிள்ளைகள் கல்வி கற்க முடியாதுள்ளதாகவும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள் தெரிவித்தனர்.

உண்ணாவிரதப் போராட்டத்தை ஏற்பாடு செய்த வல்வெட்டித்துறை கிழக்கு கிராமிய கடற்றொழில் சங்கத் தலைவர் சி.சிவகணேஸ் தெரிவிக்கையில்,

இழுவைப்படகுகளை தடை செய்த வடமாகாண மீன்பிடி அமைச்சு, எமது வாழ்வாதார நலன்கருதி மாற்று வழிகளை ஏற்படுத்தித் தரவேண்டும். மாற்று வழிகள் இல்லாமல், எங்களின் வாழ்வாதாரத்தை கொண்டு செல்ல முடியாத நிலையில் இருக்கின்றோம்.

எமக்கு சரியான தீர்வு கிடைக்காத பட்சத்தில் எதிர்வரும் 9 ஆம் திகதி மீண்டுமொரு போராட்டத்தை மேற்கொள்வோம் எனக் கூறினார்.

இது தொடர்பில் வடமாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவிக்கையில்,

வடமாகாண எல்லைக்குட்பட்ட கடற்பரப்பில் சட்டவிரோதமாக கடற்றொழில் செய்வதற்கு எவருக்கும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

இங்கு 16 ஆயிரம் கடற்றொழில் செய்யும் குடும்பங்கள் உள்ளன. அதிக வசதிகளின்றி அவர்கள் கடற்றொழிலை வாழ்வாதாரமாக கொண்டு வாழ்கின்றார்கள்.

23 இழுவைப்படகு தொழிலாளர்களுக்கு அனுமதி கொடுத்து, 16 ஆயிரம் கடற்றொழில் செய்யும் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் செயற்பாட்டுக்கு இடமளிக்கமாட்டோம்.

இது சட்டவிரோதமான செயல். மேற்படி மீனவர்கள் இது தொடர்பாக என்னிடம் கூறியபொழுது, சட்டத்துக்கு முரணான எந்தத் தொழில் செய்வதற்கும் அனுமதி இல்லை என்று கூறியுள்ளேன்.

எந்த இனத்தவராக இருந்தாலும், இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு எந்த அனுமதியும் வழங்கப்படமாட்டது எனத் தெரிவித்தார்.

# ஓய்வூதியர்களுக்கு "உபஹார" கடன் திட்டம்

அரச ஓய்வூதியம் பெறுவோருக்காக "உபஹார" என்ற பெயரில் புதிய கடன் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார, அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தலைமையில் கொழும்பு கிங்ஸ்பரி ஹோட்டலில் இது தொடர்பான வைபவம் நடைபெற்றது.

அமைச்சர் இரு பயனாளிகளுக்கு இக்கடன்களை வழங்கினார். சனச அபிவிருத்தி வங்கி இக்கடன் உதவியை ஆரம்பித்துள்ளது.

கடந்த 17 ஆண்டுகளாக இந்த வங்கி உள்ளூர் கிராமியப் பொருளாதாரத்தில் பெரும் பங்களிப்பு நல்கி வந்துள்ளது. வறுமை ஒழிப்பிலும் பங்கேற்றுள்ளது.

இக்கடன் உதவி மூலம் விவசாயம், கால்நடை, கடற்றொழில், தொழில்நுட்பம், மனை சார்ந்த கைத்தொழில்களுக்காக சுய தொழில் வாய்ப்பாகவும் தனிப்பட்ட தேவைகளுக்காகவும் ஒரு மில்லியன் ரூபாவை வயது வித்தியாசமின்றி கடனாகப் பெறலாம். ஒரு இலட்சம் ரூபா கடனுக்கான மாதாந்த தவணைக் கட்டணம் 1609 ரூபாவாகும்.

இக்கடன் தொகை விதவையர் இளைப்பாற்றுச் சம்பளம் பெறுவோரைப் போன்று வலது குறைந்த படைவீரர்களுக்கும் அமுலாகும்.

## யுத்தப்...

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட 100 இடங்களை புனரமைப்புச் செய்யும் பணி ஏற்கனவே தொடங்கப்பட்டு விட்டதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அமைச்சர் சந்திரசிறி கஜதீரவின் கண்காணிப்பில் மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள் ஊடாக இத்திட்டம் செயற்படுத்தப்படுவதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

## உறவுகளை...

ளையும் வெளியிடவில்லை என வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது. அமெரிக்கா இலங்கை தொடர்பான நிலைப்பாட்டை மென்மையாக்கியுள்ளதாக ஊடகங்களில் அண்மையில் தகவல் வெளியிடப்பட்டிருந்தது. அவ்வாறு நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் ஏற்ப்டுத்தப்படவில்லை என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களும் உத்தியோகபூர்வமாக அறிவித்திருந்தது.

ஜனாதிபதிக்கும் கெரிக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்புக் குறித்த ஊகங்களின் அடிப்படையில் சில ஊடகங்கள் தகவல் வெளியிட்டிருந்ததாகவும் அவை அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ அறிக்கையல்ல எனவும் வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

எவ்வாறெனினும், அமெரிக்காவுடன் தொடர்ச்சியாக இவ்வாறான உயர்மட்டப் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தும் நடத்தப்படும் என அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

## யாழ். குடாவில்...

செயலகத்தால் தரப்பட்ட தகவல்களின் அடிப்படையில் அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்திருந்தோம்.

அதனடிப்படையில் எமக்கு தற்போது 30 மில்லியன் ரூபா கிடைக்கப் பெற்றுள்ள நிலையில் இந்நிதியினைக் கொண்டு திட்டங்கள் முன்னுரிமையடிப்படையில் முன்னெடுக்கப்படும் வகையில் அவற்றை மீளவும் மீளாய்வு செய்து இறுதி அறிக்கையினை தமக்கு சமர்ப்பிக்குமாறும் அமைச்சர் துறைசார்ந்தோரை கேட்டுக் கொண்டார்.

இதேபோன்று மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பில் முன்னெடுக்கப்பட்டு வரும் ஏனைய செயற்திட்டங்கள் குறித்த திட்ட அறிக்கைகள் ஆராயப்பட வேண்டியதன் அவசியத்தையும் அமைச்சர் இதன்போது வலியுறுத்தினார்.

அத்துடன், சுன்னாகத்தில் நிலத்தடி நீர் மாசடைவது தொடர்பிலும் இதில் விசேட கவனம் செலுத்தப்பட்டு விரிவாக ஆராயப்பட்டது.

சமுர்த்தி உதவித் திட்டம், உதவுக் கரங்கள் கடன் திட்டம், காணிப் பங்கீடு உள்ளிட்ட முக்கிய விடயங்கள் குறித்து அமைச்சர் துறைசார்ந்தோரிடம் கேட்டறிந்து கொண்டார்.

இதனிடையே ஈ.பி.டி.பியின் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம் பிரதேச செயலர் பிரிவுகள் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் வேலைத் திட்டங்களை துரிதப்படுத்துமாறும் பிரதேச செயலர்களுக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்தார்.

இதன்போது மாவட்டத்தின் ஏனைய அபிவிருத்தி செயற்றிட்டங்கள் குறித்தும் இக்கலந்துரையாடலில் அவதானம் செலுத்தப்பட்டது.

இதில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், பிரதேச செயலர்கள், அமைச்சரின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் குகேந்திரன், அமைச்சரின் தொகுதி இணைப்பாளர்கள், அமைச்சரின் இணைப்புச் செயலாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

## 180 பேருக்கு ஆபத்து

இலங்கையின் தெற்கு கடற்பிராந்தியத்தில் ஏற்பட்ட புயலில் 31 படகுகளில் சென்ற 180 இற்கும் அதிகமான மீனவர்கள் சிக்கியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. குறித்த பிரதேசத்தில் கடல் கொந்தளிப்புடன் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கோபியின்...

செல்லவிருந்தார்.

சுவிட்ஸர்லாந்துக்கு செல்வதற்கான விசாவை அவர் வைத்திருந்தபோதும் அவரது கணவர் தொடர்பில் விசாரணைகள் இடம்பெறுவதனால் அவருக்கு பயணத்தடை விதிக்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமைச்சர் சந்திரசிறி கஜதீரவின் கண்காணிப்பில் மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள் ஊடாக இத்திட்டம் செயற்படுத்தப்படுவதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

## துவாரகேஸ்வரன்...

செய்யப்பட்டிருந்தார்.

யாழ்ப்பாணம் - கொழும்பு தனியார் பேருந்து சேவையில் ஈடுபடும் பேருந்தின் வழித்தடத்தினை பொலிஸார் பார்வையிட்ட போது, ஏற்பட்ட தகராற்றில், பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டின் பேரில் இவர் யாழ். பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

கைதுசெய்யப்பட்ட இவரை நேற்று யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதியின் வாசஸ்தலத்தில் ஆஜர்படுத்திய போது, யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி ஒரு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதியளித்ததுடன், எதிர்வரும் 21 ஆம் திகதி வழக்கினை ஒத்திவைத்தார். (25)

## எதிரும் புதிருமான...

மக்கள் முன்னணியினரும் ஆதரவு தெரிவித்ததுடன், அதன் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன், வடமாகாணசபை உறுப்பினர்களான கஜதீபன், அனந்தி சசிதரன் உள்ளிட்டவர்களும் கலந்துகொண்டனர்.

சுமார் அரைமணி நேரத்தின் பின்னர் போராட்டம் 2.30 மணிக்கு நிறைவடைந்தது. இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் யோசப் ஸ்ராலின் மற்றும் சங்கத்தின் முக்கியஸ்தர்கள் பலரும் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

இதேவேளை இந்த ஆர்ப்பாட்டத்தை குழப்பும் வகையில் 4 பேர் கொண்ட குழுவொன்று சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை சிறிது நேரம் நடாத்திவிட்டு அங்கிருந்து அகன்று சென்றது.

இதனைவிட இலங்கை ஆசிரியர் சங்கம் நேற்று யாழ். பேருந்து நிலையத்திற்கு முன்பாக மேற்கொண்ட ஆர்ப்பாட்டப் போராட்டத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

நேற்று பி.ப. 2.00 மணிக்கு இலங்கை ஆசிரியர் சங்கத்தினரின் போராட்டம் ஆரம்பித்து சிறிது நேரத்தில் இந்த ஆர்ப்பாட்டங்களுக்கு எதிராக வைத்தியசாலை வீதியில் மறுபுறத்தில் ஆசிரியர்கள் இறைவனுக்கு சமமானவர்கள் அவர்களை வீதியில் இறக்கி அல்லல் படுத்தாதீர்கள், தலைவர்கள் ஆசிரியர்களை நடு வழியில் கைவிட்டு விடுவார்கள் போன்ற சில கோஷங்களை ஏந்தியவாறு சிலர் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். சிறிது நேர போராட்டத்தின் பின்னர் அவர்கள் அங்கிருந்து மறைந்தனர். (பா,25)

## கூட்டமைப்பை...

செய்யும் நிகழ்வு. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நீர்வேலி பணிமனையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார் சுரேஷ்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்ற கூட்டத்தில் நீங்கள் கூட்டமைப்பு சார்பாக தெரிவு செய்யப்பட்டுள்ளீர்கள் நீங்கள் எந்தக் கட்சிகள் சார்ந்தும் கருத்துக்களை வெளியிடக்கூடாது. கூட்டமைப்பென்பது நான்கைந்து கட்சிகள் சேர்ந்த கூட்டு. நீங்கள் நீதிபதியாக இருந்தவர் நடுநிலை தவறாது எல்லோரையும் இணைத்து செயற்பட வேண்டுமென வவுனியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் வடமாகாண சபை முதலமைச்சரிடம் கேட்டிருந்தார்

அதற்குப் பதிலளித்த முதலமைச்சர் தான் ஆயுதம் தரித்திருந்த அமைப்புகளுடன் சேர்ந்து வேலை செய்ய முடியாதென தெரிவித்திருந்தார். அதற்கு நான் சொன்ன பதில் உங்களை முதலமைச்சர் வேட்பாளராக நியமிக்க முன்னர் நாங்கள் அனைவரும் உங்கள் வீட்டுக்கு வந்தோம். நீங்கள் சொன்னீர்கள் கூட்டமைப்பில் உள்ள எல்லோரும் ஏற்றுக்கொண்டால் தான் வருவீர்களென்று. இதை நீங்கள் அப்போது சொல்லியிருக்க வேண்டும். ஆகவே இப்போது நீங்கள் அப்படி பேசுவது பிழையான விடயம் என்றேன்.

அது மாத்திரமல்லாமல் நீங்கள் தேர்தல் காலத்தில் பிரபாகரன் போராட்ட வீரன் என்றெல்லாம் சொன்னீர்கள். இப்போது இப்படி கதைப்பது தவறு. பல்லாயிரக்கணக்கான இளைஞர், யுவதிகள் தங்கள் உயிரைத்தியாகம் செய்ததை முக்கியத்துவப்படுத்தாவிட்டாலும் கொச்சைப்படுத்தக்கூடாது. இவை தான் நான் அவருக்கு சொன்ன பதில்.

இங்கிலாந்தில் வழங்கிய ஒரு செவ்வியில் கூட்டமைப்பு பதியப்படத் தேவையில்லையென மாவை சேனாதிராசா தெரிவித்திருந்தார். இது முற்றிலும் தவறான நிலைப்பாடாகும்.

இதில் முக்கியமான விடயம் என்னவென்றால் நாங்கள் எங்கள் கட்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. கூட்டமைப்பை ஒரு கட்சியாக வைத்திருக்கவேண்டும் என்பதையே விரும்புகின்றோம். இது தொடர்பாக அழுத்தம் கொடுக்க வேண்டியவர்கள் பொது மக்களாகவே இருக்கின்றார்கள். இது வெறும் நாடாளுமன்ற உறுப்பினர்களோ, மாகாணசபை உறுப்பினர்களோ எடுக்கின்ற விடயமல்ல. தந்தை செல்வா காலத்தில் தொடக்கி வைக்கப்பட்ட தமிழரின் உரிமைப் போராட்டம் என்பது இன்னும் முடியவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

# அதிவேக சேவையில் தேசிய அடையாள அட்டை

(கொழும்பு)

தேசிய அடையாள அட்டையை மூன்று தினங்களுக்குள் விநியோகிப்பதற்கு ஆட்பதிவுத் திணைக்களம் விசேட வேலைத் திட்டமொன்றை முன்னெடுத்துள்ளதாக அறிவித்துள்ளது.

அடையாள அட்டைக்குரிய விண்ணப்பப் படிவங்களை பிழையின்றி நிரப்பி அனுப்பும் விண்ணப்பதாரர்கள் இந்த சலுகையைப் பெற்றுக்கொள்வார்கள் என தேசிய ஆட்பதிவுத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சரத் குமார தெரிவித்தார்.

# பயணி ஒருவர் காயம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை வழித்தடத்தினூடாக பயணித்த பஸ்ஸிலிருந்து அவசரமாக இறங்கிய ஒருவர் தவறி வீழ்ந்து காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று திங்கட்கிழமை பிற்பகல் பருத்தித்துறை மெத்தைகடையடிச் சந்தியில் இடம்பெற்றது. அன்னலட்சுமி கிருஷ்ணபிள்ளை (வயது 68) என்பவரே காயமடைந்தவராவார்.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இவர், மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

# நாடு தழுவிய ரீதியில் முழு அளவிலான ரயில்வே ஊழியர்கள் பகிஷ்கரிப்பு

## பயணிகள் போக்குவரத்து ஸ்தம்பிக்கும் அபாயம்

நாடு தழுவிய ரீதியில் மூவாயிரம் ரயில்வே ஊழியர்கள் இணைந்து எதிர்வரும் 9 ஆம் திகதி முழு அளவிலான பகிஷ்கரிப்பு போராட்டத்தில் குதிக்கவுள்ளனர்.

சம்பள அதிகரிப்பில் நீண்டகாலமாக மாற்றம் செய்யப்படாத நிலை மற்றும் சம்பள அதிகரிப்பினை வலியுறுத்தி இப் பகிஷ்கரிப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட உள்ளது.

இவ்வாறு ரயில்வே இணைந்த ஊழியர் சங்க இணைப்பாளர் ஜானக பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். நாடு தழுவிய ரீதியில் முன்னெடுக்கவுள்ள பகிஷ்கரிப்பு போராட்டம் தொடர்பாக சங்கத்தின் இணைப்பளர் ஜானக பெர்ணாண்டோ மேலும் தெரிவிக்கையில்,

மூன்று வருடங்களாக சம்பள அதிகரிப்பில் மாற்றம் கொண்டு வருவது தொடர்பில் போக்குவரத்து அமைச்சில் பேசியிருந்தோம். இதனை விட ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவிடமும் பல சுற்று பேச்சுக்களை நடத்தியிருந்தோம்.

இதற்கு மேலாக சம்பளங்கள் மற்றும் ஆளணி ஆணைக் குழுவிடமும் பேசியிருந்தும் இதுவரை முழுமையான பயன் ஏதும் கிட்டவில்லை.

இதனால் முதற்கட்டமாக 3000 இரயில்வே ஊழியர்கள் உள்ளடங்கலாக இயந்திர சாரதிகள், இரயில்வே கட்டுப்பாட்டாளர்கள், ரயில்வே பாதுகாவலர்கள் நிலைய அதிகாரிகள் மற்றும் ஊழியர்களை முழுமையாக இணைத்த வகையில் எதிர்வரும் 9 ஆம் திகதி பகிஷ்கிப்பு போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம்.

இதில் எமது கோரிக்கையாதெனில் ஊழியர்களின் அடிப்படை வேதனம் 16 ஆயிரத்து 350 ரூபாவாக இருப்பதுடன், ஏனைய சமனான படிகளை உள்ளடக்கியதான வேதன அளவுத்திட்டத்தை முன்வைக்கவேண்டும்.

கடந்த காலங்களில் போக்குவரத்து அமைச்சின் செயலாளரினால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் எதுவும் இதுவரை நிறைவெய்தவில்லை. இந்நிலையில் போக்குவரத்து அமைச்சரின் உறுதியான பதில் கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் என அறிவித்துள்ளனர்.

# இராஜதந்திர சேவையை ரவுடித்தனம் பாதிக்கக்கூடாது

## தமரா குணநாயகம் கோரிக்கை

இலங்கை இராஜதந்திரிகளின் ரவுடித்தனமான செயற்பாடுகள் இலங்கை மற்றும் அதன் அரசாங்கத்தின் அடிப்படை குணாதிசயங்கள் குறித்து கேள்விகளை எழுப்புவதாக அமைந்துள்ளது என ஜெனிவாவிற்கான முன்னாள் தூதுவர் தமரா குணநாயகம் தெரிவித்துள்ளார்.

இவ்வாறன நிலையில் ரவுடித்தனத்தால் நாடு அவமானப் படுத்தப்படுவதை தடுப்பதற்கு, இராஜதந்திர சேவையை அது பாதிக்காமலும் நாடாளுமன்றமும், கட்சிகளும், மக்களும் முன்வரவேண்டும் என ஜெனிவாவிற்கான முன்னாள் தூதுவர் தமரா குணநாயகம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டின் இறைமையையும், சுதந்திரத்தையும், கௌரவத்தையும் காப்பாற்ற இது அவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

டெயிலி மிரர் செய்தி தாளுக்கு கருத்துத் தெரிவித்துள்ள அவர், 2009 இல் ஜெனிவாவில் ஆரம்பமான சம்பவங்கள் தொடர்கின்றன. அதே வில்லன்கள் அதை முன்னெடுக்கின்றனர். 2011.12 இலும் ஜெனிவாவில் இவை இடம்பெற்றன. பாரிசிலும், ரோமிலும் கூட இவை இடம்பெற்றன.

இலங்கையின் பிரதிநிதித்துவத்தை இல்லாமல் செய்வதற்கு அவர்கள் கூட்டாக இணைந்து தங்களுக்கு விருப்பமில்லாதவர்களை தொல்லைப் படுத்தும் தந்திரோபாயத்தை கையாண்டனர். தற்போது உடல் ரீதியான தாக்குதல்களில் இறங்கியுள்ளனர்.

இந்த உயர் இராஜதந்திரிகள் தங்களுடை நடவடிக்கைகளை தண்டனையின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்ட நிலையில் தொடர்கின்றனர். அவர்களுக்கு உயர்மட்ட ஆதரவும், பதவி உயர்வுகளும், பணமும் தாராளமாக கிடைக்கின்றது.

அவர்கள் செயற்படும் முறை மாறியிருக்கலாம், ஆனால் அவர்களுடைய நோக்கம் மாறவில்லை என குறிப்பிட்டுள்ளார்.

# மருத்துவத்திற்கான நோபல் பரிசு மூன்று நரம்பியல் வல்லுநர்களுக்கு

(கொழும்பு)

மருத்துவத்துறைக்கான இந்த ஆண்டின் நோபல் பரிசு, மூன்று நரம்பியல் வல்லுநர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஜோன் ஓ கீப், மே பிரிட் மோசர் மற்றும் எட்வேர்ட் மோசர ஆகியோர், தனிநபர்களின் இருப்பிடத்தைப் புரிந்து கொண்டு அதற்கேற்ற வகையில் நகர்வுகளைச் செய்யக் காரணமான மூளைச் செல்களின் கட்டமைப்பைக் கண்டறிந்துள்ள்தற்காக இந்தப் பரிசு வழங்கப்படுவதாகப் பரிசுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

ஒவ்வொரு தனிநபரும் தமது இருப்பிடத்தை புரிந்துகொண்டு, சிக்கலான ஒரு சூழலில் எவ்வாறு நகர்வுகளை மேற்கொள்கிறார்கள் என்பதை மூளையிலுள்ள அந்த செல்களே முடிவு செய்கின்றன என்று இந்த ஆய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

ஜோன் ஓ கீப் ஒரு பிரிட்டிஷ் - அமெரிக்க ஆராய்ச்சியாளர். மோசர் தம்பதியினர் நோர்வேயைச் சேர்ந்தவர்கள். அல்சைமர் என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் மூளை அழுகல் நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் ஏன் தமது சுற்றுச்சூழலை உணர்ந்து கொள்ள முடியவில்லை என்பதை இவர்களது ஆராய்ச்சியின் மூலம் புரிந்து கொள்ள வழி ஏற்படும்.

பல ஆண்டுகளாக தத்துவ அறிஞர்களையும், விஞ்ஞானிகளையும் சிந்திக்க வைத்த ஒரு கேள்விக்கு இவர்களது இந்தக் கண்டுபிடிப்பு விடையளித்துள்ளது என்று நோபல் சபை தெரிவித்துள்ளது.

# பல்கலைக்கழகத்தை திறக்கக்கோரி போராட்டம்

## சப்ரகமுவவில் நேற்று

தற்காலிகமாக மூடப்பட்டுள்ள சப்ரகமுவ பல்கலைக்கழகத்தை மீள திறக்குமாறு வலியுறுத்தி மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று பம்பேஹின்ன சந்தியில் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டனர். எனினும் மாணவர்கள் விடுதிகளில் இருந்து வெளியேறும் வரையில் பல்கலைக்கழகத்தை திறப்பது தொடர்பில் தம்மால் தீர்மானிக்க முடியாது என பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் ஷந்தன உடவத்த தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகத்தின் மாணவிகள் சிலர் ஆண் மாணவர்கள் தங்கும் சிங்கராஜ விடுதிக்குள் அத்துமீறி நுழைந்தமை காரணமாக பல்கலைக்கழகம் நேற்று முன்தினம் அவசரமாக மூடப்பட்டது.

மாணவிகளுக்கான புதிய விடுதி உயர்கல்வியமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கவினால் நேற்று முன்தினம் திறக்கப்படவிருந்த நிலையில், விடுதி கட்டடம் தரமற்ற வகையில் இருப்பதாகத் தெரிவித்து பல்கலைக் கழகத்திற்குச் செல்லும் பம்பேஹின்ன சந்தியில் மாணவர்கள் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டனர்.

இதன்போது மாணவர்கள் அமைச்சரின் வாகனம் பயணிப்பதற்கு இடையூறு விளைவித்த நிலையில், பொலிஸார் தண்ணீர் பிரயோகம் மேற் கொண்டு மாணவர்களை விரட்டியடித்தனர்.

இதனைத் தொடர்ந்து அமைச்சர் புதிய கட்டடத்தை திறந்து வைத்ததுடன், மற்றுமொரு கட்டடத்திற்கான அடிக் கல்லையும் நாட்டிச்சென்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஓய்வூதியக் கொடுப்பனவில் முரண்பாடு நீக்குமாறு கோரி போராட்டம்

அரச ஓய்வுதியம் பெறுபவர்களின் சம்பள முரண்பாடுகளைத் தீர்த்துத் தருமாறு அரசாங்கத்தை வற்புறுத்தி காலி நகர் பஸ்தரிப்பு நிலையத்திற்கு முன்பாக நேற்றுக் காலை ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

ஓய்வுதியம் பெறுபவர்களின் பல்வேறு சம்பள முரண்பாடுகள் தீர்க்கப்படாதிருப்பதாக தெரிவித்த இவ் ஆர்ப்பாட்டக் காரர்கள், மகிந்த சிந்தனையில் நிறைவேற்றுவதாக வாக்களிக் கப்பட்ட எதுவும் இதுவரை நிறைவேற்றப்படவில்லையெனவும் குற்றஞ்சாட்டினர்.

அடுத்த தேர்தலுக்கு முன்னர் சம்பள முரண்பாடுகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கா திருப்பின் 25 இலட்சம் ஓய்வுதியர்களின் வாக்குகள் குறித்து தீர்மானிக்க வேண்டி வரும் எனவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர்.

# தென்கொரியா சென்ற இலங்கை வீரர்கள் மாயம்

7 ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டியில் பங்கேற்பதற்காக தென் கொரியாவுக்கு சென்றிருந்த இலங்கை அணியின் வீரர்களில் இருவர் நாடுதிரும்பவில்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஹொக்கி அணியின் பிரசன்ன திசநாயக்க மற்றும் கடற்கரை கரப்பந்து வீரர் ஆகியோரைக் காணவில்லை என்றும், அவர்கள் தென்கொரியாவிலேயே தலைமறைவாகியிருக்கலாம் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதில் காணாமற்போன கடற்கரை கரப்பந்து வீரரை உடனடியாக அடையாளம் காணமுடியவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# தேசிய வீடமைப்புக்கொள்கை புதிய பிரகடனம் ஜனாதிபதியிடம்



உலக குடியிருப்பு தின தேசிய மாநாடு கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் நேற்று நடைபெற்றது.

வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் விமல் வீரவன்ச தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரதம அதிதியாக் கலந்துகொண்டார்.

இதன்போது தேசிய வீடமைப்பின் கொள்கைப் பிரகடனத்தை அமைச்சர் விமல் வீரவன்ச ஜனாதிபதியிடம் கையளித்தார்.

அத்துடன் உலக குடியிருப்பு தினம் பற்றி பாடசாலை மாணவர்களுக்கிடையில் மும்மொழிகளிலும் நடாத்திய போட்டிகளில் வெற்றிபெற்ற முதலாம் இடத்தைப் பெற்ற மாணவர்களுக்கு ஜனதிபதியால் விருதுகளும் பணப்பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 ஒக்ரோபர் 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.